1-15 செப்டம்பர் 2001 www.padippakam.com ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



## ஜெயாவிடம் விலைபோகும் நீதித்துறை

## தமிழகத்தை ஆளும் புதிய கூட்டணி



படிப்பகம்



# தோழர் நல்லுவின் நினைவை நெஞ்சில் ஏந்துவோம்!

ரசிய புரட்சிக்கு முந்தைய கால கட்டத்தில் ஜாரின் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தோழர் பாபுஷ்கின் போன்ற எண்ணற்ற இளைஞர்களைப் பற்றி லெனின் இவ்வாறு எழுதினார்.

''உண்மையான மக்கள் வீரர்கள் இருக்கிறார்கள். பாபுஷ்கின் போன்றவர்கள் இவர்கள். புரட்சிக்கு ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டுகள் அல்ல, முழுமையாக பத்து ஆண்டுகள் முன்னரே தொழிலாளி வர்க்கத்தை விடுவிப்பதற்கான போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் இவர்கள். தனி மனிதர்களின் பயனற்ற நடவடிக்கைகளில் தங்களை வீணடித்துக் கொள்ளாமல், பாட்டாளி மக்கள் திரளினிடையே விடாப்பிடியாக, இடைவிடாமல் செயலாற்றி, அவர்களது உணர்வையும், அவர்களது ஒழுங்கமைப்பையும், சுதந்திரமாகப் புரட்சி செயல்புரியும் அவர்களது திறனையும் வளர்க்க உதவியவர்கள் இவர்கள்.''

தோழர் பாபுஷ்கின் போன்ற மக்கள் வீரர்கள் பாட்டாளி வர்க்க விடுதலைக்காக போராடும் எல்லா நாடுகளிலும் உருவாகத்தான் செய்கிறார்கள். தன் குடும்பம், தன் பிள்ளை, தன் வாழ்க்கை என்ற குறுகிய வட்டத்துக்குள்ளேயே, சமூக அக்கறையோ, பொறுப்போ இல்லாமல் வளைய வரும் பல ஆயிரம் இளைஞர்கள் மத்தியில் இத்தோழர்கள் கலங்கரை விளக்காக ஒளி வீசுகின்றனர். அந்த வரிசையில் ஒருவராகத் திகழ்கிறார் தோழர் நல்லு.

கடந்த 15.08.2001 அன்று உசிலம்பட்டி வட்டம் ஆரியப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த தோழர் நல்லு சாலை விபத்தில் பலியானார்.

அப்பகுதியில் ஏற்கனவே சி.பி.எம்-இல் இருந்த தோழர் நல்லு உட்பட பலரும் 70-களின் இறுதியில் நக்சல்பாரிகளின் மக்கள் திரள் வழி என்ற விவாதத்தில் கலந்து கொண்டனர். இந்த விவாதம் கண்மாய், சாலையோர மர நிழலிலும், சுடுகாட்டு மைதானத்திலும், இரவு நில வொளியிலும் நடைபெற்றது. சிலர் அப்போது இக்குழுவினருக்கு சுடுகாட்டுக் கட்சி என்றே பெயர் வைத்தார்கள். அக்குழு மக்கள் மத்தியில் தங்களை நற்பணி மன்றமாக அறிவித்து செயல்பட ஆரம்பித்தது. தாழ்த்தப்பட்ட மக்களிடம் வரவேற்பை பெற்றதால் பள்ளர், பறையர் கட்சி என்றும் வேறு சிலர் பெயர் சூட்டினார்கள். அப்போது விவசாயிகளுக்கான கொள்கை அறிக்கையை விவசாயிகள் விடுதலை முன்னணி வெளியிட்டது.

உசிலை வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி அமைப்பின் தொடக்க காலந் தொட்டு இன்று வரை கடந்த 25 ஆண்டுகளாக உணர்வுபூர்வமாக செயல்பட்டவர் தோழர் நல்லு. அமைப்பின் முழக்கங்களை இவர் கை தொட்டு எழுதாத சுவர்களே இல்லையெனச் சொல்லலாம். தனி மனிதராக கடும் வெயிலிலும் கருவேலங்குச்சியைப் பல்லில் கடித்து தூரிகையாக்கிக் கொண்டு, குறைந்த விலையில் வாங்கிய காவியையும், புகை கரியையும் தண்ணீரில் கலந்து அவர் எழுதிய வாசகங்கள் மக்கள் மத்தியில் என்றும் நிலைத்திருக்கும்.

தோழர் நல்லு ஆரம்ப காலங்களில் ஒரு நாளைக்கு முப்பது கிலோ மீட்டர் வரை மிதிவண்டியில் சென்று பிரச்சாரம் செய்வார். அறிமுகம் இல்லாத பகுதிகளில் கூட அரசியல் பேசி பட்டினியும், பழைய கஞ்சியுமாக வைராக்கியமாக செயல்படுவார். தன் கஞ்சித் தேவைக்காக தாழ்த்தப்பட்ட மக்களையும், குடிசை வீடுகளையுமே தேர்ந்தெடுத்தார். அப்போது ஊருக்குள் சிலர், பிழைக்கத் தெரியாதவன் நல்லு என்றும், இளங்கலை பட்டப் படிப்பு படித்தும் பைத்தியக்காரனாகி விட்டான் என்றும், நல்ல விவசாயக் குடும்பத்தில் பிறந்து தன் வாழ்க்கையையே கெடுத்துக் கொண்டான் என்றும் கேலி பேசினர். கேலி பேசுபவர்களிடம் கூட மணிக்கணக்காக பாட்டாளி வர்க்கப் புரட்சிகர இலட்சியத்தையும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை - முன்னேற்றத்தையும் விளக்கிப் பேசுவார்.

பிற்காலத்தில் தலைப்பு வாரியாக அணிகளுக்கான அரசியல் வகுப்புகள் எடுப்பதில் ஆசிரியராகவே செயல்பட்டார். உசிலைக்கு ராஜீவ் காந்தி வந்த போது கருப்புக் கொடி காட்டிய ஆறு தோழர்களில் இவரும் ஒருவர். இந்நிகழ்ச்சியின் போது எத்தனை போலீசார், எத்தனை அடி அடித்தார்கள் என்ற கணக்கே கிடையாது. எத்தனை முறை சிறை சென்றார், அவர் மீது எத்தனை வழக்குகள் உள்ளன என்ற கணக்கும் கிடையாது.

தோழர் நல்லு இருபத்தைந்து ஆண்டுகள் வி.வி.மு.வில் இருந்து செயல்பட்டார். மற்ற தோழர்களுக்கு முன் மாதிரியாக செயல்பட்டார். அதைவிட முக்கியமாக, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நக்சல்பாரிகளைக் கொடூரமாக அரசு இயந்திரம் வேட்டையாடிய காலத்திலும், புரட்சிகர அமைப்பைத் தொடங்கி வளர்ப்பதில் ஏற்படும் பல்வேறு நடைமுறை சிக்கல்களையும், இன்னல்களையும், இழப்புகளையும் எதிர்கொண்ட காலத்திலும் உறுதியுடன் செயல்பட்டார் என்பதில்தான் தோழர் நல்லுவின் சிறப்பும் வீரமும் வெளிப்படுகிறது.

16.08.01 அன்று செங்கொடி போர்த்தப்பட்ட தோழர் நல்லுவின் உடல், 200-க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்க, ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மதுரை தத்தனேரி சுடுகாட்டில் எரியூட்டப்பட்டது.

22.08.2001 அன்று மாலை தோழர் நல்லுவுக்கு இரங்கல் பொதுக் கூட்டமும், கலை நிகழ்ச்சியும் அவர் பிறந்து வளர்ந்த ஆரியப்பட்டி கிராமத்தில் நடைபெற்றது. அலங்கார வளைவு ஒன்று ஊரின் தொடக்கத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்து பொதுகூட்ட மேடை வரை சிவப்பு தோரணங்களால் அலங்காரம் செய்யப்பட்டது. மேடையில் தோழர் நல்லுவின் உருவப்படம் வைத்து தோழர் காளியப்பன், தோழர் கதிரவன் மற்றும் முன்னணித் தோழர்கள் இரங்கல் உரையாற்றினர்.

**ஆரியப்பட்டியில் நடந்த இரங்கல் பொதுக்கூட்டம்.**




பொதுக்கூட்டம் தொடங்கும் முன்பாக மௌன ஊர்வலம் நடைபெற்றது. செங்கொடியேந்தி, பறைமுழங்க நடைபெற்ற இந்த மௌன ஊர்வலத்தில் எண்ணூறுக்கும் மேற்பட்ட பொது மக்கள் திரண்டனர். புரட்சியாளர்கள் புதைக்கப்படுவதில்லை; விதைக்கப்படுகிறார்கள் என்பதற்கிணங்க இரங்கல் கூட்டம் எழுச்சியுற நடந்தது.

தோழர் நல்லுவுக்கு சிவப்பு அஞ்சலி செலுத்தி, அவரின் வீர நினைவுகளை நெஞ்சில் ஏந்துவோம்!

**விவசாயிகள் விடுதலை முன்னணி,**
**மதுரை, தேனி மாவட்டங்கள்.**

www.padippakam.com


**புதிய ஜனநாயகம்**

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 16

**இதழ் 20**

1-15 செப்டம்பர் 2001

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18



மின் அஞ்சல் முகவரி:
puthiyajananayagam@hotmail.com

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# ஜெயாவிடம் விலை போகும் நீதித்துறை

**நா**ட்டின் அரசியல் நிறுவனங்கள் அனைத்துமே சீரழிந்து முடை நாற்றம் வீசும்போது, கடைசியாக நீதித்துறை மட்டுமே இன்னமும் சீரழிந்து விடவில்லை என்று கூறி, அதன் மீதாவது நம்பிக்கை வைக்கும்படி சில நீதிமன்றத் தீர்ப்புகள் எடுத்துக் காட்டப்படுகின்றன. இந்த வகையில் கடந்த மாதம் உச்சநீதி மன்றம் வழங்கிய இரண்டு தீர்ப்புகள் சுட்டிக் காட்டப்படுகின்றன. அவை: * ஊழல் வழக்கில் குற்றவாளி என்று விசாரணை (கீழ்நிலை) வழக்கு மன்றத்தால் தண்டிக்கப்பட்ட அரசு ஊழியரின் மேல்முறையீட்டை ஏற்கும் மேல்நிலை வழக்கு மன்றம், தற்காலிகமாகக் கூடத் தீர்ப்பை நிறுத்தி வைக்கக் கூடாது. அவர் குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்படும்வரை இடைக்காலமாகக்கூட அவர் அரசுப் பதவியில் நீடிப்பதற்கு நீதிமன்றம் துணைபோகக் கூடாது. * சட்டப்பேரவை உறுப்பினராக இல்லாத ஒருவர் அமைச்சர் பதவிக்கு நியமிக்கப்படும்போது, ஆறுமாதத்துக்குள் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பது நிபந்தனையும் விதியும் ஆகும். அப்படி அவர் தேர்ந்தெடுக்கப்படாதபோது சிறிது இடைவெளி விட்டு மீண்டும் அமைச்சராக நியமிக்கப்படுவது கூடாது. ஆறு மாத கால அவகாசம் என்பதை முறைகேடாகப் பயன்படுத்துவது சட்டத்தின் அடிப்படையான, சனநாயக நெறிமுறைகளை காற்றில் பறக்க விடுவதாகும்.

ஆனால், தமிழக முதலமைச்சராக உள்ள ஜெயலலிதா விவகாரத்தில் இந்த இரண்டு தீர்ப்புகளுக்கும் மாறான நடைமுறையை உச்சநீதி மன்றமே கடைப்பிடிக்கிறது. நீதியின் செங்கோல் வளைக்க முடியாத உலோகத்தால் உருவாக்கப்பட்டதில்லை. ஜெயலலிதா போன்ற கருப்புப் பண - கள்ளப் பண இலஞ்ச - ஊழல் பேர்வழிகளால் வேண்டியபோது வளைக்கக்கூடிய நரம்பில்லாத சதையினால் ஆனதுதான் என்று அது காட்டுகிறது. கொடைக்கானல் "பிளசண்ட் ஸ்டே" வழக்கில் இரண்டாண்டுகளும், டான்சி நில ஊழல் வழக்கு ஒன்றில் இரண்டாண்டுகளும், மற்றொன்றில் மூன்றாண்டுகளுமாக ஏழாண்டுகள் சிறைத் தண்டனை பெற்றவர் ஜெயலலிதா. இந்தச் சிறப்பு நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்திருக்கிறார். அதேசமயம், தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதியில்லாதவர் என அவருடைய நான்கு வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டு விட்டன. மேல்முறையீடு செய்திருந்த போதும், மேற்படி உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி அரசு பதவியில் அவர் நீடிக்கக் கூடாது. தேர்தல்களில் போட்டியிடும் தகுதியில்லாத ஜெயலலிதா ஆறுமாதத்துக்குள் சட்டப் பேரவை உறுப்பினராக வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் முதலமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இதுவும் உச்சநீதி மன்றத் தீர்ப்புக்கு முரணானது.

ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டவர், தேர்தல்களில் போட்டியிடும் தகுதியிழந்தவர், முதலமைச்சராக நியமிக்கப்பட்டதும், நீடிப்பதும் சரியில்லை என்று உயர்நீதி, உச்சநீதி மன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டன. இந்த வழக்குகளை இருவர், மூவர், இறுதியில் ஐந்து நீதிபதிகளைக் கொண்ட அரசியல் சட்ட அமர்வுப் பிரிவு விசாரிப்பது என்று பந்தாடி, மூன்று மாதங்களுக்கு மேலாக இழுத்தடிக்கப்படுகிறது. ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்ட அரசு ஊழியர் (எம்.எல்.ஏ. - எம்.பி.க்கள், அமைச்சர்கள் ஆகியோர் அரசு ஊழியர்கள் தாம் என்று ஏற்கனவே உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது) மேல்முறையீடு செய்திருந்தாலும், அவர் அரசுப் பதவியில் ஏன் நீடித்திருக்கக் கூடாது என்பதற்கான உச்ச நீதிமன்றத் தீர்ப்பைக் கவனிக்கும்போது, உச்சநீதி மன்றம் வேண்டுமென்றே, தெரிந்தே பாரபட்சமாக நடந்து கொள்கிறது. அதனால்தான் ஜெயலலிதா பதவியில் நீடிப்பதற்கு எதிரான வழக்கைத் திட்டமிட்டு இழுத்தடிப்பதோடு, அதற்குத் தடை விதிக்கக் கோரும் மனுவை நிராகரித்தது.

"ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்ட அரசு ஊழியர் பதவியில் நீடிக்க அனுமதித்தால், இதர ஊழியர்களின் மன உறுதி பாதிக்கப்படும். அரசு இயந்திரங்களின் மீது மக்கள் ஏற்கனவே நம்பிக்கை இழந்திருக்கின்றனர்; இதனால் நிலைமை மேலும் மோசமாகும்; அத்தகையவருடன் பணியாற்றும் நேர்மையான சக ஊழியர்கள் மற்றும் கீழ்நிலைப் பணியாளர்களின் மன உறுதியும் பாதிக்கப்படும்" (பார்க்க: தினமணி, ஆக.3, பக்.7)

ஜெயலலிதா, ஊழலுக்காகத் தண்டிக்கப்பட்ட சாதாரண அரசு ஊழியர் அல்ல; இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள் மூலம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கோடிகோடியாகச் சொத்துச் சேர்த்து வைத்துள்ள, மாநில

தொடர்ச்சி 26-ஆம் பக்கம்

www.padippakam.com

# ஜெயா - போலீசின் பாசிச தாக்குதல்

# சரணாகதிப் பாதையில் தமிழகப் பத்திரிகையாளர்கள்

பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் தனது ஆட்சியின் 100 நாள் 'சாதனை'களைப் பட்டியல் போட்டு விளம்பரப்படுத்தி வருகிறது. இது போன்ற நூறு நாள் 'சாதனை'யை தமிழக மக்கள் வேறு ஆட்சியில்கூடக் காண முடியும். ஆனால், ஆட்சி கட்டிலில் ஏறிய நூறே நாட்களில் பத்திரிகையாளர்கள் மீது ஏவிவிடப்பட்ட மிருகத்தனமான தாக்குதல் 'சாதனை'யை ஜெயாவைப் போன்ற பாசிசக் கும்பலின் ஆட்சியில்தான் பார்க்க முடியும்.

ஜெயா முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் எடுத்த பொழுதே அவருக்கும், பத்திரிகையாளர்களுக்கு இடையேயான உரசல் தொடங்கிவிட்டது. இது வெளிப்படையான மோதலாக, விழுப்புரம் நகரில் சன் தொலைக்காட்சி நிருபர் சுரேஷ் கைது செய்யப்பட்டதையடுத்து வெடித்தது. சுரேஷை விடுதலை செய்யக் கோரி, ஜெயாவிடம் மனு கொடுப்பதற்காகப் பத்திரிகையாளர்கள் தலைமைச் செயலகத்தில் கால் கடுக்கக் காத்து நின்றனர். ஜெயாவோ அவர்களைப் பார்வையாலேயே அலட்சியப்படுத்திவிட்டு, காரில் ஏறிப் பறந்தார். அவரது காரை கடற்கரைச் சாலையில் வழி மறிக்க முயன்ற பத்திரிகையாளர்கள் மீது போலீசு தடியடி நடத்தியது. மறுநாள் இதைக் கண்டித்து சென்னையில் பத்திரிகையாளர்கள் நடத்த முயன்ற ஊர்வலம் தடை செய்யப்பட்டது; தடையை மீறிய பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

பத்திரிகையாளர் மீதான அடுத்த தாக்குதல் சம்பவம் கருணாநிதி கைது செய்யப்பட்டபொழுது நடந்தது. ''கருணாநிதி கைது செய்யப்படும்பொழுது, அவரைப் பத்திரிகையாளர்கள் புகைப்படம் எடுக்கவோ, அவருடன் பேசமுயலவோ அனுமதிக்கக் கூடாது'' என சென்னை நகரப் போலீசு ஆணையர் முத்துக் கருப்பன் வாய்மொழி உத்தரவு இட்டிருந்தார். இதையடுத்து, பத்திரிகையாளர்கள் கருணாநிதி வீட்டின் முன்பும், சி.பி.சி.ஐ.டி. அலுவலக வாசலிலும், வேப்பேரி காவல் நிலையத்திலும், நீதிபதி அசோக்குமார் வீடு இருக்கும் தெருவிலும் ஓட ஓட விரட்டப்பட்டுத் தாக்கப்பட்டனர்.

சென்னையில் தி.மு.க. நடத்திய பேரணியில் பத்திரிகையாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல், தேர்ந்த முறையில் திட்டமிடப்பட்டு நடந்த தாக்குதலாகவே இருந்தது. • ''நீங்கதான் எங்க கமிசனரைப் பத்தி எழுதுறதா?'' எனக் கேட்டபடியே, போலீசார் நக்கீரன் நிருபர் அன்புவைத் தாக்கியிருக்கின்றனர். • டி.ஜி.பி. அலுவலகம் அருகே நடந்த போலீசு கும்பலின் தாக்குதலைப் படமெடுத்துக் கொண்டிருந்த ''ஆஜ்தக்'' தொலைக்காட்சியின் பெண் நிருபர் ஜெயஸ்ரீயின் கன்னத்தில் அறைந்து அவரை நிலைகுலைய வைத்த போலீசார், அவர் கையில் இருந்த ''வீடியோ கேமராவை''ப் பிடுங்கித் தரையில் போட்டு, பூட்ஸ் காலால் மிதித்து நொறுக்கினார்கள்.

• போலீசின் அடுத்த குறி, கலவரங்களைப் படமெடுத்துக் கொண்டிருந்த ''ஜீ.டி.வி'' நிருபரின் மீது விழுந்தது. போலீசார் அடிக்கும் பொழுதே அவர், தனது புகைப்படக் கருவியில் இருந்து ஒளி நாடாவை எடுத்துத் தன் உதவியாளரிடம் கொடுத்துவிட, அவரைத் துரத்தியது போலீசு. உதவியாளர், ஒளிநாடாவை ஜீ.டி.வி நிருபர் வித்யாவிடம் கொடுத்து விட்டுத் தப்பியோட, வித்யாவை 15 போலீசார் டி.ஜி.பி. அலுவலக காம்பவுண்ட் சுவற்றில் சாய்த்து வைத்து, தங்களின் கால்முட்டியை மடக்கிக் கொண்டு தாக்கினார்கள். இதைத் தட்டிக் கேட்ட நக்கீரன் நிருபர் பிரகாஷ், டி.ஜி.பி. அலுவலகத்தினுள் துரத்தப்பட்டுத் தாக்கப்பட்டார்.

• இந்து புகைப்பட நிருபர் ரகு, ஜூனியர் விகடன் புகைப்பட நிருபர் விவேக் மற்றும் சில பத்திரிகைகளின் புகைப்பட நிருபர்களை அயோத்திக் குப்பத்தைச் சேர்ந்த ரவுடிகள் அரிவாளால் வெட்டத் தொடங்க, அவர்கள் உயிரைக் காத்துக் கொள்ள போலீசாரிடம் தஞ்சமடைந்தனர். போலீசோ, ''பத்திரிகைகாரனுங்களா...? உங்களைத்தாண்டா தேடிக் கொண்டிருந்தோம்'' என 'ரவுண்டு' கட்டி அடித்திருக்கின்றனர். இந்தத் தாக்குதல் உதவி ஆணையர் ஒருவரின் தலைமையில் நடந்தது. அவர்களின் புகைப்படக் கருவிகள் போலீசாரால் பறித்துக் கொள்ளப்பட்டன. போலீசிடமும், ரவுடிகளிடமும் அடிபட்டு ரத்தக் காயமடைந்தவர்கள்; உயிருக்குப் பயந்து டி.ஜி.பி. அலுவலகத்தினுள் தஞ்சம் புகுந்தவர்கள் எனப் பெரும்பான்மையான பத்திரிகையாளர்கள், டி.ஜி.பி. அலுவலகத்தில் சிறை வைக்கப்பட்டு, வெளியே தி.மு.க.வினர் மீது நடந்த தாக்குதலைப் புகைப்படம்/வீடியோ படம் எடுத்துவிடாதபடித் தடுக்கப்பட்டனர்.

''பேரணி நடப்பதற்கு முன்பாக, போலீசார் கடற்கரைச் சாலையில் டி.ஜி.பி. அலுவலகம் அருகே கலவரத்தை அடக்குவதற்கு ஒத்திகை நடத்தியதாகவும்; அ.தி.மு.க. அமைச்சர் ஒருவர் அயோத்தி குப்பம் 'தாதா' வீரமணியைத் தொடர்பு கொண்டதாகவும்; கமிசனர் முத்துக் கருப்பன் இனி அஞ்சு வருசத்திற்கு எவனும் சென்னையில் பேரணி நடத்தக் கூடாதென போலீசார் மத்தியில் பேசியதாகவும்; சில குறிப்பிட்ட பத்திரிகை நிருபர்களை போலீசார் குறி வைத்திருப்பதாகவும்'' சில பத்திரிகைகள் கிசுகிசு செய்திகளை வெளியிட்டிருந்தன. பத்திரிகைகளின் 'கிசுகிசு'ச் செய்திகளும், தாக்குதல் நடத்தப்பட்ட விதமும் ஒத்துப் போவதைப் பார்க்கும் பொழுது, இது ஏற்கனவே திட்டமிடப்பட்டு, அதன்படி நடத்தப்பட்ட அரசின் பயங்கரவாதத் தாக்குதல் என்றுதான் கூற முடியும்.

அது மட்டுமல்ல, ஊர் அடங்கிப் போன நள்ளிரவு நேரத்தில் கருணாநிதியைக் கமுக்கமாகக் கைது செய்துவிட முயன்ற ஜெயாவின் அராஜகத்தை அம்பலப்படுத்திய பத்திரிகையாளர்களை, இந்த முறை அவ்வளவு இலகுவாக விட்டுவிடக் கூடாது என்றே போலீசு திட்டமிட்டிருக்கும்.

போலீசு-ரவுடி கூட்டணியால் தாக்கப்பட்ட பத்திரிகையாளர்கள்.




படிப்பகம்

www.padippakam.com

''டிஜிட்டல் கேமராவில் இருந்து அசாராணமாக ''பிளாப்பியை'' உருவி எடுத்த போலீசுக்காரரைப் பார்த்து நான் அசந்து போனேன்'' என்கிறார் அடி வாங்கிய ஒரு நிருபர். இதை வைத்துப் பார்க்கும் பொழுது, கலவரத்தைப் புகைப்படம் எடுக்கும் பத்திரிகையாளர்களை எப்படியெல்லாம் 'சமாளிக்க' வேண்டும் என போலீசாருக்கு வகுப்பே எடுக்கப்பட்டிருப்பதாகத்தான் கூற முடியும்.



போலீசின் பாதுகாப்போடு பேரணியைத் தாக்கும் அயோத்திகுப்பம் ரவுடி.

• • •

''சனநாயகத்தின் நான்காவது தூணாகக் கருதப்படும் பத்திரிகைகள் மீது கைவைத்தால், பெரும்பாலான செய்தி ஊடகங்கள் தனது ஆட்சியைக் கண்டிக்கும்; ஏற்கனவே நாறிப் போய்க்கிடக்கும் தனது ஆட்சியின் மீது மக்களின் வெறுப்பு வளரும்'' என்பதை அனுமானித்துக் கொள்ள முடியாத அளவிற்கு ஜெயாவும், தமிழக போலீசும் முட்டாள்கள் அல்ல. அவர்கள், ''பத்திரிகைகளின் எதிர்ப்பையெல்லாம் சமாளித்து விடலாம்; ஒன்றும் கைமீறிப் போய்விடாது'' என்றே பத்திரிகைகளின் மீது தாக்குதல் தொடுக்கப்பட்ட பின்பும் நம்புகிறார்கள். ஜெயாவின் இந்த நம்பிக்கையைப் பார்ப்பன பத்திரிகைகள் வீணடித்துவிடவில்லை.

பேரணியில் நடந்த தாக்குதலைக் கண்டித்தும், தமிழக போலீசை வெறிநாய்களாகச் சித்தரித்தும் அம்பலப்படுத்திய பத்திரிகைகள், அடுத்தடுத்து வெளியான இதழ்களில் அடக்கி வாசிக்கத் தொடங்கி விட்டன. ''ஜெயாவின் ஆட்சியை எதிர்த்து முஷ்டியை உயர்த்த வேண்டும்'' என வீரா வேசமாக எழுதிய ''இந்தியா டுடே'' அதன்பின், ''தெரிந்தோ, தெரியாமலோ நடந்துவிட்ட தாக்குதலாக'' சப்பைக் கட்டியது.

தினமணி, ஜூனியர் விகடன், கல்கி, குமுதம் போன்றவை மலரும் நினைவுகளில் மூழ்கிப் போய், பத்திரிகையாளர்களுக்கும், போலீசுக்கும் இருந்து வந்த, இருந்து வர வேண்டிய சுமுகமான உறவு பற்றியும், தமிழக போலீசின் மாண்பு, மரபு பற்றியும், போலீசுத் துறையில் அரசியல் புகுந்து விட்ட துர்பாக்கியம் பற்றியும் பக்கம் பக்கமாகப் புலம்பித் தீர்க்கின்றன. இதனையெல்லாம் அறியாமை என்பதா? காரியவாதம் என்பதா?

சனநாயகம், உரிமை பற்றியெல்லாம் அறியாத மக்கள் கூட, தங்களின் சாதாரண கோரிக்கைகளுக்காக சாலை மறியல் போராட்டம் நடத்தும் காலமிது. எம்.எல்.ஏ.வோ, போலீசோ தங்களைத் தாக்கிவிட்டால், அரசு ஊழியர்கள் வேலையை நிறுத்தி விட்டு முற்றுகை போராட்டம் நடத்துகிறார்கள். பேருந்து ஓட்டுநர்கள், வண்டிகளை சாலைகளின் குறுக்கே நிறுத்திவிட்டு, சாலை மறியல் நடத்துகிறார்கள். ஆனால், போலீசின் கொலைவெறி தாக்குதலை எதிர்கொள்ளும் பத்திரிகையாளர்களோ சாத்வீகப் போராட்டம்தான் நடத்துவோம் என அகிம்சா மூர்த்திகளாய் அவதாரம் எடுக்கிறார்கள்.

பத்திரிகையாளர்கள் சட்டத்தை மீறியோ, வன்முறைப் போராட்டங்களேயோ நடத்த வேண்டாம். தங்களைத் தாக்கிய போலீசார் மீது தங்களின் புகைப்படக் கருவிகளை அபகரித்துக் கொண்ட, உடைத்த போலீசார் மீது, சட்டப்படி வழக்கு பதிவு செய்யலாம். தமிழக அரசின் செய்திகளை விளம்பரங்களைப் புறக்கணிக்கலாம். ஆனால், பத்திரிகையாளர்களோ தங்களை வருத்திக் கொண்டு உண்ணாவிரதப் போராட்டம் நடத்துகிறார்கள்; அரசின் நிகழ்ச்சிகளைப் புறக்கணிக்கக் கூடத் துணியாமல், கறுப்புத் துணியைக் குத்திக் கொண்டு, தங்களின் எதிர்ப்பை நீர்த்துப் போன வடிவில் காட்டுகிறார்கள்.

அந்தளவிற்குக்கூட போலீசை, ஜெயா அரசைப் பகைத்துக் கொள்ள முடியாத பத்திரிகையாளர்களால், பத்திரிகை முதலாளிகளால் பிறகு எப்படி ஜனநாயகத்தைத் தாங்கிப் பிடிக்கும் நாலாவது தூணாக இருக்க முடியும்? அதனால்தான் நகர ஆணையர் ''கஞ்சா'' கருப்பன் ''தாக்கிய போலீசார் மீது புகார் தரட்டும்; நான் நடவடிக்கை எடுக்கின்றேன்'' என எகத்தாளமாகப் பேசுகிறார்.

பத்திரிகைகளின் சரணாகதி இதோடு முடிந்து போய்விடவில்லை. பத்திரிகைகள் வரம்புக்குட்பட்ட அளவில் ஆளுங்கும்பலின், அதிகார வர்க்கத்தின் அடாவடித்தனங்களை அம்பலப்படுத்துவதை முதலாளித்துவ சனநாயகம் அங்கீகரிக்கிறது. அந்த அம்பலப்படுத்தும் அற்ப சனநாயக உரிமையைக் கூடத் தர முடியாது என்பதைத்தான் ஜெயா கும்பல் பத்திரிகையாளர்களின் மண்டையைப் பிளந்து சொல்லியிருக்கிறது. ஆனால், பார்ப்பனப் பத்திரிகைகளோ தாக்குதலின் பாசிசத் தன்மையை நீர்த்துப் போகச் செய்துவிட்டு, அதனைப் பத்தோடு பதினொன்றாகக் காட்டுகின்றன.

ஜெயா கும்பலை எதிர்ப்பதாகக் காட்டிக் கொள்ளும் ''கல்கி'', ''மகா பேரணிகள் காவல் துறைக்குத் தலைவலியானது'' என எழுதி, போலீசின் தாக்குதலுக்கு ஒரு நியாயத்தைக் கற்பிக்கிறது.

''கலவரத்துக்குக் காரணம் கமிசனர் முத்துக் கருப்பன்தான்; அவரை மாற்றி விட்டால் பிரச்சினை இருக்காது'' என எழுதும் குமுதம், போலீசின் தாக்குதலை சில தனிப்பட்ட போலீசு அதிகாரிகளின் தவறுதலாகக் காட்ட முயலுகிறது. அடுத்த இரு வாரங்களிலேயே முத்துக் கருப்பனை பேட்டி கண்டு, பேரணியில் தி.மு.க.வினர் அவர் குடும்பத்தை ஆபாசமாகத் திட்டியதால், அவர் குடும்பத்தினரின் மனது புண்ணாகிக் கிடப்பதை எழுதி, முத்துக் கருப்பனுக்கு வாசகர்களின் அனுதாபத்தைத் தேடித் தருகிறது.

ஜூனியர் விகடனோ, கலவரம் தொடர்பாக அயோத்திக் குப்பம் ரவுடி வீரமணியை பேட்டி கண்டு, தனது 'நடுநிலையை'க் காட்டிக் கொள்கிறது. மேலும், ''முதல்வருக்குப் பக்கத்தில் இருக்கும் ஓர் அதிகாரிதான், முதல்வரைப் பத்திரிகையாளர்களோடு நெருங்கவிடாமல் தடுக்கிறார்; அவர்தான் பத்திரிகையாளர்களிடமிருந்து மனுவைப் பெற முடியாமல் முதல்வரைத் தடுத்தார்; அவர்தான் காயம்பட்ட பத்திரிகையாளர்களை முதல்வர் வந்து பார்க்க முடியாமல் தடுத்து விட்டார்'' என எழுதி, ஜெயாவை வாயில் விரலை வைத்துச் சூப்பும் பாப்பாவாகக் காட்டுகிறது.'' ''பத்திரிகையாளர்களுக்காக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமெல்லாம் ஜெயாவிடம் இருக்கிறது'' என எழுதும் ஜூனியர் விகடன், இதன் மூலம், ''நீக்குப் போக்கா நடந்துகிட்டா நமக்கு நல்லது'' என்ற வேசித்தனத்தை பத்திரிகையாளர்களிடம் விதைக்கிறது.

• • •

சனநாயகத்தைத் தாங்கி நிற்கும் தூண் எனப் பத்திரிகைகள் தங்களைக் கூறிக் கொண்டாலும், முதலாளித்துவப் பத்திரிகைகளைத் தாங்கி நிற்கும் தூண், இலாபம்தான். ஒரு செய்தியை வெளியிடலாமா,



படிப்பகம்

கூடாதா என்பதை பத்திரிகையின் விற்பனையும், அவர்களின் வர்க்கப் பாசமும் தான் தீர்மானிக்கிறதேயொழிய, பத்திரிகைகளின் 'சமூக அக்கறை' தீர்மானிப்பதில்லை. சனநாயகம் பற்றிக் கூச்சலிடும் பத்திரிகைகள், குறிப்பாக பார்ப்பன பத்திரிகைகள்தான், புரட்சியாளர்கள் நடத்தும் போராட்டங்கள் பற்றிய செய்திகளை இருட்டடிப்புச் செய்வதிலும், திரித்துப் புரட்டுவதிலும், அப்போராட்டம் பற்றி போலீசு கொடுக்கும் செய்திகளையே வாந்தி எடுப்பதிலும் முன்னணியில் நிற்கின்றன.




போலீசை எதிர்த்து பத்திரிகைகள் நடத்திய பிசுபிசுத்த போராட்டத்தை சனநாயகப் போராட்டமாக பத்திரிகைள் தம்பட்டம் அடித்துக் கொள்கின்றன. அதேசமயம், போலீசின் பாலியல் வன்முறை, கொட்டடிக் கொலைகள், சித்திரவதைகள், துப்பாக்கிச் சூடுகள், ''கொடியங்குளம்'' போன்ற தாக்குதல் சம்பவங்களை எதிர்த்துப் போராடும் மக்களை ''வன்முறை கும்பல்'' என இழிவுபடுத்திச் செய்திகள் வெளியிடுவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளன. இப்படிப்பட்ட தாக்குதல் அடுத்தடுத்து நடந்து வருவது போலீசை சட்டப்பூர்வ பாசிசக் குண்டர் படையாகவே காட்டுகின்றன. ஆனால், பத்திரிகைகளோ இன்னும் போலீசை சமூகத்தின் காவலனாகவே காட்டி மக்களை ஏய்க்கின்றன.

எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவான பத்திரிகைகள் கூட, அரசு, ஆளுங்கட்சி, அதிகார வர்க்கம் பற்றி அம்பலப்படுத்தும் செய்திகளை வெளியிடுவதில் நிதானமாகவே நடந்து கொள்கின்றன. ஏனென்றால், எல்லா முதலாளித்துவ பத்திரிகைகளும் அரசு தரும் விளம்பரங்களுக்காகக் கையேந்திக் கொண்டு திரிகின்றன. ''தொழில்'' என்ற முறையில் அரசின் சலுகைகளைப் பெறவும், வரி ஏய்ப்பு மோசடிகளை மறைக்கவும் அவர்களுக்கு அரசின், அதிகார வர்க்கத்தின் தயவு தேவைப்படுகிறது. சில உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகளைப் பெறுவதற்கும்; அமைச்சர்கள், அதிகாரிகளோடு ஒட்டிக் கொண்டு வெளிநாடுகளுக்குச் சென்று வரவும் மட்டுமின்றி, கிசுகிசுச் செய்திகளுக்காகவே முதலாளித்துவப் பத்திரிகைகள் அரசு அதிகாரிகளையும், போலீசையும் காக்காய்ப் பிடித்துக் கொள்ள வேண்டும். இப்படி பல வழிகளில் முதலாளித்துவ செய்தி ஊடகங்களும், அரசும் வெளிப்படையாகவும், இரகசியமாகவும் பின்னிப் பிணைந்து கிடக்கும் பொழுது, முதலாளித்துவப் பத்திரிகைகள், எவ்வளவுதான் அவை ஆளுங்கட்சிக்கு எதிராகச் செயல்பட்டாலும், ஒரு குறிப்பிட்ட வரம்பைத் தாண்டிச் சென்று விட முடியாது.

அரசு அலுவலகங்களில் ஒரு கோப்பை நகர்த்துவதற்கு ஒரு ''ரேட்'' இருப்பதைப் போல, பத்திரிகைகளிலும் சில செய்திகளை (திரைப்பட விமர்சனம், நடிகர், நடிகைகள், குட்டி அரசியல் தலைவர்கள் பற்றிய செய்திகள், தங்கள் தொழிற்சாலைகளை எதிர்த்து நடக்கும் போராட்டங்களை இருட்டடிப்பு செய்துவிட்டு, நிர்வாகத் தரப்புக் கூறுவதை மட்டும் எழுதுவது) நல்ல முறையில் வெளியிடுவதற்கு 'ரேட்' உண்டு. இப்படி இலஞ்சம் வாங்கிக் கொண்டு செய்திகளை வெளியிடும் பத்திரிகைகள்தான், அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் இலஞ்சம் வாங்குவது பற்றி ஓலமிடுகின்றன. வீரமணி, பங்க்குமார் போன்ற குற்றக் கும்பல்களின் தலைவர்களை கதாநாயகர்களைப் போல பேட்டிக் கண்டு வெளியிடும் பத்திரிகைகள், அவர்களுக்கும் போலீசுக்கும் இருக்கும் தொடர்பை வடிகட்டியே அம்பலப்படுத்துகின்றன.

ஆபாசத்தை ஒழிக்க வேண்டும் எனக் கூறிக் கொண்டு, பெண்களின் அரை நிர்வாணப் படங்களை சினிமா செய்திகளிலும், விளம்பரங்களிலும் வெளியிடுகின்றன. மருத்துவ ஆலோசனை என்ற பெயரில் பாலியல் வக்கிரத்தைப் பரப்புகின்றன.

இந்தச் சிற்றின்பத்திற்கு பிராயச்சித்தமாக, பக்தி, ஆன்மீகம், ஜோசியத்திற்காகத் தனித்தனி இதழ்களைத் தொடங்கி, பேரின்ப வியாபாரம் நடத்துகின்றன. இப்படி அடிப்படையிலேயே மக்களின் உரிமை, நலன், ஆரோக்கியமான சிந்தனைகளுக்கு எதிராகச் செயல்பட்டு வரும் முதலாளித்துவ செய்தி ஊடகங்கள் சனநாயகப் போராளிகளாக வேடம் போடுவது கடைந்தெடுத்த மோசடித்தனம்!

இப்படிப்பட்ட நிறுவனங்களால் பயிற்றுவித்து வளர்க்கப்படும் பெரும்பாலான பத்திரிகையாளர்களிடமிருந்து, நாம் என்ன சமூக அக்கறையை எதிர்பார்க்க முடியும்? ''தி.மு.க. பேரணியில் போலீசு நடத்திய கலவரத்தின் பொழுது போலீசார் 'புகைப்படம் எடுக்கக் கூடாது' என உத்தரவிட்டனர். இதைக் கேட்ட மூத்த பத்திரிகையாளர்கள் ஒதுங்கிப் போய்விட்டனர் 'எங்களின் உரிமை' எனப் பேரன இளம் பத்திரிகையாளர்கள்தான் தாக்கப்பட்டதாக'' துக்ளக் எழுதுகிறது. மூத்த பத்திரிகையாளர் என்றால அவனிடம் கிஞ்சித்தும் சமூக அக்கறையை எதிர்பார்க்க முடியாது என்பதுதான் இதன் பொருள். விபச்சாரத் தொழிலுக்குப் புதிதாக வரும் இளம்பெண், விடுதித் தலைவியால் தொழிலுக்குப் பழக்கப்படுத்தப்படுவதைப் போல, கொள்கை,

பாசிச தாக்குதலை உண்ணாவிரதப் போராட்டத்தால் முறியடிக்க முடியுமா?




தொடர்ச்சி 26-ஆம் பக்கம்

www.padippakam.com

# திரண்டெழுந்தது தொழிலாளி வர்க்கம் ஓடி ஒளிந்தது துரோகத் தலைமை

தொழிலாளி வர்க்கம் போர்க்குணத்தோடு திரண்டெழுந்தால் முதலாளிகள் அஞ்சி ஓடுவார்கள். ஆனால் தொழிற் சங்கத் தலைவர்கள் ஓடி ஒளிந்ததைப் பார்த்ததுண்டா? கோவையில் இந்த அதிசயம் அண்மையில் நடந்துள்ளது.

கடந்த ஆகஸ்ட் 10-ஆம் தேதியன்று கோவையில் பஞ்சாலை தொழிலாளர்களின் பேரணி நடைபெற்றது. பேரணிக்கு பஞ்சாலை கூட்டு நடவடிக்கை குழு ஏற்பாடு செய்திருந்தது. ஏற்கனவே உள்ள ஊதிய ஒப்பந்தம் காலாவதியாகி நான்கு ஆண்டுகள் முடிந்துவிட்ட நிலையில் புதிய ஊதிய ஒப்பந்தத்தைப் பேசி முடிக்க வேண்டும் என்றும் என்.டி.சி. மில் தொழிலாளர்களுக்குக் கடந்த நான்கு ஆண்டுகளாகக் கொடுத்து வந்த போனசை, கிராஜூவிட்டியில் பிடித்தம் செய்வதை எதிர்த்தும் தென்னிந்திய மில் முதலாளிகள் சங்கத்தின் (சைமா) முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது என்ற அடிப்படையில், லட்சுமி மில் அருகிலிருந்து பேரணி புறப்பட்டது.

இத்தகைய பேரணி - ஆர்ப்பாட்டங்களுக்குத் தொழிலாளர்களை வர்க்க உணர்வூட்டி அணி திரட்டாமல், போராட்டத்துக்குத் தொழிலாளிகள் வருவதேயில்லை என்று பழிபோடுவது தொழிற்சங்கத் தலைவர்களின் வாடிக்கை. எனவே சடங்குத்தனமாக பேரணி - ஆர்ப்பாட்டத்தை நடத்துவதும், தலைவர்கள் எட்டிப் பார்த்து விட்டு நாலு வார்த்தை பேசிவிட்டுச் செல்வதும்தான் இதுவரை தொழிற்சங்கங்களின் நடைமுறையாக இருந்தது. ஆனால் கடந்த நான்காண்டுகளாக ஊதிய ஒப்பந்தம் பேசி முடிக்கப்படாததால் ஏற்பட்ட பாதிப்பும், தொழிற்சங்கத் தலைவர்களின் துரோகமும் காரணமாக குமுறிக் கொண்டிருந்த தொழிலாளிகள் இம்முறை பத்தாயிரத்துக்கும் மேலாக உணர்வோடு பேரணிக்குத் திரண்டனர்.

தொழிலாளிகள் போராட்டத்துக்கு வருவதே இல்லை என்று பழிதூற்றி வந்த செங்காளியப்பன் (என்.எல்.ஓ), சுப்பையா (ஐ.என்.டி.யு.சி.), சுப்பிரமணி (ஹெச்.எம்.எஸ்) ஆகிய தலைவர்கள் இந்தப் பேரணியை எட்டிக் கூடப் பார்க்கவில்லை. துரைசாமி (எம்.எல்.எப்) மட்டும் சிறிது நேரம் ஊர்வலத்தை வேடிக்கை பார்த்துவிட்டு, ஓய்வெடுக்க வீட்டுக்குச் சென்றுவிட்டார்.

இத்துரோகத் தலைவர்களுக்கு ஆண்டுதோறும் சந்தாவும் நன்கொடையும் தொழிலாளிகள் உழைத்துக் கொடுத்தனர். ஆனால் இத்துரோகிகளோ தொழிலாளிகளைக் காட்டிக் கொடுத்து முதலாளிகளிடம் கையூட்டு பெற்று தமது வாழ்வை வளப்படுத்திக் கொண்டுள்ளனர். எனவேதான் இம்முறை போராட்டம்தான் ஒரே வழி என்று தொழிலாளிகள் தீர்மானித்ததும், பேரணிக்குக் கூட வராமல் இவர்கள் பின்வாங்கினர். மேலும், ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றால் முதலாளிகள் கோபித்துக் கொள்வார்கள் என்பதால், திட்டமிட்டே இதில் கலந்து கொள்ளாமல் தவிர்த்தனர்.

இருப்பினும் தொழிலாளர்கள் தமது வர்க்க பலத்தின் நம்பிக்கையோடு ஊர்வலத்தைத் தொடர்ந்தனர். தென்னிந்திய மில் முதலாளிகள் சங்கக் கட்டிடத்தைப் பேரணி நெருங்கியதும், 200 அடிக்கு அப்பால் தடுத்து நிறுத்தி, இங்குதான் ஆர்ப்பாட்டம் செய்ய வேணடும் என போலீசார் எச்சரித்தனர். இதை ஏற்று போலி கம்யூனிஸ்டு தலைவர்களான நஞ்சப்பனும் (சி.ஐ.டி.யு) ஆறுமுகமும் (ஏ.ஐ.டி.யு.சி) போலீசு அனுமதித்துள்ள இடத்திலேயே ஆர்ப்பாட்டம் நடக்கும் என்று அறிவித்தனர்.

இதைக் கேட்டு தொழிலாளர்கள் ஆத்திரமடைந்தனர். "முதலாளிகள் சங்க கட்டிடம் முன் ஆர்பாட்டம் என்று போஸ்டர் அடித்து ஒட்டிவிட்டு, இப்போது பின்வாங்குவது எந்த வகையில் நியாயம்? அறிவிப்பு செய்தபடி அங்கே சென்று ஆர்ப்பாட்டம் செய்வோம்; வாருங்கள்" என்று தொழிலாளர்கள் அழைத்தனர். ஆனால் இவ்விரு போலி கம்யூனிஸ்டு தலைவர்களும் வரமறுக்கவே, தொழிலாளர்கள் ஆவேசமாக முழங்கிக் கொண்டு முதலாளிகள் சங்கக் கட்டிடம் முன்பாகத் திரண்டு ஆர்பாட்டத்தை நடத்த முற்பட்டனர். வேறு வழியில்லாமல் ஆறுமுகம் (ஏ.ஐ.டி.யு.சி.) உடனே தொழிலாளர்களோடு சேர்ந்து கொண்டு முழக்கங்களை எழுப்பினார். அதன்பிறகு நஞ்சப்பனும் (சி.ஐ.டி.யு) ஆர்ப்பாட்டத்தில் வேண்டா வெறுப்பாகக் கலந்துகொண்டார்.



பத்தாயிரம் பேருக்கு மேல் திரண்ட மிகப் பெரிய இந்த ஆர்ப்பாட்டத்துக்கு, ஆட்டோவில் கட்டப்பட்ட ஒலி பெருக்கியையே தொழிற்சங்கத் தலைவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். இதனால் ஆர்ப்பாட்ட முழக்கங்கள் கூட யாருக்கும் கேட்கவில்லை. பின்னர் சி.ஐ.டி.யு. தலைவர் நஞ்சப்பன் பேசத் தொடங்கியதும் எதுவும் காதில் விழவில்லை; ஒலிபெருக்கி ஏற்பாடு செய் என்று தொழிலாளர்கள் முழக்கமிட்டனர். ஆனால் தொழிற்சங்கத் தலைவர்களோ ஒலி பெருக்கிக்கான ஏற்பாடு கூட செய்யாமல், தொழிலாளர்களைப் பார்த்து கட்டுப்பாடு காக்க வேண்டும் என்றார்கள்.

இதைக் கண்டு ஆத்திரமடைந்த தொழிலாளிகள், "இந்தப் போராட்டத்துக்காக ஒவ்வொரு தொழிலாளியிடமிருந்தும் ரூ. 30 வீதம் சம்பளத்தில் பிடித்தம் செய்து பல லட்சங்களை வசூல் செய்துவிட்டு, ஏண்டா ஒழுங்காக ஒலிபெருக்கிக் கூட கட்டவில்லை?" என்று கேட்டு கூச்சலிட்டனர். இவர்களுடைய துரோகத்தனத்தையும் ஊழலையும் ஒவ்வொரு தொழிலாளியும் நார்நாராகக் கிழித்தனர். அவனே, இவனே என்று இத்துரோகிகளை ஒருமையில் விளித்து முழக்கமிட்டனர். கடந்தகாலத் துரோகங்களைப் பட்டியல் போட்டு ஆவேசமாகத் திட்டினர். இதைக் கண்டு பீதியடைந்த தொழிற்சங்க சுல்தான்களான நஞ்சப்பனும் ஆறுமுகமும் ஆர்ப்பாட்டத்தை விட்டு வெளியேறி தப்பியோடி விட்டனர்.

தொழிலாளி வர்க்கத்தின் ஆவேசத்தைக் கண்டு அஞ்சி இத்துரோகிகள் ஓடி ஒளிந்த பிறகு, திட்டமிட்டபடி ஆர்ப்பாட்டத்தை தொழிலாளிகளே பொறுப்பேற்று நடத்தினர். ஆகஸ்ட் 20-ஆம் தேதி முதலாக நடைபெறவுள்ள காலவரையற்ற

www.padippakam.com

வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு அறை கூவி அழைத்து, எந்தத் தலைவனாவது துரோகம் செய்தால் வீடு புகுந்து உதைப்போம் என்று எச்சரித்தனர்.

தொழிற்சங்க சுல்தான்களான செங்காளியப்பன், துரைசாமி, சுப்பையா, சுப்பிரமணியம் முதலானவர்கள் சாதாரணத் தொழிலாளியின் நிலையில் வாழ்க்கையைத் தொடங்கி இன்று இலட்சாதிபதிகளாக வளர்ந்துள்ளனர். இவர்களில் பலர் சிறு தொழில் அதிபர்களாகவும் உள்ளனர். இவர்களின் தலைமையில் போராட்டத்தை நடத்தினால் அது எப்படி வெற்றி பெறும் என்று தொழிலாளிகள் இப்போது உணர்வோடு கேள்வி எழுப்புகின்றனர். தொழிற்சங்கங்களின் இரண்டாம் மட்டத் தலைவர்களை ஆர்ப்பாட்டத்தின் போது ஒரு மையில் திட்டி அவர்களது துரோகத்தை அம்பலப்படுத்தியதும் இவர்களும் ஓடி ஒளிந்து கொண்டனர். துரோகிகளை எதிர்த்து தொழிலாளர்கள் ஆவேசமாகத் திட்டியதைக் காதால் கேட்ட எவனும், சொரணை உள்ள எவனும் உடனே தலைவர் பதவியிலிருந்து விலகி விடுவான். ஆனால் இக்கருங்காலிகளோ தமது பிழைப்பில் மண் விழுந்து விடுமே என்று இன்னமும் வெட்கமின்றி பதவிகளில் ஒட்டிக் கொண்டு வலம் வருகின்றனர்.

இப்பேரணியும் ஆர்ப்பாட்டமும் தொழிலாளிகள் போராட்டத்துக்கு வருவதேயில்லை என்று போலி கம்யூனிஸ்டுகள் நீண்ட காலமாகப் பரப்பி வரும் பொய்யை உடைத்தெறிந்துள்ளது. இன்னும் வர்க்க உணர்வோடு செயல்பட்டு அணிதிரட்டியிருந்தால் இன்னும் பல பத்தாயிரக்கணக்கில் தொழிலாளிகள் திரண்டு வந்திருப்பார்கள். தற்போது உலகமயமாக்கலுக்கு எதிராக உலகெங்கும் நடந்து வரும் போராட்டங்களுக்கு இணையாக கோவையிலும் தொழிலாளி வர்க்கம் போராட்டத்தை நடத்தியிருக்க முடியும். ஆனால் தலைவர்களாக உள்ள தொழிற்சங்க துரோகிகளும் பிழைப்புவாதிகளும்தான் இதற்குத் தயாராக இல்லை. எனவே இத்துரோகத் தலைமையைத் தூக்கியெறிந்துவிட்டு, புரட்சிகரமான புதிய தலைமையைத் தொழிலாளர்கள் கட்டியமைத்து போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். தொழிற்சங்கவாத - பொருளாதாரவாத குறுகிய நலன்களைக் கைவிட்டு, ஒப்பந்தத் தொழிலாளர்கள் உள்ளிட்டு அனைத்து உழைக்கும் மக்களுடனும் தொழிலாளர்கள் ஐக்கியப்பட வேண்டும். இதன் மூலமே தொழிற்சங்க சுல்தான்களின் கொட்டத்தை அடக்கி, தொழிற்சங்க இயக்கத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை உடைத்து தொழிலாளி வர்க்கம் போராட்டப் பாதையில் முன்னேற முடியும்.

தகவல்:
புதிய ஜனநாயகத் தொழிலாளர்
பிரச்சாரக் குழு, கோவை.

# ஆப்பிரிக்கக் கருப்பர்களைக் கொல்வது எது?

# ஆட்கொல்லி எய்ட்ஸா? அறிவுசார் சொத்துடைமையா?

உலகெங்கும், ஒவ்வொரு நாளும் 16,000 பேர் ''எய்ட்ஸ்'' நோயைப் பரப்பும் ''ஹெச்.ஐ.வி.'' எனப்படும் வைரஸ் கிருமியால் பாதிக்கப்படுவதாக, உலக சுகாதார நிறுவனம் ஓர் அச்சுறுத்தும் கணக்கை வெளியிட்டுள்ளது. ஒரு தோராயமான கணக்கின்படி, உலகில் உள்ள மொத்த ''எய்ட்ஸ்'' நோயாளிகளில், 95 சதவீதத்தினர் - மூன்றரை கோடி ''எய்ட்ஸ்'' நோயாளிகள் இந்தியா உள்ளிட்ட ஏழை நாடுகளைச் சேர்ந்தவர்கள். இவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் - அதாவது 2.3 கோடி ''எய்ட்ஸ்'' நோயாளிகள் ஆப்பிரிக்க நாடுகளில் சாவை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஒரு சாபக்கேடு போல ஆப்பிரிக்க நாடுகளைப் பிடித்தாட்டும் ''எய்ட்ஸ்'' நோயைக் கட்டுப்படுத்துவதற்காக தென் ஆப்பிரிக்க அரசு, தனது மருந்து தயாரிப்பு சட்ட விதிகளில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்தது. இதன்படி, தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த உள்நாட்டுத் தொழில் நிறுவனங்கள் ''எய்ட்ஸ்'' நோய்க்கான மருந்துகளைத் தயாரிப்பதற்கு அனுமதிக்கப்பட்டன. தென் ஆப்பிரிக்க அரசு இச்சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கான தயாரிப்புகளில் இருந்தபொழுதே, அமெரிக்கா, இச்சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரக்கூடாது என தென் ஆப்பிரிக்காவை எச்சரித்ததோடு, தென் ஆப்பிரிக்காவில் இருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் மீதான சுங்க வரியை உயர்த்தியது. இதையும் மீறிக் கொண்டு வந்தால், சூப்பர் 301 வர்த்தகத் தடைச் சட்டம் பாயும் எனவும் எச்சரித்தது. இச்சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டவுடன், எய்ட்ஸ் நோய்க்கான மருந்துகளைத் தயாரிக்கும் சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, அமெரிக்கா நாடுகளைச் சேர்ந்த பன்னாட்டு மருந்து நிறுவனங்கள், இத்திருத்தத்தை நீக்கக் கோரி தென் ஆப்பிரிக்க நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தன.

சுதந்திரமான நாடாக அறியப்படும் தென் ஆப்பிரிக்கா, தனது நாட்டைச் சேர்ந்த எய்ட்ஸ் நோயாளிகளைக் காப்பாற்றுவதற்காக மருந்து தயாரிக்க முன் வருவதைப் பார்த்து, அமெரிக்கா ஏன் எரிச்சல் அடைய வேண்டும்? தாராளமயம் போட்டியை வரவேற்கிறது எனக் கூறும் பன்னாட்டு நிறுவனங்கள், தென் ஆப்பிரிக்க அரசை எதிர்த்து ஏன் வழக்கு தொடுக்க வேண்டும்? இதற்கு, அமெரிக்காவும், பன்னாட்டு நிறுவனங்களும், அறிவுசார் சொத்துடமை காப்பு விதிகளைத் தூக்கிக் காட்டுகின்றன.

''எய்ட்ஸ்'' நோய்க்கான மருந்து தயாரிப்பில், அமெரிக்காவின் ஃபைசர் (Pfizer) இங்கிலாந்தின் கிளாஸ்கோ உள்ளிட்ட ஐந்து பன்னாட்டு நிறுவனங்கள் தான் முன்னணியில் இருப்பதோடு, தங்களின் மருந்துகளுக்குக் காப்புரிமையும் பெற்றுள்ளன. ஒரு எய்ட்ஸ் நோயாளி இந்நிறுவனங்களின் மருந்துகளை வாங்குவதற்கு, ஆண்டொன்றுக்கு குறைந்தபட்சமாக இரண்டு லட்ச ரூபாய் செலவு செய்ய வேண்டும். ஆனால், ஆப்பிரிக்காவில் வாழும் ஏழை மக்களின் ஆண்டுச் சராசரி வருமானமே 17,000 ரூபாய் தான். இதனால்தான், தென் ஆப்பிரிக்க அரசு, இந்தியாவைச் சேர்ந்த ''சிப்லா'' என்ற நிறுவனத்தோடு கூட்டுச் சேர்ந்து, எய்ட்ஸ் நோய்க்குக் குறைந்தவிலையில் மருந்து தயாரிக்க முன் வந்தது. தென் ஆப்பிரிக்காவின் இந்த முயற்சிக்கு அமெரிக்காவும், பன்னாட்டு நிறுவனங்களும் கூட்டாகச் சேர்ந்து தடை போடுவது, அவற்றின் பொருளாதார ஆதிக்கத்தை மட்டும் காட்டவில்லை; எய்ட்ஸ் நோயாளிகளின் உயிரோடு விளையாடும் ஈவிரக்கமற்ற அகம்பாவத்தையும் எடுத்துக் காட்டி விட்டது.

தென் ஆப்பிரிக்காவை மட்டுமல்ல, தங்கள் நாட்டு ''எய்ட்ஸ்'' நோயாளிகளைக் காப்பாற்ற, குறைந்த விலையில் ''எய்ட்ஸ்'' மருந்துகளைத் தயாரித்த / தயாரிக்க முயன்ற இந்தோனேசியா, தாய்லாந்து, பிரேசில் நாடுகளும் கூட, அமெரிக்காவால் மிரட்டப்படுகின்றன. ''எய்ட்ஸ்'' நோய்க்காக அமெரிக்காவின் பைசர் நிறுவனம் தயாரிக்கும் ''ஃப்ளுகான்சோல்'' என்ற (ஒரு) மாத்திரையின் விலை 560 ரூபாய். இதே மாத்திரையை தாய்லாந்து தயாரித்து, ஒரு மாத்திரையை 23 ரூபாய்க்கு விற்கிறது. தனது மாத்திரையின் விலையைக் குறைக்க மறுக்கும் ஃபைசர் நிறுவனம், தாய்லாந்து காப்புரிமை விதிகளை மீறிவிட்டதாகக் கூறி, அந்நாட்டின் மீது சூப்பர் 301 வர்த்தகத் தடைச்சட்டத்தை ஏவிவிட, அமெரிக்க அரசை நிர்ப்பந்தித்து வருகிறது. தாய்லாந்தைப் போல், எய்ட்ஸ் நோய்க்குக் குறைந்த விலையில் மருந்துகள் தயாரித்து வரும் பிரேசில் நாட்டின் மீது அமெரிக்காவும், ஐரோப்பியக் குழும நாடுகளும் உலக வர்த்தகக் கழகத்தில் வழக்கு


படிப்பகம்

www.padippakam.com

தொடுத்துள்ளன. இந்த வழக்கில், பன்னாட்டு நிறுவனங்களைக் காட்டிலும் குறைந்த விலையில் ''எய்ட்ஸ்'' நோய் மருந்துகளைத் தயாரித்து வரும் இந்தியா உள்ளிட்ட நான்கு நாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த நாடுகள் அமெரிக்காவையும், பன்னாட்டு நிறுவனங்களையும் பகைத்துக் கொண்டு ''எய்ட்ஸ்'' நோய்க்கான மருந்து உற்பத்தியில் ஈடுபடவில்லை. இந்தியாவைப் பொருத்தவரை, 2005-ஆம் ஆண்டில்தான், மருந்து உற்பத்தியில் காப்புரிமை விதிகள் முழுமையாக நடைமுறைக்கு வருகின்றன. அதுவரை, பன்னாட்டு நிறுவனங்கள் காப்புரிமை பெற்ற மருந்துகளை உள்நாட்டில் தயாரித்துக் கொள்ளலாம். ஆனால், இந்தியா அந்த மருந்துகளை பெயரிடப்படாத த/நா. மாத்திரைகளைப் போல விற்கலாமேயொழிய, அதற்கு வர்த்தகப் பெயர் கோர முடியாது; காப்புரிமை பெற முடியாது; வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியாது. அதனால்தான் எய்ட்ஸ் மருந்துகளைத் தயாரிக்கும் இந்தியாவின் சிப்லா நிறுவனம், ''நாங்கள் ராயல்டி தருகிறோம்; தென் ஆப்பிரிக்காவுக்கு மூல மருந்துகளை ஏற்றுமதி செய்ய அனுமதியுங்கள்'' எனப் பன்னாட்டு நிறுவனங்களைக் கெஞ்சிக் கொண்டிருக்கிறது. இதுதான் ஏகாதிபத்தியங்கள் திணிக்கும் உலகமயத்தின் முக விலாசம்.

அறிவுசார் சொத்துடமை காப்புரிமை விதிகளைப் பொருத்தமட்டில் உலக வர்த்தகக் கழகம், ''ஓர் அவசர காலத்தில், உறுப்பு நாடுகள், தங்களுக்குத் தேவைப்படும் பொருட்களை, அப்பொருட்களின் மீது காப்புரிமை பெற்றிருக்கும் நிறுவனத்தின் அனுமதியின்றி, உள்நாட்டிலேயே தயாரித்துக் கொள்ளலாம்'' என்ற சலுகையைத் தனது உறுப்பு நாடுகளுக்கு வழங்கியிருக்கிறது. இந்த சலுகையைப் பயன்படுத்திக் கொண்டுதான் தென் ஆப்பிரிக்கா தனது நாட்டிலேயே காப்புரிமை கொடுக்கப்பட்ட எய்ட்ஸ் மருந்துகளைத் தயாரிக்க முயன்றது; பிரேசிலும், தாய்லாந்தும் தயாரித்து வருகின்றன.

ஆனால், அமெரிக்கா, இந்த நாடுகளின் மீது வர்த்தகத் தடைச் சட்டம் பாயும் எனக் குறுக்கு வழியில் மிரட்டுவதன் மூலமும், உலக வர்த்தகக் கழகத்தில் வழக்கு தொடுத்து, இந்த நாடுகள் உற்பத்தி செய்வதை முடக்குவதன் மூலமும், இந்தச் சலுகைகளைச் செல்லாக் காசாக்கி விட்டது.

பன்னாட்டு மருந்து நிறுவனங்களை எதிர்த்து ஆப்பிரிக்க நாடுகளில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டங்கள், எய்ட்ஸ் நோயாளிகளின் உயிரோடு விளையாடும் ஏகாதிபத்தியங்களின் அகம்பாவ, அடாவடித்தனத்தை உலகெங்கும் அம்பலப்படுத்தின.

இதன்பின், பன்னாட்டு நிறுவனங்கள் ஆப்பிரிக்க நாடுகளில் தங்களின் மருந்தை பழைய விலையில் இருந்து 90 சதவீதம் குறைத்து விற்கப் போவதாக அறிவித்தன. ''மேற்கத்திய பன்னாட்டு நிறுவனங்களிடம் இருந்துதான் மருந்து வாங்க வேண்டும்'' என்ற நிபந்தனையோடு, ஆப்பிரிக்க நாடுகளுக்கு அமெரிக்க அரசு 450 கோடி ரூபாய் கடனும், உலக வங்கி 2,250 கோடி ரூபாய் கடனும் தர முன் வந்தன. இரண்டரை கோடி எய்ட்ஸ் நோயாளிகள் இருக்கும் ஆப்பிரிக்கச் சந்தையில் ஏழை நாடுகளோ, ஆப்பிரிக்காவின் உள்நாட்டு நிறுவனங்களோ புகுந்து விடக் கூடாது என்ற உள்நோக்கத்தோடு அறிவிக்கப்பட்ட இந்த ''இரக்கக் கடனை'' ஆப்பிரிக்க நாடுகள் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டன.

ஏழை நாட்டு மக்களால் வாங்க முடிகிறதோ இல்லையோ, எய்ட்ஸ் நோய்க்கு மருந்து இருக்கிறது. ஆனால், ஏழை நாட்டு மக்களைத் தாக்கும் சில வகை உயிர்க் கொல்லி நோய்களுக்கு மருந்தே கிடையாது.

உதாரணமாக, ஆப்பிரிக்க நாடுகளைத் தாக்கும் ஒருவிதத் ''தூக்க நோய்'' மூளையைத் தாக்கிவிட்டால், பிறகு மரணம்தான். புற்று நோய்க்கு மருந்து கண்டுபிடிக்க நடந்த ஆராய்ச்சியின்பொழுது எதிர்பாராதவிதமாக இந்த நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இம்மருந்து விற்பனையில் பெரிய அளவு இலாபம் இல்லாததால், இந்த நோய்க்கான மருந்து தயாரிப்பதையே பன்னாட்டு நிறுவனங்கள் நிறுத்திவிட்டன. இதனால் ஒவ்வொரு ஆண்டும் இந்த நோய் தாக்கிய முப்பதாயிரம் ஆப்பிரிக்க மக்கள் மருந்தில்லாமல் துடிதுடித்துச் சாவது உறுதிப்படுத்தப்பட்டு விட்டது.


ஒழிந்து போனதாகக் கூறப்பட்ட மலேரியாவின் இடத்தை, மனிதர்களின் மூளையைத் தாக்கிக் கொல்லும் புதுவகை மலேரியா நோய் பிடித்துவிட்டது. இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் பரவலாகக் காணப்படும் இந்நோய் பற்றிய குறிப்புகள் கூட, உலக சுகாதார நிறுவனத்திடம் கிடையாது.

காசநோய் பற்றி கடந்த முப்பது வருடங்களாக புதிய ஆராய்ச்சி எதுவும் செய்யப்படாததால், மருந்துக்குக் கட்டுப்படாத புதிய காசநோய் பரவி வருகிறது. எய்ட்ஸ் நோய்க்குத் தரப்படும் முக்கியத்துவம், விழிப்புணர்வு, இந்த நோய்களுக்குத் தரப்படுவதில்லை. ஏனென்றால், இந்த நோய்கள் மேற்கத்திய நாட்டு மக்களைத் தாக்குவதில்லை என்ற காலனிய ஆதிக்க மனோபாவம்தான் அதற்குக் காரணம்.

ஏழை நாடுகள், தொழில் நுட்பத்திற்கும், மூலதனத்திற்கும் ஏகாதிபத்தியங்களிடம் கையேந்தி நிற்பது முடிவுக்கு வராதவரை; ஏழை நாடுகளில் சுயசார்பு பொருளாதாரத்தைக் கட்டியமைக்கக் கூடிய திறன் கொண்டு ஏகாதிபத்திய எதிர்ப்பு - ஜனநாயக அரசுகள் தோன்றாதவரை, ஏழை நாட்டு மக்களின் வாழ்நாளைத் தீர்மானிப்பது கூட பன்னாட்டு நிறுவனங்களாகத் தான் இருக்கும்; மக்கள் நம்பிக் கொண்டிருப்பது போல, கடவுளிடம் கூட அந்த உரிமை இருக்காது!

ரஹீம்

**பன்னாட்டு மருந்துக் கம்பெனிகளின் பகற்கொள்ளைக்கு எதிராக தென்னாப்பிரிக்காவின் தலைநகர் பிரிடோரியாவில் நடந்த மாபெரும் ஆர்ப்பாட்டம்.**



www.padippakam.com

# வீதியில் ஒப்பந்தத் தொழிலாளி... பீதியில் நிரந்தரத் தொழிலாளி!

**டி.ஐ. சைக்கிள் நிர்வாகத்தால் ஒரே நாளில் வேலை நீக்கம் செய்யப்பட்ட 550 நிரந்தரமற்ற தொழிலாளர்களுக்கு நேர்ந்த கதி, நாளை நிரந்தரத் தொழிலாளிக்கு ஏற்படாது என்பதற்கு எந்த உத்திரவாதமும் கிடையாது.**

சென்னையில் இயங்கிவரும் பிரபலமான தொழிற்சாலையொன்றில் நடந்த சம்பவம் இது. அத்தொழிற்சாலையில் நிர்வாகம் நடத்தி வரும் உணவு விடுதிக்குச் சாப்பிடச் சென்ற ஒரு தொழிலாளி, ''இட்லி ஏம்ப்பா இப்படி இளைச்சுப் போச்சு'' என கேண்டீன் ஊழியர்களிடம் நக்கலாகக் கேட்டிருக்கிறார். சம்பவம் நடந்த மறுநாள் அந்தத் தொழிலாளியை அழைத்துப் பேசிய நிர்வாகம், ''இட்லியெல்லாம் இனிமேல் இப்படித்தான் இருக்கும்; அதையெல்லாம் தட்டிக் கேட்டுக்கிட்டிருந்தா, உன்னை வீ.ஆர்.எஸ்.இல் (விருப்ப ஓய்வூதியத் திட்டம்) வெளியே அனுப்பிச்சிடுவோம்'' என மிரட்டி அனுப்பி விட்டது.

''ஹெர்குலிஸ்'', ''பி.எஸ்.ஏ.'' என்ற ''தரமான'' மிதிவண்டிகளைத் தயாரிக்கும் டி.ஐ. மிதிவண்டி நிறுவனம், தனது தொழிலாளர்களை நடத்தும தரம் இதுதான். ''இட்லி ஏன்யா இப்படி மெலிஞ்சு போச்சு'' எனக் கேட்ட நிரந்தரத் தொழிலாளியை வீட்டுக்கு விரட்டி விடுவோம் என மிரட்டிய நிர்வாகம், பயிற்சி தொழிலாளர்கள் தங்களை நிரந்தரம் செய்ய வேண்டும் எனக் கோரிப் போராடினால் சும்மா விட்டு விடுமா?

டி.ஐ. மிதிவண்டி நிறுவனத்தில் வேலை பார்த்து வந்த 550 பயிற்சித் தொழிலாளர்கள், ''தங்களை நிரந்தரம் செய்ய வேண்டும்'' என்று கேட்ட ஒரே காரணத்திற்காக, நிர்வாகத்தால் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி, இரவோடு இரவாக, இரகசியமாக வேலையை விட்டுத் துரத்தியடிக்கப்பட்டனர். இந்த 550 தொழிலாளர்களும் ஏதோ ஒன்றிரண்டு வருடங்கள் வேலை செய்துவிட்டு தங்களை நிரந்தரம் செய்யக் கோரவில்லை. இவர்கள் அனைவரும் பத்து முதல் பன்னிரெண்டு ஆண்டுகளாக டி.ஐ. சைக்கிள் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தவர்கள். 240 நாட்கள் தொடர்ச்சியாக வேலை பார்த்த தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்கிறது சட்டம். ஆனால், டி.ஐ. மிதிவண்டி நிர்வாகமோ, பத்து, பன்னிரெண்டு ஆண்டுகள் வேலை பார்த்த தொழிலாளர்களை, ஒரே அடியில் வேலை நீக்கம் செய்துவிட்டு, சட்டத்தைக் கழிப்பறைக் காகிதமாகக் காட்டிவிட்டது.

''முத்தரப்பு பேச்சு வார்த்தைக்கு ஏன் வரவில்லை?'' என்று டி.ஐ. நிர்வாகத்தைத் தட்டிக் கேட்கக் கூடத் துப்பில்லாமல் கிடக்கிறது தமிழக அரசு. எட்டு மாதங்களுக்கும் மேலாகப் போராட்டம் நீடித்துக் கொண்டே போவதால், மூவாயிரம் ரூபாய் வரை சம்பளம் வாங்கிய டி.ஐ. சைக்கிள் தொழிலாளர்கள், இப்பொழுது அம்பத்தூர் எஸ்டேட்டில் ஆயிரம் ரூபாய் சம்பளத்திற்கு வேலை கிடைக்குமா எனத் தேடி அலைகிறார்கள். ராஜசேகர் என்ற தொழிலாளியின் மனைவி, எட்டு மாதங்களாகத் தொடரும் வறுமைக் கொடுமையைச் சகித்துக் கொள்ள முடியாமல், தற்கொலை செய்து கொண்டு விட்டதாக, தொழிற்சங்க நிர்வாகிகள் கூறுகின்றனர்.

பயிற்சித் தொழிலாளர்களை நிரந்தரம் செய்யாமல், அதே சமயம், ''இன்று ரொக்கம்; நாளை கடன்'' என்ற பாணியில் அவர்களுக்கு நிரந்தரம் என்ற ஆசை காட்டியே, அவர்களைக் கசக்கிப் பிழிவதை டி.ஐ. நிர்வாகம் தனிக் கலையாகவே வளர்த்துள்ளது. டி.ஐ. தொழிற்சாலையில் முதன் முதலாக வேலையில் சேரும் தொழிலாளர்கள் ''டிக்கெட் நம்பர்'' என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு ஏழரை மாதங்கள் வரைத் தொடர்ச்சியாக வேலை கொடுக்கும் நிர்வாகம், அதன்பின் அவர்களை இரண்டு, மூன்று நாட்களுக்கு வேலையில் இருந்து நீக்கி விடும். பின் மீண்டும் வேலையில் சேர்த்து, ஏழரை மாதங்கள் முடிந்தவுடன் வேலையிலிருந்து நீக்கி விடும். இப்படி குறைந்தது ஆறேழு முறை ஏழரை மாத வேலைத் திட்டம் முடிந்தவுடன் அத்தொழிலாளர்களுள் திறமையானவர்களையும், விசுவாசமாக உழைப்பவர்களையும் பொறுக்கியெடுத்து, பயிற்சியாளர்களாகச் சேர்த்துக் கொள்ளும்.

மூன்று ஆண்டுகள் பயிற்சிக் காலம் முடிந்த பிறகு, பயிற்சித் தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்பது நிர்வாகமே ஏற்றுக் கொண்ட சட்ட விதிமுறை. இதன்படி, இன்று தெருவில் நிற்கும் 550 பயிற்சித் தொழிலாளர்களும் 1997-ஆம் ஆண்டே நிரந்தரமாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், நிர்வாகமோ, ''கம்பெனி நட்டத்தில் நடப்பதாகக்'' கூறி, பயிற்சிக் காலத்தை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டியது. சட்ட விரோதமான இந்தப் பயிற்சிக் காலத்தை, ''பல்திறமைப் பயிற்சி'' எனப் பெயரிட்டு, நியாயப்படுத்தியது. இரண்டு ஆண்டுகள் பயிற்சி 1999-இல் முடிந்த பின்னும் நிரந்தரம் செய்யாமல், மேலும் ஓராண்டுப் பயிற்சிக்கு உத்தரவிட்டது.

இந்த ஓராண்டு பயிற்சியும் முடிவடைந்து, பயிற்சித் தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டிய தருணத்தில், புதிதாக 550 தொழிலாளர்களை ''கம்பெனி அப்ரெண்டிஸாக'' நியமித்தது, நிர்வாகம். அதேசமயம் 50 பயிற்சித் தொழிலாளர்களைத் திடீரென தடாலடியாக வேலையை விட்டு நீக்கியது. தங்களை நிரந்தரம் செய்யாமல், படிப்படியாக வேலையை விட்டு நீக்க நிர்வாகம் சதி செய்வதைப் புரிந்து கொண்ட பயிற்சித் தொழிலாளர்கள் 20.11.2000 அன்று

**வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் நடத்தும் தொடர் உண்ணாவிரதப் போராட்டம்: மீண்டும் தொழிற்சங்கவாத செக்கு மாட்டுப் பாதைதானா?**




படிப்பகம்

www.padippakam.com

உள்ளிருப்பு வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடங்கினர். காலை ஷிப்டில் தொடங்கிய உள்ளிருப்பு வேலை நிறுத்தம் இரவு ஷிப்டிலும் தொடர்வதைப் பார்த்து அரண்டு போன நிர்வாகம் அதிரடி போலீசை வரவழைத்து மிரட்டியும், ''நாளை பேசலாம்'' என நைச்சியமாகப் பேசியும் போராட்டத்தை உடைத்தது. மறுநாள், ''பேச்சு வார்த்தை'' என்ற நம்பிக்கையோடு தொழிலாளர்கள் வர, நிர்வாகமோ பயிற்சித் தொழிலாளர்கள் அனைவரையும் வேலையிலிருந்து நீக்கும் உத்தரவை தகவல் பலகையில் கூட ஒட்டாமல், தொழிலாளர்களின் வீடுகளுக்கு அனுப்பி வைத்தது.

டி.ஐ. சைக்கிள் தொழிற்சாலையில் நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்டு இயங்கி வரும் ஒரே தொழிற்சங்கம், காங்கிரசின் ஐ.என்.டி.யு.சி. தான். இத்தொழிற்சங்கத்தின் தலைவராக இருக்கும் காலன், பல ஆண்டுகளுக்கு முன்பு இதே தொழிற்சாலையில் சாதாரண தொழிலாளியாக வேலை பார்த்தவர். 1978-இல் நிரந்தரத் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்த பொழுது, ஐந்தாம் படையாக, கருங்காலி வேலை செய்தவர். பல ஆண்டுகளாக நிர்வாகத்திற்கு கைக்கூலியாக வேலை செய்ததால், இன்று பல இலட்சங்களுக்கு அதிபதி. இந்தக் கைக்கூலி, பயிற்சித் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்திடம் பேசி மீண்டும் வேலை வாங்கித் தருவதாகக் கூறி இழுத்தடித்து விட்டு, இறுதியில், ''உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாதவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் இழப்பீடு; வேலை நிறுத்தம் செய்தவர்களுக்கு வேலையும் கிடையாது; இழப்பீடும் கிடையாது'' என முதுகில் குத்தினார்.

ஐ.என்.டி.யு.சி. தங்களைத் தற்கொலைப் பாதைக்குத் தள்ளுவதைப் புரிந்து கொண்ட தொழிலாளர்கள், அத்துரோகிகளைப் புறக்கணித்து விட்டு, விடுதலைச் சிறுத்தைகளின் உதவியை நாடினர். அவ்வமைப்பின் ஆதரவோடு, பிப்ரவரி 15-ஆம் தேதி தொழிற்சாலையை முற்றுகையிடும் போராட்டத்தை நடத்தினர். அப்போராட்டத்தின் பொழுது போலீசு நடத்திய தாக்குதலில், 20 தொழிலாளர்கள் படுகாயமடைந்ததோடு, போராடிய தொழிலாளர்கள் சட்டவிரோதக் காவலில் சிறை வைக்கப்பட்டனர்; இதன் பின், மார்ச் 12 அன்று ஆர்ப்பாட்ட பேரணி நடத்தப்பட்டு, தமிழக முதல்வரிடம் மனு கொடுக்கப்பட்டது, 3.8.20001 தொடங்கி 14.8.2001 முடிய வேலையிழந்த தொழிலாளர்கள் தங்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர்.

கடந்த எட்டு மாத காலத்தில் பயிற்சித் தொழிலாளர்களின் மத்தியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும், டி.ஐ. சைக்கிள்ஸ் நிர்வாகத்திற்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தைகள் அனைத்தும் தோல்வியில் முடிந்து விட்டன. பேச்சு வார்த்தையின் துவக்க கட்டத்தில் ''மீண்டும் தங்களை வேலையில் சேர்த்து நிரந்தரமாக்க வேண்டும்'' என்ற கோரிக்கையில் உறுதியாக இருந்த தொழிலாளர்கள், தற்சமயம் எவ்வளவுக்கு எவ்வளவு நஷ்ட ஈடு அதிகமாக கிடைக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு நல்லது என்ற நிலைக்கு இறங்கி வந்து விட்டனர். 14.8.2001 அன்று நடந்த பேச்சு வார்த்தையில் நிர்வாகம் எல்லா பயிற்சித் தொழிலாளர்களுக்கும் நாற்பதாயிரம் ரூபாய் நட்ட ஈடு தருவதாகக் கூற, விடுதலைச் சிறுத்தைகளால் வழிகாட்டப்படும் தொழிலாளர்கள் இரண்டரை லட்ச ரூபாய் நட்ட ஈடாகக் கேட்டனர். தற்பொழுது, இந்த இழுபறியை தொழிலாளர் நல ஆணையரின் முன்பு வைத்துப் பேசிக் கொள்வது என முடிவெக்கப்பட்டுள்ளது.

வேலையிழந்து நிற்கும் பயிற்சித் தொழிலாளர்கள் தங்களின் கோரிக்கையில் சறுக்கி விழுந்ததற்குக் காரணம் என்ன? நிரந்தரத் தொழிலாளர்கள், பயிற்சித் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை வெளிப்படையாக ஆதரிக்காமல், தயங்குவது ஏன்? காங்கிரசின் ஐ.என்.டி.யு.சி.யும், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பும் இரு வேறு துருவங்கள் என்ற போதும், பயிற்சித் தொழிலாளர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்த இரு அமைப்புகளுக்கு இடையே என்ன பெரிய வேறுபாடு இருக்கிறது? காலன் நட்டஈடாக பத்தாயிரம் ரூபாய் வாங்கித் தருவதாகக் கூறினார்; விடுதலைச் சிறுத்தைகளால் வழிகாட்டப்படும் பயிற்சித் தொழிலாளர்களோ இரண்டரை லட்ச ரூபாய்க்கு பேரம் நடத்துகிறார்கள். இந்தத் தொகை வேறுபாடுதான் காரிய சாத்தியமான, நாணயமான தீர்வா?

**பாதிக்கப்பட்ட பயிற்சித் தொழிலாளர்களுக்கு ஐ.என்.டி.யு.சி-யின் காலன் நட்ட ஈடாக பத்தாயிரம் ரூபாய் வாங்கித் தருவதாகக் கூறினார்; விடுதலைச் சிறுத்தைகளால் வழிகாட்டப்படும் பயிற்சித் தொழிலாளர்களோ இரண்டரை இலட்ச ரூபாய்க்கு பேரம் நடத்துகிறார்கள். இந்தத் தொகை வேறுபாடுதான் காரிய சாத்தியமான, நாணயமான தீர்வா?**

இந்தக் கேள்விக்கான விடைகள், தாராளமயத்திற்குப் பிறகு, டி.ஐ. சைக்கிள்ஸ் போன்ற பெரிய தொழிற்சாலைகளில், உற்பத்தியும் தொழிலாளர்களை நிர்வகிக்கும் முறையும் எப்படி நடைபெறுகிறது என்பதைப் புரிந்து கொள்வதில்தான் இருக்கிறது. டி.ஐ. சைக்கிள்ஸ் நிறுவனத்தில் 1980-இல் 2000 நிரந்தரத் தொழிலாளர்கள் வேலை பார்த்து வந்தனர்; இப்பொழுது அத்தொழிற்சாலையில் நிரந்தரத் தொழிலாளர்களின் எண்ணிக்கை வெறும் 760 தான்; பயிற்சித் தொழிலாளர்களையும் சேர்த்து மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1310 தான். 1980இல் 2000 தொழிலாளர்களை வைத்து நாளொன்றுக்கு 3000 மிதிவண்டிகளைத் தயாரித்த டி.ஐ. நிர்வாகம், இப்பொழுது 1300 தொழிலாளர்களை வைத்து நாளொன்றுக்கு 7000 மிதிவண்டிகளைத் தயாரிக்கிறது. தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கு எதிர் விகிதத்தில் உற்பத்தி அதிகரிப்பிற்குக் காரணம், நவீனத் தொழில் நுட்பம் மட்டுமல்ல; பெரும்பாலான உதிரி பாகங்களை காண்டிராக்டு முறையில் வெளியே தயாரித்து வந்து, தொழிற்சாலையை வெறும் இணைப்புக் கூடமாக **(assembling unit)** மாற்றுவது மூலம் தான், குறைந்த தொழிலாளர்கள் - அதிக உற்பத்தி என்ற 'சாதனையை' எட்டிப் பிடிக்கிறார்கள்.

இந்த 'காண்டிராக்டு' உற்பத்தி முறை முதலாளிகளுக்கு அதிக இலாபம் தருவதாகவும் தொல்லை இல்லாமலும் இருப்பதால்தான், டி.ஐ. சைக்கிள்ஸ் போன்ற பெரிய நிறுவனங்கள் நிரந்தரத் தொழிலாளர்களை வீ.ஆர்.எஸ். மூலம் வீட்டிற்கு அனுப்பிவிட மும்முரமாக இருக்கின்றன. வீ.ஆர்.எஸ். பீதியால்தான், நிரந்தரத் தொழிலாளி, பயிற்சித் தொழிலாளியின் கோரிக்கையை ஆதரிக்கத் தயங்குகிறான். நிரந்தரத் தொழிலாளியின் பீதியைப் பார்க்கும் பயிற்சித் தொழிலாளி, தனது நிரந்தர கோரிக்கையை மூட்டை கட்டி வைத்து விட்டு, நட்ட ஈடே புத்திசாலித்தனம் எனச் சறுக்கி விழுகிறான்.

தாராளமயத்திற்குப் பிறகு நிரந்தரத் தொழிலாளி, நிரந்தரமற்ற தொழிலாளி என்பதற்கு இடையே எவ்விதப் பெருத்த வேறுபாடும் கிடையாது. வேலையிழந்த பயிற்சித் தொழிலாளர்கள், ''மீண்டும் வேலை கொடு'' என்பதோடு, ''காண்டிராக்டு உற்பத்தி முறையைத் தடை செய்'' என்ற முழக்கத்தையும் முன் வைத்திருக்க வேண்டும். இந்த முழக்கம்தான் பயிற்சித் தொழிலாளர்களையும், நிரந்தரத் தொழிலாளர்களையும் போராட்டத்தில் ஒன்று படுத்தி, அவர்களின் கோரிக்கை நிறைவேறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கும்.

மேலும் இன்று தொழிலாளி வர்க்கம் சாதாரண பொருளாதாரப் போராட்டங்களில் வெற்றி பெறுவதற்குக் கூட, புரட்சிகர வர்க்க உணர்வும், அரசியல் உணர்வும் பெறுவதும், பரந்து விரிந்த அளவில் தொழிலாளர்களை ஐக்கியப்படுத்துவதும் அவசியமாகிறது. சட்டமன்றத்துக்குள் அடங்கிப் போய்விட்ட விடுதலைச் சிறுத்தைகள் போன்ற அமைப்புகளால் இதைச் சாதிக்க முடியாது. அதற்குப் புரட்சிகரத் தொழிற்சங்கங்களின் துணை அவசியம் தேவை!

**தகவல்:**
**— புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, சென்னை.**

www.padippakam.com

# முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.

முதலாளித்துவ - ஏகாதிபத்திய நாடுகள் உட்பட உலகம் முழுவதுமுள்ள திருத்தல்வாதக் கம்யூனிசக் கட்சிகளைப் போலவே, முன்னாள் சோசலிச நாடுகளில் மறுபிறப்பு எடுத்துள்ள கம்யூனிச துரோகக் கட்சிகளையும் கூட அங்கீகரித்து, அதிகாரபூர்வ உறவை சி.பி.(எம்) கட்சி மேற்கொண்டுள்ளது. **இந்தக் கட்சிகளெல்லாம் உண்மையான கம்யூனிஸ்டு கட்சிகள்தானா, இவை பின்பற்றும் சித்தாந்தம் மார்க்சிசம் - லெனினிசம் தானா, இக்கட்சிகள் அந்நாடுகளின் பாட்டாளி வர்க்க முன்னணிப்படைதானா** என்பதைப் பற்றியெல்லாம் சி.பி.(எம்) கட்சி கணக்கில் எடுத்துக் கொள்ளவோ, பரிசீலிக்கவோ கிடையாது.

இந்தக் கட்சிகள் பலவும், டாங்கேயிச திருத்தல்வாதக் கட்சி என்று சி.பி.(எம்) கேலி செய்த சி.பி.ஐ. போன்றவைதாம். மேலும் இக்கட்சிகள் பலவும் லெனினிசத்தையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரக் கோட்பாட்டையும் உதறி விட்டதாக அறிவித்தவை. இது பற்றியெல்லாம் சி.பி.(எம்) கட்சி கவலையோ, அக்கறையோ கொள்ளவில்லை. காரணம், சி.பி.(எம்) கட்சியும் அப்படிப்பட்டதுதான்.

அதேபோல, சீனா, வியத்நாம், கியூபா, வடகொரியா ஆகிய நான்கு நாடுகளையும் சோசலிச நாடுகள் என்று அங்கீகரித்து, அந்நாடுகளுடனும் கட்சிகளுடனும் அதிகாரபூர்வ உறவு கொண்டிருப்பதை, சி.பி.(எம்) கட்சி பெருமையாகப் பீற்றிக் கொள்ளுகிறது. இந்நாடுகளை சோசலிச நாடுகள்தாம் என்று வரையறுப்பதற்குரிய சோசலிச சமுதாய, அரசியல், பொருளாதார, பண்பாட்டுக் கூறுகள் என்னவெல்லாம் அங்கே இருக்கின்றன என்பதைப் பற்றி சி.பி.(எம்) கவலையோ, அக்கறையோ கொள்ளவில்லை. சோவியத் ஒன்றியம் மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோசலிசம் வீழ்ச்சியுறக் காரணமாக அமைந்த பாரிய தவறுகள் பற்றி சி.பி.(எம்) கட்சியின் 14-வது காங்கிரசு விளக்கமளித்துள்ளது. அப்படிப்பட்ட பாரிய தவறுகள் இன்னாள் சோசலிச நாடுகள் எவ்வாறு திருத்திக் கொண்டுள்ளன என்று ஒப்பீடு ரீதியிலான விளக்கமும் அளிக்கவில்லை.

அதற்கு மாறாக முன்னாள் சோசலிச நாடுகளின் வீழ்ச்சிக்கு வெகு காலம் முன்பிருந்தே இந்நாடுகள், குறிப்பாக சீனா சரியான பாதையில் சோசலிச நிர்மாணத்தில் ஈடுபட்டு வந்ததாக சி.பி.(எம்) கட்சி சாதிக்கிறது. இன்னும் ஒரு படி மேலேபோய் 1978-இல் டெங்சியாவோ பெங் கொண்டு வந்த புதிய பொருளாதாரக் கொள்கைகளில் இருந்து சரியான கண்ணோட்டத்தைக் கற்றுக் கொண்ட சோவியத் ஒன்றியமும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் ஒரு முக்கிய மாறுதலுடன் அதைப் பின்பற்றின. இந்த மாறுபாடுதான் முன்னாள் சோசலிச நாடுகளின் சோசலிசத்திற்கு பயங்கரமான பின்னடைவை ஏற்படுத்தி விட்டது என்று, சி.பி.(எம்) கட்சியின் மறைந்த சித்தாந்த குரு ஈ.எம். சங்கரன் நம்பூதிரிபாடு கூறுகிறார்.

சீனாவில் ''சந்தை சோசலிசம்'' என்ற பெயரில் முதலாளித்துவத்தைப் புகுத்திய டெங்சியாவோ பெங்.



**சீனா, வியத்நாம், கியூபா, வடகொரியா ஆகிய நாடுகளை, சோசலிச நாடுகள்தாம் என்று வரையறுப்பதற்குரிய சோசலிச சமுதாய, அரசியல், பொருளாதார, பண்பாட்டுக் கூறுகள் என்னவெல்லாம் அந்நாடுகளில் இருக்கின்றன என்பதைப் பற்றி சி.பி.(எம்) கவலையோ, அக்கறையோ கொள்ளவில்லை.**

*''1978-ல் தான் டெங்சியாவோ பெங் தலைமையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு புதிய பொருளாதாரக் கொள்கையை உருவாக்கியது. விவசாய மக்களுக்கும் இதர உழைப்பாளி வர்க்கத்தினருக்கும் மிக அதிகமான ஊக்கமளிப்பது; அதற்காக சந்தைச் சக்திகளைப் பயன்படுத்துவது; அதே நேரத்தில் சந்தைச் சக்திகளைக் கட்டுப்பாடில்லாமல் கட்டவிழ்த்துவிட்டு சோசலிச அமைப்பைச் சீர்குலைக்க அனுமதிக்காமல் இருப்பது — இவையனைத்தும் உள்ளிட்ட ஒரு கண்ணோட்டத்தைத் தான் டெங்சியாவோ பெங் உருவாக்கினார்.*

*1978-ல் டெங்சியாவோ பெங் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட இந்தக் கண்ணோட்டத்தைப் பிற்காலத்தில் சோவியத் யூனியனும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் ஒரு முக்கியமான மாறுதலுடன் பின்பற்றின.*

*டெங்சியாவோ பெங் தலைமையிலான பொருளாதார சீர்திருத்தங்கள் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலான மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தின் கட்டமைப்புக்குள் நடைமுறைப்படுத்தப்பட்டது. சந்தைச் சக்திகளை சோசலிச சமூக அமைப்புக்குச் சாதகமான முறையில் பயன்படுத்துவது தான் சீனாவில் நடந்தது.*

*சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், அமுலில் இருந்த தொழிலாளி வர்க்க அரசு அமைப்பைக் கவிழ்த்து முதலாளித்துவ ஜனநாயக அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது. பொருளாதாரத் துறையில் சந்தைச் சக்திகளை முறையாகப் பயன்படுத்தி சோசலிச சமுதாயத்தைப் பலப்படுத்துவதற்குப் பதிலாக அந்த அமைப்பைச் சந்தைச் சக்திகளுக்கு உட்படுத்தினார்கள்.*

*அவ்வாறு சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சோசலிசத்திற்குப் பயங்கரமான பின்னடைவு ஏற்பட்டது. இன்று அவை அமெரிக்காவின்தலைமையிலான ஏகாதிபத்திய சக்திகளைச் சார்ந்து செயல்படுகின்றன. ஆனால், சீனாவின் சோசலிசத்தின் கொடி உயரப் பறக்கிறது.*

*சோசலிசத்தின் கொடி உயர்ந்து பறக்க வேண்டுமானால், வேகமான பொருளாதார முன்னேற்றம் என்ற கண்ணோட்டத்துடன் செயல்பட வேண்டும். ஏழு பத்தாண்டுகளுக்கு*



படிப்பகம்

www.padippakam.com

முன் லெனின் சுட்டிக் காட்டியது போல, உற்பத்தித் திறனிலும், உற்பத்திப் பொருட்கள் கிடைப்பதிலும் முதலாளித்துவத்தைக் காட்டிலும் முன்னேறிச் சென்றால் தான் சோசலிசம் இறுதி வெற்றியடைய முடியும். அதனால் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலான அரசு அமைப்பு இருந்து வருவதுடன் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மிக வேகமாக நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த விசயத்தில்தான் சோவியத் யூனியனும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் தோல்வியடைந்தன. இந்த விசயத்தில் தான் சீனா முன்னேறிக் கொண்டிருக்கிறது'' என்று தேசாபிமானி மலையாள வார இதழில் (23.5.93) நம்பூதிரிபாடு எழுதினார்.

இதன் சாரம் என்ன? விவசாயிகள் உட்பட எல்லா உழைப்பாளி வர்க்கத்தினருக்கும் மிக அதிகமான ஊக்களிக்க வேண்டும். அதற்காக சந்தை சக்திகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதே நேரம் சந்தை சக்திகள் சோசலிச அமைப்பை சீர்குலைக்க அனுமதிக்கக் கூடாது. தொழிலாளி வர்க்க அரசமைப்புக்குள், பொருளாதாரத் துறையில் சந்தைச் சக்திகளை சோசலிச சமூக அமைப்புக்குச் சாதகமான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதைத்தான் 1978-க்குப் பிறகு சீனா பின்பற்றும் டெங்சியாவோ பெங் வகுத்த புதிய பாதை என்று சொல்லும் நம்பூதிரிபாடு, சீனத்தில் தாராளமயமாக்கலுக்கு அன்னிய மூலதனத்தை வரவேற்கும்போது, அன்னிய சீனர்களின் மூலதனத்தையே சார்ந்திருப்பதாக எழுதுகிறார்.

டெங்சியாவோ பெங் தலைமையில் சீனா அங்கீகரித்த புதிய பொருளாதாரக் கொள்கையை சோவியத் ஒன்றியமும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் பின்பற்றின; ஆனால் இந்நாடுகளில் ஏற்கனவே இருந்த தொழிலாளி வர்க்க அரசு அமைப்பைக் கவிழ்த்து முதலாளித்துவ ஜனநாயக அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது; சந்தைச் சக்திகளைப் பயன்படுத்தி சோசலிசத்தைப் பலப்படுத்துவதற்குப் பதிலாக, அந்த அமைப்பை சந்தை சக்திகளுக்கு உட்படுத்தினார்கள் — இதுதான் சோசலிசத்திற்குப் பயங்கரமான பின்னடைவு ஏற்படக்காரணமானது என்கிறார், நம்பூதிரிபாடு.

இந்த ஆய்வில் நம்பூதிரிபாடு தமது முந்தைய நிலைப்பாடுகளை அடியோடு மூடி மறைத்து விடுகிறார். சுமார் 25 ஆண்டுகளாகி விட்டன, சி.பி(எம்) கட்சியின் இன்றைய அணிகளுக்குப் பழைய நிலைப்பாடுகள் தெரியாது, பழைய அணிகளோ அவற்றை மறந்து போயிருப்பார்கள் என்ற ஓட்டுக் கட்சிக்குரிய நம்பிக்கையில் நம்பூதிரிபாடு இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறார். அதனால்தான் 1969 இறுதியில் சி.பி.(எம்) கட்சி முன்வைத்த நிலைப்பாடுகளுக்கு மாறான, முரணான கருத்துக்களை இங்கே நம்பூதிரிபாடு ஆதரித்து ஆய்வுக் குறிப்பு எழுதுகிறார்.

இப்போது சீனத்தின் உற்பத்தி சக்திகளின் மிக விரைவான முன்னேற்றத்துக்காக விவசாயிகள் உட்பட உழைப்பாளி வர்க்கத்தினர் அனைவருக்கும் பொருளாயத ஊக்களிப்பு அவசியந்தான்; அதுதான் சோசலிசப் பாதையில் முன்னேறுவதற்கான சரியான வழி என்று ஏற்றிப் போற்றுகிறது, சி.பி.(எம்). ஆனால் 1960-களில் சோவியத் ஒன்றியம் இதே வழியை முன்வைத்து நடைமுறைப்படுத்தியபோது, அது சோசலிசத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்



ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாடு

**சி.பி.எம். கட்சியின் இன்றைய அணிகளுக்குப் பழைய நிலைப்பாடுகள் தெரியாது; பழைய அணிகளோ அவற்றை மறந்து போயிருப்பார்கள் என்ற ஓட்டுக் கட்சிக்குரிய நம்பிக்கையில் நம்பூதிரிபாடு, 1969 இறுதியில் சி.பி.எம். முன் வைத்த நிலைப்பாடுகளுக்கு மாறான கருத்துக்களை எழுதினார்.**

என்று எச்சரித்து விமர்சித்தது.

''சோவியத் ஒன்றியத்தில் பொருளாயத ஊக்கமளிப்பு என்ற பிரச்சினை பற்றி'' என்ற தலைப்பின் கீழ் ''பொருளாயத ஊக்கமளிப்புகள் பிரச்சினை மற்றும் ஒரு சோசலிச அரசில் அதன் பொருள் ஆகியன பற்றிய ஒரு பாரிய சர்ச்சை இருக்கிறது'' என்ற பீடிகையோடு பின்வருமாறு சி.பி.(எம்) கட்சி ஆவணம் எழுதுகிறது.

''கம்யூனிச பாணியிலான வேலை குறித்து ஆழமான கருத்துக்களை நமது சிந்தனைக்குக் கொண்டு வருவது மிகவும் முக்கிய படிப்பினையாக இருக்கும். 'வருமான நோக்கமின்றி அனைத்து மக்கள் நலனுக்காக, சமுதாயத்தின் நலனுக்காக உழைக்கும் திறனுள்ளவரென்று முதலில் காணபியுங்கள்' என்று லெனின் விளிக்கிறார்; பொது நலனுக்காக மிகப் பரந்த அளவு தனிநபர் உழைப்பை ஒருங்கிணைப்பது வேலையில் கம்யூனிச உணர்வாகும் என்று அவர் சித்தரிக்கிறார். 'தொழிலாளர்களின் தனிப்பட்ட - சொந்த முறையிலோ அல்லது அவர்தம் நெருங்கிய உறவினர்களுக்கோ நன்மை செய்வதாக இல்லாமல் அவர்களின் தூரத்து உறவினர்களுக்கு அதாவது ஒட்டு மொத்த சமுதாயத்துக்கு முதலில் ஒரு சோசலிச அரசின் கீழ் ஒன்றிணைந்த, பிறகு சோவியத் குடியரசுகளில் ஒன்றிணைந்த இலட்சக்கணக்கான, கோடிக் கணக்கான மக்களுக்கு நன்மை செய்வதாக உள்ள பொருட்களை உற்பத்தி செய்வதில் தொழிலாளர்களின் அணிவரிசையினர் அக்கறையும் ஆர்வமும் காட்டும்போது கம்யூனிசம் தொடங்குகிறது' என்றார், லெனின்.

''ஆனால், லெனின் வலியுறுத்தியதற்கு மாறாக சோவியத் அரசின் தற்போதைய தலைவர்கள் பொருளாயத ஊக்கமளிப்புகள் என்ற அம்சத்தைத் தற்போது முன்தள்ளுவது, தனிநபர் இலாபம், தனிநபர் மற்றும் தன்னிலை ஆர்வங்கள் போன்ற முதலாளிய அடிப்படையிலான வர்க்க உணர்வை தொழிலாளர்களிடம் உருவாக்குவதற்கு இட்டுச் செல்லாதா என்ற நியாயமான கேள்வியை எழுப்புகிறது. கோட்பாடு ரீதியில் பேசுவதானால், பாட்டாளி வர்க்கக் கம்யூனிச சிந்தனைகள் மேலும் மேலும் பலம் பெற்று முதலாளிய சிந்தனை, பழக்க வழக்கங்கள் மற்றும் உணர்வுகளை வென்று ஒழித்துக் கட்டும். அல்லது அவ்வாறின்றி போனால் பின்னது முன்னதை ஆக்கிரமித்து அதன் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் முடக்கி விடும். முதலாளிய ஊக்கமளிப்புகளிலும், சொந்த இலாபம் என்ற எண்ணங்களிலும் ஈடுபடுவது இறுதி ஆய்வில் ஒரு புதிய வகை முதலாளியத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கு வழி வகுக்கும்; சோசலிசம் மற்றும் கம்யூனிச இலட்சியத்திற்குத் தீங்கு விளைவிக்கும்'' (சித்தாந்தப் பிரச்சினைகள் மீதான நிலைப்பாடு, பக்: 34-35)

''சோசலிச உற்பத்தியின் விரைவான வளர்ச்சிக்காக'' என்ற பெயரில் உழைப்பாளருக்கு முதலாளிய இலாப நோக்கம் மற்றும் ஊக்கமளிப்புகள் தருவது என்பது புதியதல்ல. 1960-களில் சோவியத் ஒன்றியத் தலைவர்களால் முன் வைக்கப்பட்டு அமலாக்கியதுதான். சீனாவில் கூட மாவோவின் காலத்தில், 1949-இல் இருந்தே பலமுறை லியு-டெங்சியாவோ பெங் போன்றவர்களால் முன் வைக்கப்


படிப்பகம்

www.padippakam.com

பட்டு, சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியால் நிராகரிக்கப்பட்டதுதான். அப்போதெல்லாம் இது பற்றி எதுவும் கூறாத சி.பி.(எம்), சோவியத் ஒன்றியத்தில் முதலாளிய இலாப நோக்கும் ஊக்கமளிப்பும் புகுத்தப்பட்டபோது, அவை பாட்டாளி வர்க்கக் கம்யூனிச சிந்தனையை மழுங்கடித்து முதலாளிய சிந்தனை, பழக்கவழக்கங்கள் மற்றும் உணர்வுகளை ஏற்படுத்தி விடும்; இறுதியில் ஒரு புதியவகை முதலாளியத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கு வழி வகுக்கும் என்று அப்போது சி.பி.(எம்) சாடியது.

ஆனால், இப்போது என்ன கூறுகிறது? 1978-இல் ஏதோ புதிதாக டெங்சியாவோ பெங் முன் வைத்த புதிய பொருளாதாரக் கொள்கையில் இது இடம் பெற்றிருப்பதாவும், அதன் பிறகுதான் சோவியத் ஒன்றியம் மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகள் இதைப் பின்பற்றியதாகவும் புளுகுகின்றனர். 1960-களில் இருந்தே அமலாக்கப்பட்ட முதலாளிய இலாப நோக்கம் மற்றும் பொருளாயத ஊக்கமளிப்புகள், அங்கு முதலாளிய மீட்புக்கும் இறுதியில் ஆட்சிக் கவிழ்ப்புகளுக்கும் வழி வகுத்தன.



**''கோர்பச்சேவ் காலத்தில்தான் சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் அமலில் இருந்த தொழிலாளி வர்க்க அரசு அமைப்பைக் கவிழ்த்து, முதலாளித்துவ ஜனநாயக அமைப்பு உருவாக்கப்பட்டது'' என்கிற சி.பி.(எம்) கட்சியின் வாதம் உண்மைக்குப் புறம்பானது.**

ஆனால், இந்த ஊக்கமளிப்புகளோடு சந்தைச் சக்திகளைப் பயன்படுத்துவது என்ற டெங்சியாவோ பெங்கின் புதிய பொருளாதாரக் கொள்கையை, தொழிலாளர் வர்க்க அரசைக் கவிழ்த்துவிட்டு கோர்பச்சேவ் அமலாக்கியதாகவும், அதனால்தான் சோசலிசத்திற்குப் பயங்கரப் பின்னடைவு ஏற்பட்டதாகவும் நம்பூதிரிபாடுவும் அவரது சீடர்களும் இப்போது கூறுகின்றனர்.

''கோர்பச்சேவ் காலத்தில்தான் சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் அமலில் இருந்த தொழிலாளி வர்க்க அரசு அமைப்பைக் கவிழ்த்து முதலாளித்துவ ஜனநாயக அமைப்பு உருவாக்கப்பட்டது'' என்கிற சி.பி.(எம்) கட்சியின் வாதம்கூட புளுகு தான். ஏனென்றால் 1960-களுக்கு முன்பே, சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிஸ்டு கட்சியின், 22-வது பேராயத்திலேயே, பாட்டாளிவர்க்க சர்வாதிகார அரசை அனைத்து மக்கள் அரசாகவும், பாட்டாளி வர்க்கக் கட்சியை அனைத்து மக்கள் கட்சியாகவும் மாற்றி விடுவதாக குருச்சேவ் தலைமையிலான திருத்தல்வாதிகள் பிரகடனம் செய்துவிட்டார்கள். அப்போது பின்வருமாறு சி.பி.(எம்) கட்சி எழுதியது.

''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கான உள்நாட்டுத் தேவைகள் நிறைவு பெற்றுவிட்டதால் அது கலைக்கப்பட்டு விடுகிறது; முதலாளிய - ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான தற்காப்புக்காக அனைத்து மக்கள் அரசு தேவைப்படுகிறது என்று திருத்தல்வாதிகள் சாதிக்கிறார்கள்'' ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை அனைத்து மக்கள் அரசாக மாற்றுவது என்ற பேச்சில் ஈடுபடுவது, அல்லது வேறு வார்த்தைகளில் சொல்வதானால் பாட்டாளி வர்க்க அரசை கலைத்துவிடுவது என்பது மார்க்சிய - லெனினியத்தைக் காட்டிக் கொடுப்பது, தொழிலாளி வர்க்கத்துக்குத் துரோகமிழைப்பது ஆகும்'' என்று 1969 நவம்பரில் (மேற்படி நூல் பக்: 33) சி.பி.(எம்) கட்சி அறிவித்தது.

ஆக, கோர்பச்சேவ் ஆட்சிக்கு வருவதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்பாகவே, சோவியத் ஒன்றியத்தில் தொழிலாளர் வர்க்க அரசு கலைக்கப்பட்டு அனைத்து மக்கள் அரசு நிறுவப்படுவதாக அறிவிக்கப்பட்டது; அனைத்து மக்கள் அரசு என்பதே ஒரு மோசடி; வர்க்க சார்பற்ற அனைத்து மக்களுக்கான ஒரு அரசு என்பது சாத்தியமே இல்லை. எனவே, அங்கு தொழிலாளி வர்க்க அரசு கலைக்கப்பட்டு, அதிகாரவர்க்க முதலாளித்துவ அரசு நிறுவப்பட்டது என்பதுதான் உண்மை. அதாவது அதிகார வர்க்க முதலாளிகளின் அரசுதான் 30 ஆண்டுகளுக்கு மேலாக இருந்தது.

உழைப்பாளருக்கு ஊக்கமளிப்பு, சந்தை சக்திகளைப் பயன்படுத்துவது என்ற புதிய பொருளாதாரக் கண்ணோட்டத்தை அமலாக்கியபோது, தொழிலாளி வர்க்க அரசு கலைக்கப்பட்டதுதான் சோவியத் ஒன்றியத்தில் சோசலிசத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் என்கிறார் நம்பூதிரி. ஆனால், 1969-லேயே. சி.பி.(எம்) கட்சி பின்வருமாறு எழுதியது.

''சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டு கட்சியின், அனைத்து மக்கள் அரசு, அனைத்து மக்கள் கட்சி, இலாப ஊக்கமளிப்புகள் என்ற முழக்கங்கள் சோசலிச முகாம் என்ற உலகப்புரட்சியின் அடித்தளத்தை உயிராதாரமான முறையில் கீழறுக்கச் செய்துவிடும்; இவற்றைத் தடுத்து நிறுத்தாவிட்டால் எதிர்ப்புரட்சி அபாயங்களுக்கு இட்டுச் செல்லும். அந்நியப்பட்ட சக்திகளுடன் இணைந்து தலைதூக்கும் இம்மாதிரியான ஒரு அந்நியக் கண்ணோட்டத்துடன் எழுப்பப்படும் முழக்கங்கள் புரட்சிகர இயக்கத்தின் முன்னேற்றத்துக்கு மீண்டுமொருமுறை ஆபத்து விளைவிக்கும்'' (மேற்படி நூல் பக் : 61)

ஆக, முதலாளித்துவ இலாப ஊக்கமளிப்பு, சந்தைச் சக்திகளை சோசலிச உற்பத்திப் பெருக்கத்துக்குப் பயன்படுத்துவது என்பது 1978-க்குப் பிறகு முன்வைக்கப்படும் புதிய கண்ணோட்டம் என்பது பொய். 1978-க்குப் பிறகுதான் இவற்றை சோவியத் ஒன்றியம் மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பின்பற்றின என்பதும் பொய். கோர்பச்சேவ் காலத்தில்தான் தொழிலாளர் வர்க்க அரசு கலைக்கப்பட்டதாக சொல்வதும் பொய். அதுவரை தொழிலாளர் வர்க்க அரசு அங்கிருந்ததாகக் கூறுவதும் பொய். இவ்வளவு பொய்களை அடுக்கிவிட்டு அவற்றின் மேல்தான் இன்றைய சீனாவில் இன்னமும் சோசலிசம் நிலவுவதாக மேலும் ஒரு பொய்யை சி.பி.(எம்) நியாயப்படுத்துகிறது. அது எப்படிப்பட்ட சோசலிசம் என்பதை இனி பார்ப்போம்.

— தொடரும்

www.padippakam.com

# அயோத்தி வழியில் மீண்டும் ஒரு மசூதி இடிப்பு
# இந்துவெறி அட்டூழியத்துக்கு அரசே உடந்தை

இராசஸ்தான் மாநிலத்தின் தென்பகுதியிலுள்ள பில்வாரா மாவட்டத்தைச் சேர்ந்த அசிந் எனும் சிறுநகரிலுள்ள 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தொன்மை வாய்ந்த மசூதியை, கடந்த ஜூலை 27-ஆம் தேதியன்று இந்துவெறி காட்டுமிராண்டிகள் இடித்துத் தரைமட்டமாக்கியுள்ளனர். அயோத்தியில் பாபர் மசூதியை இடித்து திடீர் இராமன் சிலையை நிறுவியதைப் போலவே, அசிந் நகரிலும் மசூதியை இடித்து திடீர் அனுமான் சிலையை நிறுவியுள்ளனர்.

அசிந் நகரில் சவாய் போஜ் எனும் தொன்மை வாய்ந்த கோயில் உள்ளது. குஜ்ஜார் சாதியைச் சேர்ந்த சவாய்போஜ் என்ற இளைஞன், பினாய் ராஜ்ஜியத்தின் ராஜபுத்திர அரசுக்கு எதிராக நடத்திய போரில் கொல்லப்பட்ட பிறகு, அவனது தியாகத்தின் நினைவாக குஜ்ஜார் சாதியினரால் 12-ஆம் நூற்றாண்டில் இக்கோயில் கட்டப்பட்டது. பின்னர், 16-ஆம் நூற்றாண்டில் சித்ரதுர்க் போரை முடித்துத் திரும்பும் வழியில், இக்கோயிலில் ஓய்வெடுத்த அக்பரின் படைத் தளபதிகள் இங்கே ஒரு மசூதியைக் கட்டி வழிபட்டனர். 'கலந்தரி' கட்டிடப் பாணியில் அமைந்த இம்மசூதிக்கு கூரையோ சுற்றுச் சுவரோ இல்லை. மினார்களைக் கொண்ட 8 அடி உயரமும் 10 அடி நீளமும் உள்ள மேற்கு திசை நோக்கி அமைக்கப்பட்ட ஒரு மதிற்சுவர் போன்றே இம்மசூதி இருந்தது. அருகருகே அமைந்திருந்த கோயிலும் மசூதியும் நீண்டகாலமாக மத ஒற்றுமையின் சின்னமாக விளங்கியது. பிற்காலத்தில் இக்கோயில் வளாகத்துக்கு சற்றுத் தள்ளி ஒரு தர்காவை நிறுவி முசுலீம்கள் தொழுகை நடத்தி வந்தனர்.

1980-களில் இக்கோயில் வளாகத்தில் இந்துவெறியர்கள் ''தியோ நாராயணன்'' கோயிலை புதிதாக எழுப்பினர். பின்னர் பிள்ளையார், சிவன், இராமன் என ஒவ்வொரு கடவுளுக்கும் கோயில்கள் கட்டப்பட்டு, சவாய்போஜ் கோயில் பார்ப்பனமயமாக்கப்பட்டு இந்துவெறியர்களே அதன் நிர்வாகிகளாயினர். கோயிலைப் புனரமைத்து குடமுழுக்கு விழா நடத்தி சுற்றுச் சுவர் எழுப்பி, கோயில் வழியாக தர்காவுக்குச் செல்லும் பாதையை அடைத்தனர். பின்னர் தர்கா அமைந்துள்ள நிலம் கோயிலுக்குச் சொந்தமானது என்று பொய்ப் பிரச்சாரத்தை அவிழ்த்து விட்டு, அதை அகற்றிவிடத் துடித்தனர்.

இந்நிலையில், இந்த தர்காவில் ஆண்டுதோறும் நடைபெறும் உருசு விழா ஜூலை 26-ஆம் தேதியன்று தொடங்கியது. கோயிலுக்குச் செல்லும் வழியை மறித்து இவ்விழாவுக்குக் கொட்டகை போட்டதாகக் குற்றம் சாட்டிய இந்துவெறி குண்டர்கள் 27-ஆம் தேதியன்று முசுலீம்களைத் தாக்கி கொட்டகையை எரித்து நாசப்படுத்தினர். இதைக் கண்டித்து முசுலீம்கள் சாலை மறியலில் இறங்கியதும், மாவட்ட நிர்வாகம் உருசு விழாவை நிறுத்தச் சொல்லியதோடு கோயிலையும் மூடியது. இரு மதத்தினரையும் சமாதானப் பேச்சு வார்த்தைக்கு அழைத்தது.

ஆனால் இந்துவெறியர்களோ, 300 பேருக்கு மேலாகத் திரண்டு கோயில் வளாகத்தில் அமைந்திருந்த 400 ஆண்டுகால தொன்மை வாய்ந்த மசூதியை அன்று மாலையே இடித்துத் தரைமட்டமாக்கினர். அந்த இடத்தில் அவசரமாக பளிங்கு மேடை அமைக்கப்பட்டு அதில் 3 அடி உயர அனுமார் சிலையும் நிறுவப்பட்டது. அருகிலுள்ள தர்காவில் அடக்கம் செய்யப்பட்டுள்ள, ''முசுலீம் மதகுரு பீரை ஒழித்த அனுமார் கோயில்'' என்றும் அதற்கு இந்துவெறி கும்பல் பெயர் சூட்டியது. இவையனைத்தும் சில மணிநேரத்துக்குள் நடத்தியதன் மூலம், இந்துவெறியர்கள் இவற்றை முன்கூட்டியே திட்டமிட்டு இந்த அட்டூழியத்தை நடத்தியுள்ளனர் என்பது நிரூபணமாகியுள்ளது.

இத்தனைக்கும் பிறகும் எந்தவொரு இந்துவெறியனும் இன்றுவரை கைது செய்யப்படவில்லை. தொன்மை வாய்ந்த மசூதி இடிக்கப்பட்ட இடத்தில், மீண்டும் மசூதியைக் கட்டித் தர மாவட்ட அரசு நிர்வாகமும் முன் வரவில்லை. மாறாக, மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் நிறுவப்பட்டுள்ள அனுமார் சிலையை வேறிடத்தில் மாற்றி அமைத்துக் கொள்ளுமாறு இந்துவெறியர்களிடம் கேட்டுக் கொண்டது.

இதற்கிடையே, மீண்டும் அதே இடத்தில் மசூதியைக் கட்டித் தரக் கோரி முசுலீம்கள் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். அதை எதிர்த்து இந்து வெறியர்கள், இடிக்கப்பட்டது மசூதியே அல்ல என்று எதிர்வழக்காடினர். மாவட்ட நீதிமன்றம் இந்துவெறியர்களின் எதிர்வாதங்களை நிராகரித்து விட்டு, மீண்டும் மசூதியைக் கட்டித்தர உத்தரவிடவில்லை. மாறாக, மசூதி இடிக்கப்பட்டு திடீர் அனுமார் சிலை நிறுவப்பட்டுள்ள தற்போதைய நிலை அப்படியே நீடிக்கும் என்றும், விரிவான விசாரணைக்குப் பிறகு தீர்வு காண்பது என்றும் அயோத்தி வழியில் இந்துவெறியர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்துள்ளது. இந்துவெறியர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல், அவர்களுக்கு உடந்தையாகச் செயல்பட்டு வரும் போலீசு, அதிகார வர்க்கம், நீதித்துறை உள்ளிட்டு ஒட்டுமொத்த அரசு எந்திரமே குற்றவாளிகள்தான் என்பது அயோத்தி விவகாரத்தைப் போலவே இப்போதும் நிரூபணமாகியுள்ளது.

இந்து வெறியர்களின் எதிர்த்தரப்பான காங்கிரசுக் கட்சிதான் இராசஸ்தானில் ஆட்சி செய்கிறது. இருப்பினும் இந்து வெறியர்களைத் தண்டிக்கவோ, மீண்டும் அதே இடத்தில் மசூதியைக் கட்டித் தரவோ அது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக, குஜ்ஜார் சாதி ஓட்டு வங்கியை இழந்துவிடாதிருக்க இந்து வெறியாட்டத்துக்கு அனுசரணையாக உள்ளது. இந்தக் கழிசடைக் காங்கிரசுக் கட்சியைத் தான் மதச்சார்பற்ற சக்தி என்று நம்பச் சொல்லும் போலி கம்யூனிஸ்டுகள், பதவி சுகத்துக்காக கூட்டணி கட்டிக் கொண்டு அதன் காலை நக்கிக் கிடக்கின்றனர். அவர்களுக்குப் போட்டியாக, ''மத்தியில் ஆளும் பா.ஜ.க. வெகுவாக மாறிவிட்டது; அது இந்துத்துவ கொள்கைகளை ஒத்தி வைத்து விட்டு, தேசிய ஜனநாயக முன்னணியின் திட்டத்தையே செயல்படுத்துகிறது'' என்று நம்பச் சொல்லும் தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. ஆகிய பிழைப்புவாதக் கட்சிகள் பதவி சுகத்துக்காக இந்து வெறி பாசிச கும்பலின் காலை நக்கிக் கிடக்கின்றன.

• குமார்



மசூதி இருந்த இடமே தெரியாமல் இடித்துப் பூசப்பட்ட பகுதி (வலப்புற வட்டம்). இந்த இடத்தில் நிறுவப்பட்ட திடீர் அனுமார் சிலை, பின்னர் அகற்றப்பட்டு இப்போது வைக்கப்பட்டுள்ள இடம் (இடப்புற வட்டம்).


படிப்பகம்

www.padippakam.com

# மகளிர் சுய உதவிக் குழுக்கள்:

# அறுக்கப்படும் ஆடுகளுக்குக் கொடுக்கப்படும் அகத்திக்கீரை

நினைவிருக்கிறதா? கடந்த ஜனவரியில் டெல்லியில் நடந்த ''ஸ்த்ரீ சக்தி புரஸ்கார்'' விருது வழங்கும் விழாவில் நாட்டின் பிரதமரான வாஜ்பாய் ஒரு பட்டிக் காட்டுக் கிழவியின் காலில் விழுந்து வணங்கினாரே...! மதுரை மாவட்டம் பில்லுசேரி கிராமத்தைச் சேர்ந்த சின்னப்பிள்ளை எனும் அம்மூதாட்டி, ஒரு மகளிர் சுய உதவிக் குழுவின் அமைப்பாளர். ஊருக்கு ஒரு சாதிச் சங்கம், அவற்றுக்குள் பங்காளிச் சங்கம் என மூச்சுத் திணறிக் கிடக்கும் தமிழக கிராமங்களில் புதிய வரவாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் அண்மைக் காலமாக வேகமாக வளர்ந்து வருகின்றன.

ஏதோ பத்தோடு பதினொன்றாக வந்து போகும் சங்கங்களில் ஒன்றாக இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களைக் கருத முடியாது. அணுகுண்டு வெடித்து, ஏவுகணையைப் பறக்கவிட்டு, அண்டை நாடுகளை எல்லாம் அச்சுறுத்தி வரும் ஒரு நாட்டின் பிரதமர், ஒரு சாதாரண மகளிர் சுய உதவிக் குழு அமைப்பாளரின் காலில் விழுகிறார் என்றால், இந்த சுய உதவிக் குழுக்களின் பின்னணி என்ன? அவற்றின் செயல்பாடு என்ன?

**சுய உதவிக் குழுக்களின் செயல்பாடு:**

பத்து முதல் 20 பெண்கள் சேர்ந்து ஒரு குழுவாகி தலைவர், செயலர், பொருளாளர் எனத் தேர்வு செய்து கொள்கின்றனர். குழு உறுப்பினர்கள் தலா ரூ. 50 முதல் 100 வரை மாதச் சந்தாவாகச் செலுத்தி, வசூலான மொத்தத் தொகையை தங்களது கூட்டு வங்கிக் கணக்கில் சேர்க்க வேண்டும். இவ்வாறு சேமிக்கப்படும் தொகையை குழு உறுப்பினர்கள் தமக்குத் தேவைப்படும் போது, வங்கியிலிருந்து குறைந்த வட்டிக்கு எடுத்துக் கொள்ளலாம்.

சுய உதவிக் குழுக்கள் மாதாமாதம் முறையாகத் தொகையைச் செலுத்தி வந்தால், ஆறுமாதங்களுக்குப் பிறகு வங்கி அதிகாரிகள் சிபாரிசு செய்யும் குழுக்களுக்கு சுமார் ரூ. 15,000 முதல் ரூ. ஒரு லட்சம் வரை கடன் கிடைக்கும். பல்வேறு குடிசைத் தொழில், சிறு தொழில், சிறு வியாபாரம் ஆகியவற்றுக்காக வங்கிகள் தரும் இக்கடன் தொகையில், அரசு கொடுக்கும் மானியம் போக மீதியை மாதத் தவணைகளில் செலுத்த வேண்டும். இதுதான் மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடு.

இத்திட்டம் எதற்காக என்பதையும், யாருக்குப் பலனளிக்கிறது என்பதையும், இக்குழுக்களை யார் ஆட்டுவிக்கிறார்கள் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

பன்னாட்டு நிறுவனங்கள், பகாசுரக் கம்பெனிகள், கிறித்துவ நிறுவனங்கள் மற்றும் உலக வங்கி ஆகியனவற்றின் நேரடி முதலீட்டில் உயிர் வாழும் தன்னார்வக் குழுக்களும், சில அரசு சார்ந்த இயக்கங்களும்தான் இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களை ஆட்டுவிப்பவர்கள்.

மதுரை-தேனி மாவட்டங்களில் வேர்ல்டு விஷன் ஆஃப் இண்டியா, டான் பவுண்டேசன், களஞ்சியம் மற்றும் ஆண்டிப்பட்டியிலுள்ள சேவா நிலையம், எம்.எம்.எம்.எஸ். ஆகியவை உள்ளிட்டு ஏறத்தாழ 800 தன்னார்வக் குழுக்கள் செயல்படுகின்றன. இவை தவிர சி.பி.எம். கட்சியின் நல்லாசி பெற்ற ''தமிழ்நாடு அறிவியல் இயக்கம்'' என்ற அமைப்பும், தமிழக அரசின் சமூக நலத்துறை மற்றும் சில வங்கிகள் நேரடியாகவும் இத்தகைய மகளிர் குழுக்களை அமைக்கும் வேலையில் ஈடுபட்டு வருகின்றன.

மதுரையில் ராம்குமார் என்பவர் தலைமையில் இயங்கும் ''களஞ்சியம்'' என்ற தன்னார்வ நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு மகளிர் குழுவின் அமைப்பாளர்தான், வாஜ்பாயை காலில் விழ வைத்த சின்னப்பிள்ளை!

**சுய உதவிக் குழுக்களால் பயனடைவது யார்?**

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் பெண்களைச் சுய தொழிலில் ஈடுபடுத்தி, பொருளாதார ரீதியில் சொந்தக் காலில் நிற்க வைத்து, அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம் என்று அரசும் வங்கிகளும் பிரச்சாரம் செய்து வருகின்றன.

''விவசாயிகளுக்கு கிணற்றுலோன், மாட்டு லோன்னு கடனாகக் கொடுத்தா ஒழுங்கா திருப்பிக் கட்டமாட்டேங்கிறாங்க. விளைச்சல் இல்ல; விலை இல்லைன்னு ஆயிரம் காரணம் சொல்றாங்க. ஆனா இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களால எந்தப் பிரச்சினையும் இல்ல'' என்று பெருமைபடக் கூறுகிறார், இந்தியன் வங்கிக் கிளைமேலாளர் ஒருவர்.

''தேனி மாவட்டத்தில் மட்டும் 400 மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்படுகின்றன, ஒரு குழுவில் சராசரியாக 15 பெண்கள் என்றாலும் மொத்தம் 6000 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் மூலம் ஒரு மாதத்தில் ஏறத்தாழ ரூ. 3 லட்சம் முதல் ரூ. 6 லட்சம் வரை வங்கிகளில் சேமிக்கப்படுகிறது. இதனால் வங்கிகளின் பண சுழற்சி அதிகரித்து, கடனளிக்கும் திறனும் அதிகரிக்கிறது'' என்கிறார் மற்றொரு வங்கி அதிகாரி.

தற்போது தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 10,000-க்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்கள் செயல்படுகின்றன என்ற உண்மை விவரத்தின்படி கணக்கிட்டால், ஒவ்வொரு மாதமும் வங்கிகளில் புரளும் பணத்தின் மதிப்பு பல கோடிகளைத் தாண்டுகிறது.

இவ்வளவு தொகையும் கிராமப்புற கூலி விவசாயப் பெண்களின் மேம்பாட்டுக்காக செலவிடப்படுகிறதா? நிச்சயமாக இல்லை. இத்திட்டத்தின் மறுபக்கத்தில் நடக்கும் கதையோ முற்றிலும் வேறானது.

உதாரணமாக, ஒரு குழு எந்த வங்கியில் சேமிப்புக் கணக்கை வைத்துக் கொள்வது என்பதை இக்குழுவை இயக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் நிர்வாகிகளே தீர்மானிக்கின்றனர். இந்த சேமிப்பு தொகையால் பயனடையும் வங்கிகள், தன்னார்வ நிறுவனத்தின் ஊழியர்களுக்கு கார், கலர் டி.வி. குளிர்சாதனப் பெட்டி முதலானவற்றை 'நன்கொடையாக' அளித்து ஊக்குவிக்கின்றன.

இம்மகளிர் சுய உதவிக் குழுக்களை முறைப்படுத்துவதற்காக அரசின் சமூக நலத்துறை மூலம் நிதி ஒதுக்கப்படுகிறது. ஒரு ஆண்டில் 10 கூட்டங்கள் நடத்த ரூ. 20,000 வீதம் மொத்தம் 100 குழுக்களுக்கு ஒதுக்கப்படுகிறது. இதன் பெரும் பகு

**''களஞ்சியம்'' அலுவலகத்தின் முன் மகளிர் குழுவின் அமைப்பாளர் சின்னப்பிள்ளை.**






படிப்பகம்

www.padippakam.com

தியை தன்னார்வத் 'தொண்டு' நிறுவனங்களே சுருட்டிக் கொள்கின்றன.

மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைப்பதற்காக பல வெளிநாட்டு ஏக போக முதலாளிகளும், பன்னாட்டு நிறுவனங்களும், உலக வங்கியும் தொண்டு நிறுவனங்களுக்கு கோடிக்கணக்கில் நிதியுதவி செய்கின்றன. இவ்வாறு நிதியுதவி பெறும் எம்.எம்.எம்.எஸ்., டபிள்யூ.வி.ஐ. போன்ற தன்னார்வ நிறுவனங்கள், இந்நிதியை வங்கிகளைப் போல மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கடனாகக் கொடுத்து வட்டியுடன் வசூலித்துக் கொள்ளையடிக்கின்றன.

இதில் சி.பி.எம். கட்சியின் ஆசி பெற்ற தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் செயல்பாட்டுப் பாணி நுணுக்கமானது. தீபம், மகரம், துளிகள், சமம், மலர், சக்தி என 'முற்போக்கு' பெயர் சூட்டிக் கொள்ளும் இவர்களின் மகளிர் குழுக்களில் ''சுழற்சி நிதி'' என்ற பெயரில் ஒவ்வொரு குழுவிலிருந்தும் ரூ. 50 முதல் ரூ. 100 வரை தனியா வசூலிக்கின்றனர்.

மாவட்ட மையத்திலிருந்து நேரடியாக 5 ஆண்டுகள் தொடர்ச்சியாக வசூலித்து, பிறகு அதை மொத்தமாகத் திருப்பிக் கொடுத்து விடுவதாகக் கூறுகின்றனர். இத்தொகையை மாவட்ட மையத்தின் தலைவர்கள் தனியார் முதலாளிகளுக்கு வட்டிக்கு விட்டு சுருட்டுவதுதான் அறிவியல் இயக்கத்தின் முற்போக்கான பாணி!

உதாரணமாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் இவர்களுக்கு 1065 ''மலர்'' குழுக்கள் உள்ளன. (பாண்டிச்சேரியில் ஜூன் 16-17 தேதிகளில் நடந்த தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாநில மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது) மாத சுழற்சி நிதியாக ஒரு குழுவிடமிருந்து ரூ. 100 வசூலிக்கப்படுகிறது எனில், ஒரு மாதத்தில் வசூலாகும் தொகை ரூ. 1,06,500. ஒரு ஆண்டில் வசூலாகும் தொகை ரூ. 12,78,000 ஆகும். இத்தொகையை தனியார் முதலாளிகளிடம் 2 ரூபாய் வட்டிக்கு விட்டால், ஒரு மாதத்தில் கிடைக்கும் இலாபம் மட்டும் ஏறத்தாழ ரூ. 25,000 எனில், ஐந்து ஆண்டுகளில் திரட்டப்படும் தொகையையும் அதற்குக் கிடைக்கும் வட்டியையும் நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள். குமரி மாவட்டத்தையும் சேர்த்து தமிழகமெங்கும் இவர்களுக்கு ஏறத்தாழ 2258 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளன.

மகளிர் குழுக்களின் கள அமைப்பாளர்களாக முன் நின்று இயங்குபவர்கள் ஆசிரியர்கள், மருத்துவர்கள், வங்கி ஊழியர்கள், சிறுதொழில் நிறுவன உரிமையாளர்கள் போன்ற நடுத்தர வர்க்கத்தினராவர். அவசரச் செலவுக்காக 5 வட்டி, 10 வட்டிக்கு வாங்கி, கடன் பொறியில் சிக்கித் தவிப்பதை விட 2 வட்டிக்கு கிடைக்கும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தொகை, இவர்களுக்கு மிகப் பெரிய கருவூலமாகும்.

இப்படி தன்னார்வக் குழுக்களும் வங்கிகளும் சில தனிநபர்களும் இலட்சம் கோடிகளில் புரளும்போது, மகளிர் குழு உறுப்பினர்களோ ரூ. 500, ரூ. 1000 என அற்பப் பலனையே பெறுகிறார்கள்.

மகளிர் சுய உதவிக் குழுக்களால் அதன் உறுப்பினர்களுக்கு என்ன பலன் கிடைக்கிறது என்று நாம் விசாரித்தபோது ''முன்ன மாதிரி விவசாய வேலை இல்லீங்க; வருசத்துக்கு 4,5 மாசம்தான் வேலை இருக்குது; எவ்வளவுதான் சம்பாரிச்சாலும் 50 காசு கூட மிஞ்சுறதில்ல. அதனால கஷ்டத்தோட கஷ்டமா 'இதுல மாசம் 50 ரூபாய போட்டோம்னா, வேலை இல்லாத நேரத்துல ஒரு அவசர - ஆத்திரத்துக்கு பயன்படுமேன்னுதான் இந்த மகளிர் குழுவிலே சேர்ந்திருக்கேன்'' என்று கூறுகிறார் ஒரு கூலி விவசாயப் பெண்.



**சின்னப்பிள்ளையின் காலில் விழுந்து வணங்கும் பிரதமர் வாஜ்பாயி.**

கிராமப்புற பெண்களின் வாழ்வு முன்னேற்றமடையும் என்கின்றனர் வங்கி - அரசு அதிகாரிகள். அவசர, ஆத்திரத்துக்கு ஆகுமேன்னுதான் இதுல இருக்கோம் என்கிறார் குழு உறுப்பினர். ஏனிந்த முரண்பாடு என்று தன்னார்வ நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு மகளிர் குழு அமைப்பாளரிடம் கேட்டோம்.

''எம்.எம்.எம்.எஸ். என்ற எங்கள் குழு மூலம் 90 மகளிர் குழுக்களை இயக்குறோம். இதில் 25 குழுக்களுக்கு வங்கிக் கடன் வாங்கிக் கொடுத்திருக்கோம். சுமாரா ரூ. 15,000 முதல் ரூ. 35,000 வரைக்கும் தர்றாங்க. கடன் தொகை கெடைச்சாலும் கிராமங்கள்ல தொழில் செய்ய முடியறதில்ல. விவசாய வேலையே இல்லாத ஊர்ல பெட்டிக் கடை லோன் கொடுத்தா என்ன செய்ய முடியும்? அதனால வாங்கின கடன் தொகையை வெளியில 3 வட்டி, 5 வட்டிக்கு விட்டுத்தான் கடன அடைக்கிறாங்க. தவணை தவறாம கடன அடைக்கிறதால, வங்கி அதிகாரிகளும் இதைப் பெரிசா கண்டுக்கிறதில்ல. கடனில் தர்ற மானியமும் குறைஞ்ச வட்டியும்தான் மகளிர் குழுவுக்கு லாபம். 3 வருசத்துக்கு ஒருமுறை இந்த லாபத்தை குழு உறுப்பினர்கள் பிரிச்சு எடுத்துக்கலாம்'' என்று உண்மையைப் போட்டு உடைத்தார்.

மொத்தத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களால் வங்கிகள், தன்னார்வக் குழுக்கள், வட்டித் தொழில் புரிவோர், மகளிர் குழுக்களின் கள அமைப்பாளர்கள் என ஒரு சிறு கும்பல்தான் கொழுத்த ஆதாயமடைகின்றனர். வங்கிகளின் பண சுழற்சிக்கு இத்திட்டம் மிகவும் உதவிகரமாக இருப்பதால் அரசும் வங்கிகளும் போட்டி போட்டிக் கொண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களை ஊக்குவிக்கின்றன. கிராமப்புற விவசாயக் கடன் திட்டங்கள், சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள், சிறு தொழில் - குடிசைத் தொழில் வளர்ச்சித் திட்டங்கள் முதலான எல்லாவகை திட்டங்களும் இம்மகளிர் சுய உதவிக் குழுக்களை நோக்கியே திருப்பி விடப்படுகின்றன. பெட்டிக்கடை, சைக்கிள்கடை, பால் மாடு வளர்ப்பு முதலான அனைத்துக்கும் மகளிர் குழுக்களுக்கு மட்டுமே கடன் வழங்குவதை வங்கிகள் கொள்கை முடிவாகக் கொண்டுள்ளன.

### பகற் கொள்ளைக்கு புதிய ஏற்பாடு

இன்னொருபுறம் ஏகாதிபத்திய - பன்னாட்டு நிறுவனங்களும் இம்மகளிர் சுய உதவிக் குழுக்களை நிறுவவும் விரிவாக்கவும் கோடி கோடியாய் வாரியிறைக்கின்றன. வறுமையிலுள்ள இந்தியக் கிராமப்புற பெண்களின் மலிவான உழைப்பைக் கொள்ளையடிப்பது; தமது நுகர் பொருட்களுக்கு பெருநகரங்கள் மட்டுமின்றி, பின்தங்கிய கிராமப்புறங்களிலும் சந்தையை ஏற்படுத்திக் கொள்வது என்ற நோக்கத்தோடுதான் பன்னாட்டு நிறுவனங்கள் இம்மகளிர் சுயஉதவிக் குழுக்களை ஊக்குவிக்கின்றன.

குமரி மாவட்டத்திலுள்ள ''அப்ராட்'' என்ற தன்னார்வ நிறுவனம், சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் மகளிர் குழுக்களுக்கு தொழில் பயிற்சி அளித்து, மலிவான கூலியில் வயர் கூடைகளை புதுப்பாணியில் தயாரித்து ஏகாதிபத்திய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.



படிப்பகம்

இந்துஸ்தான் லீவர் என்ற பன்னாட்டு ஏகபோக நிறுவனம், ஆந்திராவின் நள கொண்டா மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் தனது கிளினிக் ஷாம்பு, லைஃபாய் சோப்பு, நிஹார் தேங்காய் எண்ணெய், திரிரோசஸ் டீ தூள், ஃபேர் அண்டு லவ்லி கிரீம் முதலான வற்றை கிராமப்புறங்களில் பிரபலப்படுத்தி விற்பனையை விரிவாக்கி வருகிறது. இதற் கென இந்துஸ்தான் லீவர் நிறுவனம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சிறப்புப் பயிற் சியும் அளித்து வருகிறது.

பன்னாட்டுக் கம்பெனிகளும் உலக வங்கியும் இவற்றின் விசுவாச அடிமைக ளான மத்திய - மாநில அரசுகளும் வரிந்து கட்டிக் கொண்டு மகளிர் சுய உதவிக் குழுக் களை நிறுவி ஊக்கப்படுத்துவதற்கான உண்மையான காரணம் இதுதான். இப்படி பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களும் வங்கிகளும் தன்னார்வக் குழுக்களும் கொழுத்த ஆதாயமடையும்போது, மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களோ வெறும் ரூ. 500, ரூ. 1000 என அற்பப் பலனையே அடைகின்றனர். மேலும், வங்கிகளின் சுய தொழிலுக்கான கடனுதவி எல்லா குழுக்க ளுக்கும் கிடைப்பதில்லை. இதிலும் அரசி யல்வாதிகள் - அதிகாரிகளின் ஆதரவு பெற்ற குழுக்களுக்கே கிடைக்கின்றன. இக்குழுக்களும் கூட வட்டித் தொழில் செய்துதான் கடனை அடைக்கின்றனவே தவிர, சுய தொழில் செய்து அல்ல. விதிவி லக்காக மிகச் சில குழுக்கள் மட்டுமே சிறு தொழில் ஈடுபட்டுள்ளன.

### அறுக்கப்படும் ஆடுகளுக்கு கொடுக்கப்படும் அகத்திக்கீரை

புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் நாடு மீண்டும் காலனியாக்கப் பட்டு வருவதன் விளைவாக, நமது நாட்டின் விவசாயம் கடுமையாக பாதிக்கப் பட்டு வேலையின்மையும் தற்கொலை களும் பெருகி வருகின்றன. இதன் விளை வாக, சமூக கொந்தளிப்பும் விவசாயிகளின் எழுச்சியும் மூண்டெழுவதற்கு முன்பாக, அவற்றைத் தணித்து சாந்தப்படுத்தி, திசை திருப்பும் நோக்கத்துடனேயே இத்தகைய மகளிர் சுயஉதவிக் குழுக்களை ஏகாதிபத்தி யங்களும் இந்திய ஆட்சியாளர்களும் ஏகா திபத்தியங்களின் ஏவல் நாய்களான தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் நாடெங்கும் வேகமாக நிறுவி வருகின்றன.

மகளிர் சுய உதவிக் குழுக்களை நிறுவு வதற்கான நோக்கத்தை, விவசாயத்தையே நாசமாக்கி விவசாயிகளை நிலத்தை விட்டே விரட்டிய 'பசுமைப் புரட்சி'யின் நாயகன் என்றழைக்கப்படும் டாக்டர். எம்.எஸ். சுவாமிநாதன் தெளிவாகவே கூறு கிறார்: ''நமது நாட்டில் பெரும்பான்மை யான மக்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அதிக வேலை வாய்ப்பளிப்பது விவசா யம்தான். இந்தியக் குடும்பங்களில் நிதி நிர்வாகம் செய்வதிலும் பெண்களே அதிகப் பங்கு வகிக்கின்றனர். விவசா யத்தில் நவீன தொழில் நுட்பமும் பண்ணை விவசாயமும் விவசாய வேலை வாய்ப்பு களைக் குறைத்து பெண்களை அதிக பாதிப் புக்கு உள்ளாக்கியுள்ளது. இதன் விளைவு சமூக ரீதியிலும் எதிரொலிக்கும். எனவே கிராமப்புற பெண்களுக்கான மேம்பாட்டுத் திட்டங்களை விரிவாக்குவது உடனடி அவ சியமாகும்.'' (கேரள வேளாண் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய உரை).

சுருக்கமாகச் சொன்னால், ''அறுக்கப் போகும் ஆடுகளுக்குக் கொஞ்சம் அகத்திக் கீரை கொடு'' என்று ஆலோசனை கூறு கிறார், அமெரிக்க அடிமையான வேளாண் துரை வல்லுநர் சுவாமிநாதன்.

ஏகாதிபத்திய வல்லரசுகளும் பன்னாட்டு நிறுவனங்களும் தமது கொள்ளைச் சுரண்டலுக்கான காலனியா திக்கச் சதித் திட்டங்களை உருவாக்கும் போது, அவற்றால் பாதிக்கப்படும் மக்க ளுக்கு அற்பச் சலுகை, நிவாரணத் திட்டங் களையும் சேர்த்தே திட்டமிடுகின்றன. இதன் மூலம் ஒடுக்கப்படும் சுரண்டப்படும் மக்கள் தமக்கு எதிராக அணிதிரண்டு போராடுவதைத் தடுத்து சலுகைகளைக் காட்டி சாந்தப்படுத்துவது, பாதிக்கப்பட்ட மக்களிடையே எட்டப்பர்களை உருவாக்கு வது, எதிர்காலத்தில் வரப்போகும் தாக்குத லிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்வது என்பதே இவற்றின் நோக்கமாக உள்ளது. இதைத்தான் ''கீனீசியப் பொருளாதாரத் திட்டம்'' என்று ஏகாதிபத்திய வாதிகள் பெருமையுடன் குறிப்பிடுகின்றனர். அந்த வழியில் மரணக் குழியின் விளிம்பில் நின்று தவிக்கும் விவசாயிகள், கோடிக்கால் பூதங்களாக புரட்சிப் பாதையில் அணிதிரள் வதைத் தடுக்கும் சதி வேலைகளில் ஒன்றுதான் இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள். தான் அறிந்தே செய்து வரும் ஏகாதிபத்திய சேவையை, அறியாமலேயே செய்யும் படிப்பறிவற்ற, மகளிர் சுய உத விக்குழு அமைப்பாளரான சின்னப் பிள்ளையின் காலில் பிரதமர் வாஜ்பாய் விழுந்து வணங்கியதன் இரகசியமும் இதுதான்!

மறுகாலனியாதிக்க இருள் நாட்டைச் சூழ்ந்துள்ள வேளையில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் எனும் வஞ்சக வலை விரிக்கப்பட்டு வருகிறது. அந்த வலையில் சிக்கி அடிமைகளாக அல்லற்படப் போகி றோமா? அல்லது வஞ்சக வலை விரித்து வரும் ஏகாதிபத்திய வல்லரசுகளையும் அவற்றின் எடுபிடிகளான தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் அம்பலப்ப டுத்தி முறியடித்து விடுதலையைச் சாதிக்கப் போகிறோமா?

**தகவல்:**
**விவசாயிகள் விடுதலை முன்னணி,**
**தேனி மாவட்டம்.**

# தன்னார்வக் குழுக்களின் தயவில் 'புரட்சி'!

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி அறிவியல் இயக்கத்தின் முக்கிய பொறுப்பில் உள்ளவர்கள் பெரும்பாலும் சி.பி.எம். கட்சியின் உறுப்பினர்களும் ஆதரவாளர்களுமாவர். பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் பணியாற்றும் டாக்டர் சுந்தரராமன் என்பவர் அகில இந்திய அறிவியல் இயக்கத்தின் முக்கிய தலைவர். இவர் சி.இ.ஆர்.டி என்ற தன்னார்வக் குழுவின் தலைமை இயக்குனருமாவார். இவரது நெருங்கிய சகாக்கள் அமெரிக்காவின் பிரபல ''எய்ட்'' (AID) என்ற தன்னார்வ நிறுவ னத்தின் உறுப்பினர்கள். இவர்கள் அறிவியல் இயக்கத்துக்கு அமெரிக்காவிலிருந்து நிதிதிரட்டி வலுவூட்டி வருகின்றனர். தமிழ்நாடு - பாண்டிச்சேரி அறிவியல் இயக்கமும், சி.பி.எம்.மின் மக்கள் திரள் அமைப்பான ஜனநாயக மாதர் சங்கமும் பல்வேறு தன்னார்வக் குழுக்கள் கூட்டு சேர்ந்துள்ள ''மக்கள் நல்வாழ்வு சபை ஒருங்கிணைப்புக் குழுவில்'' அங்கம் வகிக்கின்றன.

குமரி மாவட்டத்தில் சர்வதேச பெண்கள் தினம் மற்றும் பொது மாநாடுகளில் சி.பி.எம். ஆதரவு பெற்ற ''மலர்'' எனும் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் பெருந்திரளாகப் பங்கேற்றதை தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாநில மாநாட்டு அறிக்கையில் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளனர். இம்மகளிர் சுயஉதவிக் குழுக்களின் முன்னணியாளர்களை உள்ளாட்சித் தேர்தலில் நிறுத்தி ஓட்டுப் பொறுக்கவும் முயற் சித்து வருகின்றனர்.

சி.பி.எம். கட்சியை அரசியல் - சித்தாந்த ரீதியில் விமர்சிக்கும் நக்சல்பாரி புரட்சியாளர்களை சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள், அமெரிக்க கைக்கூலிகள் என்று அவதூறு செய்து வசைபாடியவர்கள், இன்று அமெரிக்க எடுபிடிகளுடனும் தன்னார்வக் குழுக்களுடனும் கூட்டு சேர்ந்து கொண்டு 'புரட்சி' செய்யக் கிளம்பியிருக்கி றார்கள். சி.பி.எம்.மின் புதிய 'போர்தந்திர இரகசியம்' இதுதான்!



படிப்பகம்

www.padippakam.com



# போலீசு குண்டர்களின் வெறியாட்டம் போலி கம்யூனிஸ்டுகளின் துரோகம்

கடந்த ஜூலை 22-ந் தேதி நள்ளிரவு. உழைத்துக் களைத்த அந்தக் கிராமம் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தது. திடீரென வாகனங்கள் அணிவகுத்து அக்கிராமத்தை நோக்கிச் சீறிவந்தன சீருடை அணிந்து பூட்சு கால்களுடன் அதிலிருந்து குதித்த நூற்றுக்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள், அக்கிராமத்து வீடுகளின் கதவுகளை துப்பாக்கிக் கட்டையால் உடைத்து உள்ளே புகுந்தனர். சகட்டு மேனிக்கு எல்லோருக்கும் அடி, உதை. கண்ணில்பட்ட பாத்திரங்கள், பொருட்கள் எதையும் விட்டு வைக்கவில்லை. அடி - உதை தாளாமல் உயிருக்கு அஞ்சி அருகிலுள்ள கரும்புக் காட்டுக்குள் கிராம மக்கள் தப்பியோடினர். வெறியாட்டம் போட்டு ஓய்ந்த பிறகு, அந்த பயங்கரவாதிகள் தமது வாகனங்களில் திரும்பிச் சென்றனர்.

இது ஏதோ பீகார், உ.பி. மாநிலங்களில் கொள்ளைக்காரர்கள் நடத்திய தாக்குதலின் கதை அல்ல. திருவாரூர் மாவட்டம் கீழ மணக்கால் கிராமத்தில் தமிழகப் போலீசார் நடத்திய பயங்கரவாத வெறியாட்டம்தான் இது. சீருடை அணிந்த போலீசு குண்டர்கள், இப்படி பயங்கரவாத வெறியாட்டம் போடக் காரணம் என்ன?

திருவாரூர் மாவட்டம் கீழமணக்கால் கிராம மக்கள், ஊர் கட்டுப்பாடு போட்டு சாராயத்தை ஒழித்துள்ளனர். ஜூலை 22-ந் தேதியன்று இரவு 8 மணியளவில், மது விலக்கு போலீசு உதவி ஆய்வாளர் பெரியய்யா தலைமையில் 5 போலீசார் வயிறு முட்டக் குடித்து விட்டு இக்கிராமத்துக்கு வந்தனர். அக்கிராமத்தில் ஜீவா என்பவரின் பெட்டிக் கடையில் சாராயம் விற்பதாகக் கூறி, அவரது தம்பி தமிழரசனை அடித்து இழுத்து ''ஜீப்''பில் ஏற்றினர். வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த மலைக் கள்ளன் என்பவரிடம், ''எங்கேடா சாராயம் விக்குது?'' என்று கேட்டு மிருகத்தனமாகத் தாக்கியதில் அவர் மயக்கமடைந்து சரிந்தார். இந்த அராஜகத்தைக் கண்டு வெகுண்டெழுந்த பொது மக்கள், ''ஜீப்''பை முற்றுகையிட்டு கைது செய்தவர்களை விடுவித்து போலீசாரை விரட்டியடித்தனர். ''எங்களையே எதிர்க்க துணிஞ்சிட்டீங்களா! உங்களை சும்மா விட மாட்டோம்'' என்று எச்சரித்துக் கொண்டே இக்குடிகார போலீசு குழு புறப்பட்டுச் சென்றது. அதன் பிறகுதான், இரவு நடந்த பயங்கரவாத வெறியாட்டம்.

உருட்டுக் கட்டைகளுடன் நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் திமுதிமுவென ஓடி வந்து வீட்டுக்கதவுகளை உடைத்தனர். தூங்கிக் கொண்டிருந்தவர்களை பூட்சுக் காலால் மிதித்து சரமாரியாக அடித்தனர். பண்ட பாத்திரங்களை உடைத்து தெருவில் வீசியெறிந்தனர். உத்தரத்தில் தொங்கும் மின்விசிறியைக் கூட தடியால் அடித்து நாசப்படுத்தினர். பெண்களை நாக்கூசும் கெட்ட வார்த்தைகளால் திட்டி, காட்டுத்தனமாக அடித்து சேலையைப் பிடித்து உருவினர். கர்ப்பிணிப் பெண் என்றும் பாராமல் வயிற்றில் எட்டி உதைத்தனர். ஒரு வீடு கூட பாக்கியில்லாமல் எல்லா வீடுகளையும் உடைத்து நாசப்படுத்தினர். ஊரிலுள்ள தென்னை மரங்களிலிருந்து அத்தனை இளநீர் - தேங்காய்களையும் சூறையாடினர்.

உயிருக்குப் பயந்து கரும்புக் காட்டுக்குள் ஓடி ஒளிந்தவர்களை விரட்டிப் பிடித்து 15 பேரை போலீசார் கைது செய்தனர். முதியவர்கள், சிறுவர்கள், மாணவர்கள் ஆகியோரே இவர்கள். இதுதவிர ஊரிலுள்ள இளைஞர்கள் தப்பியோடி விட்டதால், அவர்கள் சரணடைந்தால்தான் உங்களை விடுவிப்போம் என்று அவர்களின் பெற்றோரை போலீசார் இழுத்துச் சென்றுள்ளனர். கரும்பு வயல்களில் பதுங்கிய ஆண்கள் எவருமே ஊருக்குள் நுழைய முயாமல் மூன்று நாட்களுக்கு போலீசார் ரோந்து சுற்றி பீதியூட்டினர். தற்போது கிராமத்தில் போலீசு முகாமிடாத போதிலும், எப்போதும் யாராவது கைது செய்யப்படலாம், பொய் வழக்கு சோடிக்கப்படலாம் என்ற அச்சமும் பீதியுமே மணக்காலில் நிலவுகிறது.


கீழமணக்கால் கிராமமும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களும் நீண்ட காலமாக வலது கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியாகும். இருப்பினும் போலீசு வெறியாட்டத்தைக் கண்டிக்கவோ, அதற்கெதிராகப் போராடவோ வலது கம்யூனிஸ்ட் கட்சி முன்வரவில்லை. கட்சித் தலைவர்களுக்குத் தகவல் தெரிவித்தும் கூட, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் சொல்லக்கூட யாரும் வரவில்லை. போலீசின் தாக்குதலுக்கு அஞ்சி, பக்கத்துக் கிராமத்துக்கு ஓடிய கீழ மணக்கால் கிராம மக்களை, ''நீங்கள் இங்கே தங்கக் கூடாது; இதனால எங்களுக்கு பாதிப்பு வரும்'' என்று வலது கம்யூனிஸ்டுகளே அக்கிராமத்திலிருந்து விரட்டியடித்துள்ளனர். ''ஒரே கட்சியிலே, ஒரே ஒன்றியத்திலே இருக்கும்; ஒரே மேடையிலே பேசியிருக்கோம். ஆனா பிரச்சினைன்னு வந்ததும் இப்படி நடந்துக்கிறாங்களே!'' என்று வேதனைப் பட்டார் வலது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர்.

இப்போலி கம்யூனிஸ்டு தலைவர்கள் போலீசு அடக்குமுறைக்கு அஞ்சி ஒதுங்கிக் கொண்டது மட்டுமல்ல; போலீசு வெறியாட்டத்தை எதிர்க்கும் புரட்சிகர அமைப்பினரை போலீசுக்குக் காட்டிக் கொடுக்கவும் துணிந்து விட்டனர். இப்பகுதியில் இயங்கி வரும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியின் செயல்வீரர்களான தோழர்கள் இரவி, ஸ்டாலின் இருவர்தான் இப்பிரச்சினைக்கு முக்கிய காரணம் என்று போலீசுக்கு காட்டிக் கொடுத்ததோடு, இவ்விரு தோழர்களின் குடும்பங்களை ஊரை விட்டு ஒதுக்கி வைப்பதாகவும் உள்ளூர் தலைவர்கள் அறிவித்துள்ளனர். வலது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஊராட்சி மன்றத் தலைவரான சேரன், ஆள்காட்டி வேலை செய்ததோடு, வெறியாட்டம் போட்ட போலீசு குண்டர்களுக்கு உணவு வாங்கிக் கொடுத்தும் இளநீர் சீவிக் கொடுத்தும் விசுவாச நாயாகத் தன்னை இனங்காட்டிக் கொண்டுள்ளார்.

போலி கம்யூனிஸ்டுகள் கோழைகள் மட்டுமல்ல; கடைந்தெடுத்த துரோகிகள் என்று நக்சல்பாரி புரட்சியாளர்கள் நீண்ட காலமாகப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். கீழமணக்காலில் நடந்த சம்பவங்கள் இந்த உண்மையை மீண்டும் நிரூபித்துக் காட்டி விட்டன.

தகவல்:
— புரட்சிகரமாணவர் - இளைஞர் முன்னணி, திருவாரூர் மாவட்டம்.

கீழமணக்கால் கிராமத்தில் போலீசு குண்டர்கள் நடத்திய பயங்கரவாத வெறியாட்டம்.



www.padippakam.com



# சவடாலுக்கு மூலஉத்தி சந்தர்ப்பவாதமே தந்திர உத்தி — ''தமிழ்த் தேச''த்தின் சதிராட்டம்

மார்க்சிய - லெனினிய நூல்களை மொழி பெயர்ப்பவர்கள் எல்லாம் அவற்றைப் புரிந்து கொண்டிருப்பார்கள், புரட்சியாளர்களாய் இருப்பார்கள் என்கிற அவசியமில்லை. சோவியத் ஒன்றியத் தமிழ்ப் பதிப்புகளை மொழிபெயர்த்த இரா. கிருஷ்ணய்யா, முன்னாள் சி.பி.ஐ. பிரமுகராக இருந்து பா.ஜ.க.வுக்குத் தாவிய ஏ. சீனிவாசன் போன்றவர்கள் கூட மொழி பெயர்த்தார்கள். அதற்காக அவர்கள் தமது மொழிபெயர்ப்புகளைப் புரிந்து கொண்டு புரட்சியாளர்களாகி விட்டார்களா, என்ன? அதுபோன்றுதான் மார்க்சின் ''மூலதன''த்தை மொழிபெயர்த்த தியாகுவும். அவர் தனது மொழி பெயர்ப்புத் ''திறனை'' வலிந்து வந்து ''பு.ஜ.'' விடமும் காட்டி இருக்கிறார். ''தேசிய இன சுயநிர்ணய உரிமை'' என்ற சொற்றொடருக்கு மொழி பெயர்ப்பு செய்யும் ''மயிர் பிளக்கும்'' விவாதங்கள் நடத்தி ''அதை''க் கடைசியில் பிளந்தே காட்டியவர் அல்லவா?

''இந்திய அரசு ஈழ விடுதலைக்கு நட்பு சக்தியோ, நடுநிலை சக்தியோ கிடையாது. எதிரிச் சக்திதான். நட்பு சக்தியைத்தான் வென்றெடுக்கவோ, நடுநிலைப்படுத்தவோ முடியும்'' என்று ''பு.ஜ.'' (தனது கட்டுரையில்) தமிழில்தான் குறிப்பிட்டிருந்தது. ஆனால் தியாகு, ''நடுநிலைப்படுத்தவோ'' என்ற தமிழ்ச் சொல்லை ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்து, அந்த ஆங்கிலச் சொல்லுக்குப் பல பொருள் இருப்பதை எடுத்துக் காட்டி, இப்படிப் பல்பொருள் கொண்ட ஆங்கிலச் சொல்லுக்கு ''நடுநிலைப்படுத்தல்'' என்ற பொருள்பட பு.ஜ. எழுதியது பொருத்தமன்று எனவும், இருந்தாலும் வாதம் திசை திரும்பக் கூடாது என்பதற்காக நடுநிலைப்படுத்தல் என்ற பொருளின் அடிப்படையிலேயே விமர்சனத்தைத் தொடர்ந்திருக்கிறார்.

நடுநிலைப்படுத்துதல் என்ற தமிழ்ச் சொல்லுக்கு என்ன பொருளோ அதை மட்டும்தான் ''பு.ஜ.'' எழுதியிருந்தது. ஆனால் தாய்த் தமிழ், தமிழ்த் தமிழர் என்றெல்லாம் அழுத்தம் தரும் திருவாளர் தியாகு ஆங்கிலத்தில்தான் சிந்திப்பார் போலிருக்கிறது. எனவேதான் தமிழில் இருந்து ஆங்கிலத்துக்குப் போய் சிந்தித்து மீண்டும் தமிழுக்கு வந்து ''நட்பு சக்தியை வென்றெடுக்க (ஈர்த்தெடுக்க) வேண்டும் என்பதில் எவ்வித மறுப்புக்கும் இடமில்லை. ஆனால் நட்புச் சக்தியை 'நடுநிலைப்படுத்த' வேண்டிய தேவை என்ன? நட்புச் சக்தியை 'நடுநிலைப்படுத்து'வதாகச் சொல்லும்போதே ஏரணம் (logic) இடிக்கவில்லையா? பகைவர்களை அல்லது அவர்களில் ஒரு பகுதியினரை 'நடுநிலைப்படுத்து'வது தானே சரியான உத்தியாக இருக்க முடியும்? அதுதானே ஏரண வகையில் பொருத்தமும் கூட?'' என்று கேட்கிறார்.

இந்த அடுத்தடுத்த கேள்விகளுக்கு முன்புள்ள பீடிகையைப் பாருங்கள். ''நட்புச் சக்தியை வென்றெடுக்க (ஈர்த்தெடுக்க) வேண்டும் என்பதில் எவ்வித மறுப்புக்கும் இடமில்லை'' என்கிறார், தியாகு. இதன் பொருள் என்ன? நட்புச் சக்தி என்பது இன்னும் நம்பக்கம் வந்துவிடவில்லை. இனிமேல்தான் வென்றெடுக்க (ஈர்த்தெடுக்க) வேண்டும் என்பதை தியாகு ஒப்புக் கொள்கிறார். அப்படி என்றால் அது எங்கிருக்கிறது? எங்கிருந்து அதை வென்றெடுக்க (ஈர்த்தெடுக்க) வேண்டும்? தியாகுவும் அவரைச் சார்ந்தவர்களும் எப்படிக் கருதுகிறார்களோ தெரியாது; நம்மைப் பொறுத்தவரை நட்புச் சக்தி என்று மதிப்பீடு செய்து விடுவதாலேயே அது நம் பக்கமோ, நடுநிலையிலோ இருந்து விடுவதில்லை. இப்போதும் அது நம் இயக்கத்தின் எதிர்த் தரப்புச் செல்வாக்கில் இருக்கிறது. ஆகவேதான் அது வென்றெடுக்கப்பட வேண்டியுள்ளது. வென்றெடுக்கும் நம் முயற்சி காரணமாக, அது நேரடியாகவே நம்பக்கம் வந்துவிடும் என்பதும் நிச்சயமில்லை. அப்படியும் வந்துவிடலாம் அல்லது அது குறிப்பிட்ட சமயத்தில் நடுநிலையாகவும் இருக்கலாம். ஆகவே நட்புச் சக்தியை ''நடுநிலைப்படுத்து''வதாகச் சொல்லும்போது ஏரணம் எங்கும் இடிக்கவில்லை.



''இந்திய நாட்டின் அரசு மற்றும் ஆளும் வர்க்கங்களின் நலன்கள் தமிழீழம் அமைவதற்கு எதிராக இருக்கிறதே; இந்திய நாடு (அரசும் ஆளும் வர்க்கங்களும்) வலியச் சென்று தமிழீழ விடுதலைக்கு எதிரான பகைச் செயல்களில் ஈடுபடுகிறதே - இதற்கு என்ன காரணம், என்ன அடிப்படை என்று தியாகுவும் அவரது சகபாடிகளும் எண்ணியதுண்டா?''

இதற்கு மாறாக தியாகுவின் வாதத்தில்தான் ஏரணம் இடிக்கிறது. எப்படி? நட்புச் சக்தியை வென்றெடுக்க, ஈர்த்தெடுக்க வேண்டும் என்கிறார். அவரது நிலையின்படி ''பகைவர்களை அல்லது அவர்களில் ஒரு பகுதியினரை நடுநிலைப்படுத்துவதுதான் சரியான உத்தியாகும். அதுதான் ஏரண வகையில் பொருத்தமானதும்'' ஆகும் என்கிறார். அப்படியானால் நட்புச் சக்தி ஏற்கனவே நம் பக்கம் இருக்கிறது; அல்லது நடுநிலையில் இருக்கிறது என்று பொருள்படும். நம் பக்கம் இருப்பவர்களை வென்றெடுக்க (ஈர்த்தெடுக்க) வேண்டும் என்பது ஏரண வகையில் இடிக்கிறது. நட்புச் சக்தி நடுநிலையில் இருக்கிறது என்றால், அது ஏரண வகையில் மட்டுமல்ல; யதார்த்த வகையிலும் இடிக்கிறது. இதற்கு மாறாக நட்புச் சக்தி, எதிர்த்தரப்பின் செல்வாக்கில் இருக்கிறது; வென்றெடுக்க (ஈர்த்தெடுக்க) வேண்டும் என்பதுதானே யதார்த்த வகையிலும் ஏரண வகையிலும் பொருத்தமானது. எதிர்த்தரப்பின் செல்வாக்கில் இருக்கும் நட்புச் சக்தியை ஒரேயடியாக நம் பக்கம் வென்றெடுக்க முடியாமல் போகும்போது, நடுநிலைப்படுத்தவாவது முயலுவோம். இப்படி ஒரு இடைநிலையை மறுதலிக்க முடியாது என்பதால் தான் ''வென்றெடுக்கவோ நடுநிலைப்படுத்தவோ முடியும்'' என்று பு.ஜ. எழுதியது.



படிப்பகம்

அடுத்து, ''பகைவர்களை அல்லது அவர்களில் ஒரு பகுதியினரை 'நடுநிலைப் படுத்து'வதுதான் சரியான உத்தியாக இருக்கும். அதுதான் ஏரண வகையில் பொருத்தமானது'' என்றும் தனது நிலையை விளக்குவதோடு ''எதிரிச் சக்தியை நடுநிலைப்படுத்த மறுப்பதாகவும்'' பு.ஜ. மீது விமர்சனம் வைக்கிறார், தியாகு. கவனியுங்கள்! இங்கே பகைவர்களில், எதிரிச் சக்தியில் ஒரு பகுதியினரை நடுநிலைப்படுத்துவதாக மட்டும் தியாகு பேசவில்லை. பகைவர்கள் அல்லது அவர்களில் ஒரு பகுதியினரை; எதிரிச் சக்தியை நடுநிலைப்படுத்துவதாகக் கூறும்போது பகைவர்கள் அனைவரையும் அல்லது அவர்களில் ஒரு பகுதியினரை - அதாவது எதிரிச் சக்தியை முழுவதுமாக நடுநிலைப் படுத்துவதாக எழுதுகிறார். பகைவர்கள் (அனைவரையும்), எதிரிச் சக்தி (முழுவதையும்) நடுநிலைப்படுத்துவது என்றால் யாருக்கும் யாருக்கும் இடையே நடுநிலைப்படுத்துவது? பகைவர்கள் (அனைவரையும்), எதிரிச் சக்தி (முழுவதையும்) நடுநிலைப்படுத்துவது என்றால் யாருக்கு எதிராக இயக்கம் நடத்துகிறார்கள்? அப்படிச் செய்வது என்றால் பகைவர்கள், எதிரிச் சக்தி, நடுநிலைப்படுத்துவது எனப்படுபவை எல்லாமே பொருளற்றதாகவும், கேலிக் கூத்தாகவும் ஆகிவிடாதா?

சந்தர்ப்பவாதத்தையே தியாகுவும் அவரது சகபாடிகளும் கொண்டிருப்பதால்தான், அவர்களுடைய தர்க்கங்கள் எல்லாம் இப்படிக் குதர்க்கங்களாக வருகின்றன!

''எல்லோரையும் ஒரே சமயத்தில் எதிர்க்கக் கூடாது என்கிற அரசியல் தந்திரத்திற்காக இந்தியாவுடன் நட்புப் பாராட்டும் உத்தியை இப்போதைக்குக் கடைப்பிடிக்கிறோம் என்று புலிகளின் ஆதரவாளர்கள் வாதம் புரியலாம்'' என்ற அடிப்படையில் பு.ஜ. எழுதியிருந்தது. இவ்வாறு ''அனுமானம் செய்து கொண்டு அதற்கு விடையும் எழுதுவது காற்றோடு கத்திச் சண்டை போடுகிற வேலை'' என்று ஏகடியம் பேசுகிறார், தியாகு.

ஆனால், அடுத்த வரியிலேயே பு.ஜ.வின் வாதம் அனுமான அடிப்படையிலானது அல்லவென்பதற்கு தியாகுவே வாக்குமூலம் தருகிறார். ''தமிழீழ விடுதலைப் போரைப் பொருத்தவரை இந்திய அரசு மூலஉத்தி வகையில் (வரலாற்று நோக்கில்) பகைச் சக்திதான். இதில் இரகசியம் ஒன்றுமில்லை. பேரம் ஒன்றுமில்லை'' என்கிறார், தியாகு.

மூல உத்தி வகையில் (வரலாற்று நோக்கில்) தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு இந்திய அரசு பகைசக்திதான்; இருந்தபோதும் தந்திர உத்தி வகையில் அப்படிக் கருத முடியாது; பகை முகாமிலான முரண்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்ளும் தந்திர உத்தியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதுதான் ''புதிய ஜனநாயக''த்துக்கு இரண்டு தவணையில் தியாகு எழுதிய கட்டுரையின் செய்தியாகும். இதை மேலும் கோடிட்டுக் காட்டுவதற்கான சுருக்கமான சொற்றொடர் கிடைக்கவில்லை. மற்றபடி புலிகளின் நிலையை சுருக்கமாகத் தொகுத்துக் கொடுத்து மறுப்பு எழுதியிருக்கிறோம். இது ஏதோ நேர்மையற்ற செயல் போல தியாகு ஏகடியம் எழுதுகிறார். இப்படி ஏகடியம் பேசுவது கூட ''பு.ஜ.''வின் ''அனுமான''த்தை நேரடியாக மறுக்க முடியாத கையாலாகாத்தனம்தான்! ''அனுமான''த்திற்கும் கூட பதில் எழுத முடியாமற்போகும்போது, ஏகடியம் எழுதி மழுப்புவதுதான் நேர்மை போல இருக்கிறது!

''... மணியரசன், சுப.வீரபாண்டியன், தியாகு ஆகியோர். தலைமையிலான குழுக்கள் மொத்தத்தில் ஊளறிக் கொட்டிக். கிளறி மூடிவிட முயலுகின்றன'' என்று பு.ஜ. எழுதியிருந்தது. இதைப் படித்ததும் தியாகுவுக்கு ஆத்திரம் பொங்கி விட்டது போலும்.

**''நட்பு சக்தியை வென்றெடுப்பது, நடுநிலைப்படுத்துவது என்று குறிப்பிடும் போது, என்ன பொருளோ அதை மட்டும்தான் 'பு.ஜ.' எழுதியிருந்தது. ஆனால் தாய்த் தமிழ், தமிழ்த் தமிழர் என்றெல்லாம் அழுத்தம் தரும் திருவாளர் தியாகு ஆங்கிலத்தில்தான் சிந்திப்பார் போலிருக்கிறது. எனவேதான் தமிழில் இருந்து ஆங்கிலத்துக்குப் போய்ச் சிந்தித்து மீண்டும் தமிழுக்கு வந்து நட்பு சக்தியை வென்றெடுக்க (ஈர்த்தெடுக்க) வேண்டும் என்கிறார்.''**

அவர்களாவது குழுக்களாக சேர்ந்து உளறுவதாகவும், பு.ஜ. எந்தக் குழு சார்பில் பேசுகிறது என்று கேட்டு, அதை தெரிவித்தால் உளறிக் கொட்டிக் கிளறி மூட முயல்வது யார் என்று வாசகர்கள் முடிவு செய்வார்கள் என்கிறார், தியாகு.

விடுதலைப் புலிகளும், நெடுமாறன் போன்ற அவர்களின் இந்தியப் பிரதிநிதிகளும் இந்திய அரசின்பால் தங்கள் அணுகுமுறையை நேரடியாகவும், தெளிவாகவும் தெரிவித்து விடுகிறார்கள். ஆனால் மணியரசன், சுப.வீரபாண்டியன், தியாகு ஆகியோர் தலைமையிலான குழுக்கள் அப்படியல்ல; உளறிக் கொட்டிக் கிளறி மூடிவிட முயலுகின்றன என்பதே பு.ஜ.வின் விமர்சனம். இதை மறுத்து தமது நிலையைத் தெளிவாக வைப்பதற்குப் பதில் விமர்சன முறை, சொற்கள் மீது வாதங்களை அடுக்குகிறார், தியாகு. அதே சமயம் பு.ஜ.வுக்கான மறுப்புக் கட்டுரையிலும் தமது நிலை குறித்து உளறிக் கொட்டுகிறார்.

''இந்தியாவின் எந்தப் பகுதியையும் பிரித்து தமிழீழம் அமையப் போவதில்லை; ஆகவே, தமிழீழம் அமைவது அதனளவிலேயே இந்திய நாட்டின் (அரசு மற்றும் மக்களின்) நலன்களுக்கு எதிராக அமைய வேண்டிய கட்டாயமில்லை; தமிழீழம் தானாக வலிய வந்து இந்திய அரசைப் பகைத்துக் கொள்ள வேண்டிய அவசியமுமில்லை. இந்திய அரசுதான் மக்கள் நலனுக்கு மாறாகவும், ஆளும் வர்க்க நலனுக்குத் தோதாகவும் வலியச் சென்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் குலைக்க முயல்கிறது; இந்த உண்மைகளை வெளிப் படுத்துவதும், இந்திய அரசின் பகைச் செயல்களை எதிர்த்து முறியடிப்பதும் இயன்ற வரை இந்திய அரசை (பு.ஜ. மொழியில்) 'நடுநிலைப்படுத்து'வதும் தமிழீழ விடுதலைப் போராட்டமும் இங்கு அதற்கு ஆதரவான இயக்கமும் கருத்துச் செலுத்தி, நிறைவேற்ற வேண்டிய கடமைகள்'' என்கிறார் தியாகு.

தியாகுவின் இந்தக் கூற்று எதைக் காட்டுகிறது? தமிழீழம் இந்திய நாட்டின் (அரசு மற்றும் மக்களின்) நலனுக்கு எதிரானதாக அமையவில்லை என்றாலும் இந்திய ஆளும் வர்க்க நலன்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்குத் தோதாக இல்லை; அதனால்தான் இந்திய அரசு வலியச் சென்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் குலைக்க முயல்கிறது, பகைச் செயல்களில் ஈடுபடுகிறது, என்பதுதானே தியாகுவின் வாதம். மேலும் இந்திய அரசின் பகைச் செயல்களை எதிர்த்து முறியடிப்பதும், இயன்ற வரை இந்திய அரசை நடுநிலைப்படுத்துவதும் தமது கடமைகள் என்கிறார் தியாகு.

தமிழீழம் இந்திய நாட்டின் (அரசு மற்றும் மக்களின்) நலன்களுக்கு எதிராக அமையவேண்டிய கட்டாயமில்லை; தமிழீழம் தானாக வலிய வந்து இந்திய அரசைப் பகைத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை என்கிற வாதம் பிரச்சினையின் ஒரு பகுதியை மட்டுமே எடுத்து வைக்கிறது. முரண்பாட்டின் ஒரு கூறை மட்டுமே பார்க்கிறது. அதன் மறுகூறு இந்திய நாட்டின் (அரசு மற்றும் ஆளும் வர்க்கங்களின்) நலன்கள் தமிழீழம் அமைவதற்கு எதிரானதாக இருக்கிறது. அதனால் தான் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்குப் பகையான செயல்களில் ஈடுபட்டு, அதைக் குலைக்க முயல்கிறது, இந்திய அரசு.

ஆனால், இந்திய நாட்டின் (மக்கள் மட்டுமல்ல, அரசு) நலன்களுக்கும் ஆளும் வர்க்க நலன்களுக்கும் இடையே ஏதோ மாறுபாடு இருப்பதைப் போலவும், அந்த மாறுபாட்டைப் பயன்படுத்தி இந்திய அரசின் பகைச் செயல்களை முறியடிப்பதோடு, இயன்ற அளவு இந்திய அரசை நடுநிலைப்படுத்தும் கடமையை நிறை

www.padippakam.com

வேற்றப் போவதாகவும் தியாகு கூறுகிறார். தியாகு குறிப்பிடும் இந்திய நாட்டின் அரசு நலன்கள் என்ன? ஆளும் வர்க்க நலன் என்ன?

தியாகுவின் கூற்றுப்படி, தமிழீழம் அமைவது இந்திய நாட்டின் (அரசு மற்றும் மக்களின்) நலன்களுக்கு எதிராக அமைய வேண்டிய கட்டாயமில்லை; அது வலிய வந்து இந்திய அரசைப் பகைக்க வேண்டிய அவசியமுமில்லை; அதேசமயம் இந்திய நாட்டின் அரசு மற்றும் ஆளும் வர்க்கங்களின் நலன்கள் தமிழீழம் அமைவதற்கு எதிரானதாக இருக்கிறதே; இந்திய நாடு (அரசும் ஆளும் வர்க்கங்களும்) வலியச் சென்று தமிழீழ விடுதலைக்கு எதிரான பகைச் செயல்களில் ஈடுபடுகிறதே - இதற்கு என்ன காரணம், என்ன அடிப்படை என்று தியாகுவும் அவரது சகபாடிகளும் எண்ணியதுண்டா?

சோ, வாழப்பாடி, ஜெயலலிதா, சுப்பிரமணிய சாமி போன்ற கடும் ஈழ எதிர்ப்பாளர்கள் குற்றஞ்சாட்டுவதைப் போல ''இந்தியாவின் ஒரு பகுதியையும் பிரித்துத் தமிழீழம்'' அமைக்கப்படுமா, இல்லையா என்பதல்ல இந்திய நாட்டின் (ஆளும் வர்க்கங்கள், அரசின்) நலன்களைத் தீர்மானிப்பது. ஆனால் இதைக் கொண்டுதான், தமிழீழம் அமைவது இந்திய நாட்டின் (அரசு மற்றும் மக்களின்) நலன்களுக்கு எதிராக அமையவேண்டிய கட்டாயமில்லை, தமிழீழம் தானாக வலிய வந்து இந்திய அரசைப் பகைத்துக் கொள்ள வேண்டிய அவசியமுமில்லை என்றும் தனித் தமிழீழ அரசுக்கும் பிற அரசுகளுக்கும் இடையிலான உறவு போன்றவற்றை விளக்குவதற்கு தியாகு முயன்றுள்ளார்.

''தமிழீழ விடுதலைப் போரைப் பொருத்தவரை இந்திய அரசு மூலவுத்தி வகையில் (வரலாற்று நோக்கில்) பகைச் சக்திதான். இதில் இரகசியம் ஒன்றுமில்லை, பேரம் ஒன்றுமில்லை. இதைப் பலமுறை தெளிவாக சொல்லியிருக்கிறோம்'' என்கிறார், தியாகு. பு.ஜ. கேள்வி எழுப்புகிறதே என்பதற்காகத் தான் இப்படி அடித்துச் சொல்லுகிறார். உண்மையில் அவர்கள் பலமுறை சொல்லியிருந்தால், எப்படி, எந்த அடிப்படையில், என்ன காரணத்துக்காக, தமிழீழ விடுதலைப் போருக்கு இந்திய அரசு பகைச் சக்தி என்பதில் தெளிவிருக்க வேண்டும்.

தெற்காசிய பிராந்திய மேலாதிக்கம், விரிவாக்கம், வல்லரசுப் பேராசை, அகண்ட பாரதக் கனவு ஆகிய இந்திய நாட்டின் (அரசு மற்றும் ஆளும் வர்க்கங்களின்) நலன்கள்தாம் முதன்மையாகத் தமிழீழம் அமைவதற்கு எதிரானதாக உள்ளன. இவைதான் இந்திய நாடு வலியச் சென்று தமிழீழ விடுதலைப் போருக்கு எதிரான பகைச் செயல்களில் ஈடுபடுவதற்கும் காரணமாகும்.

அதனால்தான் தமிழீழ விடுதலைப் போருக்கு இந்திய அரசு பகைச் சக்தி என்கிறோம். ஆனால், தியாகுவோ எந்த விதத் தெளிவான விளக்கமுமின்றி தமிழீழ விடுதலைப் போரைப் பொருத்தவரை இந்திய அரசு மூலவுத்தி வகையில் (வரலாற்று நோக்கில்) பகைச் சக்திதான் என்கிறார். அதேபோல, தெற்காசிய பிராந்திய மேலாதிக்கம், விரிவாக்கம் போன்ற இந்தியாவின் நலன்கள் பற்றிய பு.ஜ.வின் கேள்விக்கும் அவை உண்டென்று கூறுகிறார். இதுவும் பெயரளவுக்கு (ஒப்புக்கு) ஒப்புக் கொள்வதுதான்.



''விடுதலைப் புலிகளும், நெடுமாறன் போன்ற அவர்களின் இந்தியப் பிரதிநிதிகளும் இந்திய அரசின் பால் தங்கள் அணுகுமுறையை நேரடியாகவும் தெளிவாகவும் தெரிவித்து விடுகிறார்கள். ஆனால், மணியரசன், சுப.வீரபாண்டியன், தியாகு ஆகியோர் தலைமையிலான குழுக்கள் அப்படியல்ல; உளறிக் கொட்டிக் கிளறி மூடிவிட முயலுகின்றன.''

இல்லையென்றால், தமிழீழ விடுதலைப் போருக்கு மூலவுத்தி வகையில் பகை சக்தியான இந்தியாவுக்கு தெற்காசிய பிராந்திய மேலாதிக்கம், விரிவாக்கப் பேராசை, துணை வல்லரசு நோக்கம் ஆகிய நலன்கள் உண்டென்று ஒருபுறம் கூறிக் கொண்டே, இந்திய அரசின் நலன்களுக்கு எதிராக தமிழீழம் அமைய வேண்டிய கட்டாயமில்லை என்று எழுதுவாரா?

இல்லை, தெரிந்தேதான் இந்திய அரசின் பாலான தமது சந்தர்ப்பவாத அணுகுமுறையை நியாயப்படுத்துவதற்காக இப்படி எழுதுகிறார் என்று எண்ணுவதற்கும் இடமுண்டு. ஏனென்றால் ''அமையவிருக்கும் தமிழீழம் இந்தியாவின் புவிசார் நலன்களுக்கு எதிராக இருக்காது'' (இதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது என்பதை மணியரசனிடம் கேட்டுத் தியாகு தெரிந்து கொள்ளலாம்) என்று விடுதலைப் புலிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் அறிவித்துள்ளனர். இந்தியாவின் புவிசார் நலன்கள் என்பது என்ன? தெற்காசிய பிராந்திய மேலாதிக்கம், விரிவாக்க நோக்கங்கள், துணை வல்லரசு முயற்சிகள் போன்றவை தானே! தமிழீழம் அமைவது இவற்றுக்கு எதிராக இருக்காது என்று பட்டவர்த்தனமாக கூறக்கூடாது என்பதற்காகத்தான், பொதுவில் தமிழீழம் அமைவது இந்திய நாட்டின் (அரசு மற்றும் மக்களின்) நலன்களுக்கு எதிராக அமைய வேண்டிய கட்டாயமில்லை என்கிறார். அதோடு இந்திய அரசின் நலன்களையும் மக்களின் நலன்களையும் (ஏதோ இரண்டும் ஒரே வகையினங்கள் என்பதைப் போல) இணைத்தே எழுதுகிறார், தியாகு.

மற்றொன்றையும் பு.ஜ.வுக்குப் புரிய வைக்க வேண்டியுள்ளது என்று சொல்லி, இரண்டு விடயங்களை தியாகு எழுதியுள்ளார். அவை, ''இந்திய அரசை நோக்கிப் பேசும்போது, தமிழகத்தின் சார்பில் பேசுகிற அதே குரலில் தமிழீழத்தின் சார்பில் பேச முடியாது, பேசக் கூடாது. இதேபோல், தமிழீழ விடுதலைப் புலிகளும் சிங்களப் பேரினவாத அரசை நோக்கிப் பேசுகிற அதே குரலில் இந்திய அரசை நோக்கிப் பேச முடியாது, பேசக்கூடாது'' என்கிறார் தியாகு.

எதை நோக்கிப் பேச முடியாது, பேசக் கூடாது என்று எதிர்மறையில் தியாகு வாதிடுகிறாரோ, அதையே நேர்மறையில் போட்டுப் பாருங்கள். இந்திய அரசை நோக்கி இங்குள்ள புலி ஆதரவாளர்கள் இருவேறு குரலில் பேசவேண்டும். ஒன்று தமிழகத்தின் சார்பில்; இரண்டு, தமிழீழத்தின் சார்பில். விடுதலைப் புலிகளைப் பொருத்தவரை இந்தியா, சிங்களப் பேரினவாத அரசு ஆகியவற்றுக்கு எதிராக இருவேறு குரல்களில் பேசவேண்டும் என்கிறார்.

இருந்தபோதும், புலிகளும் சரி, இங்குள்ள அவர்களின் ஆதரவாளர்களும் சரி, இந்திய அரசை நோக்கி ஒரே குரலில் தான் பேசுகிறார்கள். அமையவிருக்கும் தமிழீழம் இந்திய நாட்டின் (புவிசார்) நலன்களுக்கு எதிராக இருக்காது என்ற குரலில்தான் பேசுகிறார்கள். ஆனால் இந்திய நாடோ (அரசும் ஆளும் வர்க்கங்களும்) அமையவிருக்கும் தமிழீழத்துக்கும், அதற்கான இப்போதைய போராட்டத்துக்கும் எதிராக மட்டுமே இருக்கும் என்பதைத் திரும்ப நிரூபித்து வருகின்றது.

— தொடரும்


படிப்பகம்

www.padippakam.com

★ யு.டி.ஐ. விவகாரம், வடகிழக்கு மாநிலங்களில் நடைபெறும் இன விடுதலைப் போர் ஆகிய கட்டுரைகளில் விவரங்களைத் தெளிவாகத் தொகுத்தளித்தது பயனுள்ளதாக அமைந்துள்ளது. குறிப்பாக, இன்றைய செய்தி ஊடகங்கள் பல்வேறு விதமான கிசுகிசு, இருட்டடிப்பு பரப்புகையில், இவ்வாறு அவற்றை பற்றி தெளிவான விவரங்கள் கொடுத்தது எங்களைப் போன்று பின்தங்கிய பகுதிகளில் உள்ளவர்களுக்கு புரிதலைக் கொடுத்தது. இக்கட்டுரை படிக்கும் முன் வரை நாகர்களின் அகண்ட நாகாலாந்து என்ற விசயத்தை நாங்கள் 'அகண்ட இந்தியா' என்ற ஆர்.எஸ்.எஸ்.இன் கோட்பாட்டுடன் இணைத்துதான் புரிந்து வந்தோம். அந்த வகையில் கட்டுரை ஒரு தெளிவை ஏற்படுத்தியுள்ளது. தமிழகப் போலீசின் உண்மை முகம் கட்டுரை படித்தபின், அது தி.மு.க. ஊர்வலத்தில் நடந்து கொண்ட போக்குடன் ஒப்பிட்டு புதிய வாசகர்கள் பாராட்டினர்.

**– முனியப்பன்,**
**நாட்ராம்பாளையம்.**

★ பா.ஜ.க.வின் குறுகிய கால ஆட்சியிலேயே அனைத்து துறையிலும் கை வைத்து ஆப்பசைத்த குரங்காக மக்கள் முன் அம்பலமாகி போக காரணமான, மற்றுமொரு ஊழலான யூனிட் டிரஸ்ட் மோசடியின் முழு விவரமும் கட்டுரை உணர்த்தி இருந்தது. காலப்போக்கில் இடுப்பு கோவணத்தைக் கூட அந்நிய நாட்டில் காப்பீடு செய்து ஊழல் செய்து விடுவார்கள் போலிருக்கிறது.

**– பி. தர்மராஜ், திருச்சி.**

★ தற்போது ஐரோப்பாவை குலுக்கும் உலக வர்த்தகக் கழகத்திற்கெதிரான போராட்டம், ஏகாதிபத்தியங்களை குலை நடுங்க வைத்ததன் விளைவுதான் போராட்டக்காரர்களைக் கொடூரமாக ஒடுக்குவது. இது அவர்களின் ஜனநாயக வேடத்தைக் கலைக்கிறது. தொழிலாளி வர்க்கத்திற்கு புதிய நம்பிக்கை தருகிறது.

கட்டுரைகள் மிகவும் பெரிதாக உள்ளது. எவ்வளவுதான் அவசியமான சரியான விசயங்களைக் கொண்டிருந்தாலும், படிப்பதற்கு சோர்வைத் தருகிறது. ஒரு கட்டுரை நான்கு பக்கம் வருகிறது. அதே கட்டுரையை நான்கு தலைப்புகளின் கீழ் கொடுத்தால், படிப்பதற்கு உற்சாகமாக இருக்கும் என பல வாசகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

**– பு.ஜ. வாசகர் வட்டம்,**
**பாண்டிச்சேரி.**

★ கட்டுரைகள் அனைத்தும் சிறப்பாக உள்ளன. முன் அட்டை படம், போலீசுத் துறை பற்றிய கருத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. கோகோ-கோலா நிறுவனத்தில் தொழிலாளர் பிரச்சினை இருப்பது பு.ஜ.வில் படித்துதான் தெரிந்து கொண்




# வாசகர் கடிதம்

டோம். வேறு எந்த பத்திரிகையும் செய்தி ஊடகமும் இதைப் பற்றி எழுதவில்லை. கற்பனை உலகத்தில் கனவு காணும் தொழிலாளர்களை எச்சரிக்கையாகவும் நாட்டுப் பற்றுடனும் செயல்பட இக்கட்டுரை உறக்கத்தைக் கலைத்திருக்கிறது.

யு.டி.ஐ. கட்டுரை மூலம் தனியார் நிதி நிறுவனங்களை விட அரசு நிதி நிறுவன மோசடி இணையாக வளர்ந்து வருவதைப் பார்த்தால், அரசே மோசடிக்கு உடந்தையாக இருந்தால் யார் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற கேள்வி எழுகிறது. இனி, உழைக்கும் மக்கள்தான் நடவடிக்கையில் இறங்க வேண்டும் என்பதை இக்கட்டுரை உணர்த்தியது.

**– பு.ஜ. வாசகர் வட்டம், சென்னை.**

## ''புதிய ஜனநாயகம்'' வாசகர் வட்டத் தொடக்கவிழா

★ ஒசூரில் 12.8.01 அன்று ''புதிய ஜனநாயகம்'' வாசகர் வட்டத் தொடக்கவிழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி (சென்னை)யைச் சேர்ந்த தோழர் விஜயகுமார், ''மறுகாலனியாதிக்கப் போக்கில் தொழிலாளர்கள் நிலைமை'' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். நாடு மறுகாலனியாக்கப்படுவதை நடைமுறை உதாரணங்களுடன் எளிமையாக விளக்கிய அவர், தொழிலாளி வர்க்கம் சம்பள உயர்வு - போனஸ் என்ற குறுகிய பொருளாதாரக் கோரிக்கைகளுடன் இனிமேலும் முடங்கிக் கிடக்க முடியாது என்பதையும், நிதி மூலதன ஆதிக்கத்தை தகர்த்தெறிவதற்கான புரட்சியில் இறங்க வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார். இறுதியில் வாசகர்களின் கேள்விகளுக்கு விரிவாக பதிலளிக்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு வந்திருந்த த.நா.மா-லெ கட்சியைச் சேர்ந்த ஒருவரும், தமிழினவாதி ஒருவரும் தலைப்பைவிட்டு கேள்விகள் கேட்டு தம்மை அறிவுஜீவிகளாக காட்டிக் கொள்ள முயன்றனர். இவர்களது கேள்விகளக்கு விரிவாகப் பதிலளித்த தோழர் விஜயகுமார், நீங்கள் எந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள், எந்த வர்க்கத்தின் பிரதிநிதிகள் என்று கேட்ட போது, இவர்கள், தாங்கள் எந்த அமைப்பையும் சாராதவர்கள் என்று கோழைத்தனமாகவும் நைச்சியமாகவும் கூறினர். எந்த அமைப்பையும் சாராமல் இருப்பது தான் - நடுநிலை நாடகமாடுவது தான் மிக ஆபத்தானது என்று தோழர் விஜயகுமார் சுட்டிக் காட்டினார்.

மொத்தத்தில் வாசகர் வட்டத் தொடக்க விழாவும் அறைக் கூட்டமும் தொழிலாளர்கள் மத்தியில் புதிய நம்பிக்கையை விதைத்து செயலாற்ற அறைகூவுவதாக அமைந்தது.

**– வாசகர் வட்டம், ஓசூர்.**

## ''போலி சுதந்திரம் - இதற்கென்ன கொண்டாட்டம்?''

★ ஆகஸ்டு-15 போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தி ''போலி சுதந்திரம் - இதற்கென்ன கொண்டாட்டம்? தொடங்குவோம் புதியதோர் விடுதலை போராட்டம்'' என்ற தலைப்பில் திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் அருகில் 14.08.2001 அன்று மாலை தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நமது நாட்டில் பன்னாட்டு நிறுவனங்கள் பகற் கொள்ளை அடிப்பதையும், விளை பொருட்களுக்கு விலை இல்லாமல் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதையும், தொழிற்சங்க உரிமைகள் பறிக்கப்பட்டு தொழிலாளர்கள் நசுக்கப்படுவதையும் விளக்கி ''நமது நாட்டில் எங்குள்ளது சுதந்திரம்? இது யாருக்கான சுதந்திரம் என்பதை இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்'' என்றும் சிறப்புரையாற்றிய தோழர்கள் விளக்கிப் பேசினர்.

மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, பெண்கள் விடுதலை முன்னணி மற்றும் அனைத்து தரைக்கடை வியாபாரிகள் சங்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய இந்த தொடர் முழக்க ஆர்ப்பாட்டம், திருச்சி நகர மக்களிடம் புதிய சிந்தனையை ஊன்றியது. இந்நிகழ்ச்சியை உள்ளூர் தொலைக்காட்சி செய்தி நிறுவனம் (கேபிள் டி.வி.) தொகுத்து ஒளிபரப்பியது.

**— புரட்சிகரமாணவர் - இளைஞர்**
**முன்னணி, திருச்சி.**

### நக்சல்பாரி புரட்சியாளர்கள்:

## அமெரிக்கக் கைக்கூலிகளா? ஜனநாயகப் போராளிகளா?

சுதந்திரப் போராட்ட தியாகிகளைப் போல மூத்த நக்சல்பாரி புரட்சியாளர்களுக்கும் ஓய்வூதியத் தொகை அளிக்கப் போவதாக மே.வங்க 'இடது முன்னணி' அரசு அறிவித்துள்ளது. நக்சல்பாரிகளை ''ஜனநாயக இயக்கத் தியாகிகள்'' என்று குறிப்பிட்டு, மூத்த நக்சல்பாரிப் புரட்சியாளர்களை சுதந்திரப் போராட்டத் தியாகிகள் போல அங்கீகரிப்பதாகவும் கூறியுள்ளது. 1970-களில் நக்சல்பாரி புரட்சியாளர்களை ''அரை பாசிஸ்டுகள்'', ''சமூக விரோதிகள்'', ''அராஜகவாதிகள்'', ''இடது தீவிரவாத - குறுங்குழுவாதிகள்'', ''அமெரிக்க கைக்கூலிகள்'' என்றெல்லாம் அவதூறு செய்த போலி கம்யூனிஸ்டுகள்தான் இப்போது, ''ஜனநாயக இயக்கத் தியாகிகள் - போராளிகள்'' என்று பாராட்டுகின்றனர்.

பாசிசக் கொலைவெறியன் சித்தார்த்த சங்கர் ரேயின் காங்கிரசு ஆட்சியில் நக்சல்பாரி புரட்சியாளர்களை நரவேட்டையாடிய போது, அன்று அந்த பாசிச அடக்குமுறையை இடது-வலது போலி கம்யூனிஸ்டுகள் வாயளவில் கூடக் கண்டிக்கவில்லை. நக்சல்பாரி புரட்சியாளர்களையும் புரட்சியின் மீது பற்றுக் கொண்டு புறப்பட்ட நூற்றுக்கணக்கான மாணவர் - இளைஞர்களையும் சட்ட விரோதமாகக் கொட்டடியில் அடைத்துக் காங்கிரசு பாசிஸ்டுகள் சித்திரவதை செய்தபோது இப்போலிகள் வாயே திறக்கவில்லை. ''எனது மகன் எங்கே?'' என்று இப்புரட்சிகர இளைஞர்களின் பெற்றோர்கள் நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்து போராடிக் கொண்டிருந்தபோது, இப்புரட்டல்வாதிகள் அவர்களுக்கு சட்டரீதியாக உதவக்கூட முன் வராமல் ஒதுங்கிக் கொண்டனர்.

அவசரநிலை பாசிச ஆட்சியில் நடந்த இந்த நரவேட்டை - அடக்குமுறையையும் நக்சல்பாரிகளின் தியாகத்தையும் காட்டி ஓட்டுப் பொறுக்கி, மே.வங்கத்தில் ஆட்சியைப் பிடித்தது போலி கம்யூனிஸ்டு கூட்டணி. அதன் பிறகாவது கொலைகார போலீசு வெறியர்களைத் தண்டித்ததா? நிச்சயமாக இல்லை. அதற்கு மாறாக, நக்சல்பாரிகளை நரவேட்டையாடிய கொலைகார போலீசு அதிகாரிகளுக்குப் பரிசும் பதக்கமும் பதவி உயர்வும் அளித்து 'இடது முன்னணி' அரசு கௌரவித்தது.

அன்றைய ஒன்றுபட்ட நக்சல்பாரி கட்சியின் தலைவரான தோழர் சரோஜ் தத்தா, போலீசு குண்டர்களால் படுகொலை செய்யப்பட்டு கல்கத்தா நகரில் குப்பைத் தொட்டியில் வீசப்பட்டார். இக்கொடுஞ் செயலை எதிர்த்து பல்வேறு மனித உரிமை அமைப்புகள் இதுபற்றி விசாரணை செய்யக்கோரி பலமுறை போராடிய போதிலும், இன்று வரை 'இடது முன்னணி' அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதேபோல அன்றைய நக்சல்பாரி கட்சியின் பொதுச் செயலாளரான தோழர் சாரு மஜூம்தார், போலீசுக் காவலில் மர்மமான முறையில் கொல்லப்பட்ட நிலையில், அதுபற்றி விசாரணை செய்யவும் போலிகளின் ஆட்சி முன்வரவில்லை. மாறாக, கோப்புகள் காணாமல் போய்விட்டதாக இன்னமும் புளுகி வருகிறது.

இப்படி நக்சல்பாரி புரட்சியாளர்களைக் காட்டிக் கொடுத்து, நக்சல்பாரி புரட்சிகர இயக்கத்தையே ஒழித்துக் கட்ட பாசிச காங்கிரசோடு கள்ளக்கூட்டு சேர்ந்திருந்த இடது - வலது போலி கம்யூனிஸ்டுகள்தான், பதவிக்கு வந்த பிறகு கூட போலீசு அதிக்கிரமங்கள் பற்றி விசாரணை நடத்தக்கூட முன்வராத போலி கம்யூனிஸ்டுகள்தான், இன்று நக்சல்பாரி புரட்சியாளர்களை அவசரநிலை பாசிசத்துக்கு எதிரான ஜனநாயக இயக்கத் தியாகிகள் என்று கௌரவித்து ஓய்வூதியம் கொடுப்பதாக திடீர்க் கரிசனை காட்டுகிறார்கள்.

அனைத்து இடதுசாரி சக்திகளையும் ஐக்கியப்படுத்துவது என்ற பெயரில், நக்சல்பாரிகளையும் அரவணைத்துக் கொண்டு தமது ஓட்டு வங்கியை உறுதிப்படுத்தி விரிவாக்கிக் கொள்ளும் நோக்கத்தோடுதான் இந்த ஓய்வூதியத் திட்டத்தை மே.வங்க 'இடது முன்னணி அரசு' அறிவித்துள்ளது. ஏற்கனவே 'இடது முன்னணி'யின் செல்வாக்கு குறைந்து வந்துள்ளதோடு, அண்மைத் தேர்தலில் அதன் ஓட்டு விகிதமும் சரிந்துவிட்ட காரணத்தாலேயே, முட்டுக் கொடுத்து தூக்கி நிறுத்தும் முயற்சியாக இந்த ஓய்வூதியத் திட்டத்தை அறிவித்துள்ளது.

இத்திட்டத்தை ஏற்று அரசிடமிருந்து ஓய்வூதியம் பெறுவது, நக்சல்பாரி தியாகிகளுக்குச் செய்யும் மிகப் பெரிய துரோகமும் அவமானகரமானச் செயலுமாகும். நிலவுகின்ற அரசு எந்திரத்தைத் தூக்கியெறிவதை இலட்சியமாகக் கொண்ட நக்சல்பாரி புரட்சியாளர்கள், அரசாங்க ஓய்வூதியம் பெறுவதற்காகச் சமரசம் செய்து கொள்ளப் போவதில்லை. அதேசமயம் நக்சல்பாரி என்ற பெயரைக் கேடாகப் பயன்படுத்திக் கொண்டு ஓட்டுப் பொறுக்கக் கிளம்பி விட்ட போலி புரட்சியாளர்கள், ஓய்வூதியம் பெற்றுக் கொண்டு இடது - வலதுகளுடன் கூட்டணி கட்டிக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**முசுலிம் இளைஞனைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்ட 'குற்ற'த்திற்காக இந்து வெறியர்களால் கொல்லப்பட்ட இந்து இளம்பெண் பார்தி பரோட் (இடது). பார்தியை மணம் புரிந்த முசுலிம் இளைஞர் சலீம் - தனது தாயாருடன்.**





www.padippakam.com



## ஆப்கானிஸ்தானுக்கு தாலிபான் இந்தியாவுக்கு இந்துவெறியர்கள்

இந்து இளைஞன் ஒருவன், முசுலிம் பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்து கொள்ளலாம்; ஆனால் ஓர் இந்துப் பெண் முசுலிம் இளைஞனைக் காதலித்துத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. இதுதான் இந்துவெறியர்களின் எழுதப்படாத சட்டம். இதை மீறினால் என்ன கதி ஏற்படும் என்பதற்கு, குஜராத் மாநிலத்தில் அகமதாபாத் நகரில் பார்தி பரோட் என்ற இளம் பெண்ணின் கொலையே சாட்சியமாக உள்ளது.

பார்தி பரோட் என்ற 19 வயதான இந்து இளம் பெண், தனது அண்டை வீட்டைச் சேர்ந்த சலீம் ஷைக் என்ற 23 வயது இளைஞனைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். தமது பெற்றோரின் எதிர்ப்பை மீறி கடந்த ஜூலை 11-ந் தேதியன்று இசுலாமிய முறைப்படி திருமணம் செய்து கொண்ட அவர், திருமணச் சான்றிதழை பெற்றோருக்கு அனுப்பி வைத்து விட்டுத் தனது கணவருடன் வேறிடத்தில் குடியேறினார். இதைக் கண்டு ஆத்திரமடைந்த இந்துவெறியர்கள் போலீசை ஏவி சலீமின் தாயாரை அச்சுறுத்தி தொல்லை கொடுத்து வந்தனர். பார்தியை கடத்திச் சென்றதாக சலீம்மீது பொய் வழக்கு சோடித்த போலீசார், பார்தியை பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு மிரட்டினர். அதைத் தொடர்ந்து ஆகஸ்ட் 6-ந் தேதியன்று சலீமும் பார்தியும் சபர்மதி போலீசு நிலையம் வந்து தாங்கள் சுய விருப்பத்துடன் சட்டபூர்வமாகத் திருமணம் செய்து கொண்டுள்ளதை விளக்கினர். பார்தியும் தான் கடத்தப்படவில்லை என்பதையும், சலீமுடன்தான் வாழ்வேன் என்றும் உறுதியாகத் தெரிவித்தார். இருப்பினும் சலீமை விரட்டிவிட்டு, பார்தியிடம் விசாரணை செய்ய வேண்டும் என்று போலீசார் அவரைப் பிடித்து வைத்துக் கொண்டனர். அதே நேரத்தில் 200-க்கும் மேற்பட்ட இந்துவெறிக் குண்டர்கள் பார்தியை தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்று போலீசு நிலையத்தில் கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் சட்டரீதியாகப் பிரச்சினை ஏற்படும் என்பதாலும், அந்தப் பெண்ணை நிர்பந்தித்து மணமுறிவுக்குத் தள்ளவும் போலீசார் பார்தியை "விகாஸ் குருகுலம்" எனும் அரசு மகளிர் காப்பகத்தில் அடைத்தனர்.

மறுநாள் தன் தாயாருடன் பார்தியைச் சந்திக்க வந்த சலீமை, காப்பக அதிகாரிகள் விரட்டியடித்தனர். பின்னர் அவர் தனது வழக்கறிஞர் உதவியோடு சந்திக்க முயற்சித்த போது, பார்தியை "நாரி கேந்திரா" எனும் இன்னொரு மகளிர் காப்பகத்துக்கு மாற்றி விட்டதாகக் கூறினர். அங்கு சென்று தேடியபோது, இந்து மகாசபை அலுவலகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக அறிவித்தனர். இதற்கிடையே சலீமின் வழக்கறிஞர், பார்தியை அவரது கணவரிடம் ஒப்படைக்கக் கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். ஆனால், இந்து மகாசபை அலுவலகத்தில் இளம்பெண் பார்தி குளியலறையில் எரிக்கப்பட்ட பிணமாகக் கிடந்தார். முசுலிம் இளைஞனைத் திருமணம் செய்த குற்றத்திற்காக, பார்தியைக் கடத்தி வந்து, இந்துவெறியர்கள் நடத்திய கொடூரக் கொலையே இது!

இருப்பினும் பார்தி உடலெங்கும் மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு தற்கொலை செய்து கொண்டதாக இந்துவெறியர்கள் கூசாமல் புளுகி வருகின்றனர். அகமதாபாத் நகரில் நெரிசல் மிகுந்த பகுதியிலுள்ள இந்து மகாசபைக் கட்டிடத்திலிருந்து புகை மூட்டம் வந்ததை யாரும் பார்க்கவில்லை; தீயில் சிக்கிய பெண்ணின் அலறலைக் கேட்கவுமில்லை; இந்து மகாசபை அலுவலகத்தில் மண்ணெண்ணெய் பீப்பாய் வைத்திருக்க அடிப்படையுமில்லை. அரசு காப்பகத்திலிருந்து சட்டவிரோதமாக பார்தியை இழுத்து வந்து, இந்துமகா சபை அலுவலகத்தில் அடித்துக் கொன்று மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்திவிட்டு இந்துவெறி குண்டர்கள் இந்து தர்மத்தை நிலைநாட்டியுள்ளனர். இந்துப் பெண்கள் முசுலிம்களைத் திருமணம் செய்தால் இந்த கதி தான் ஏற்படும் என்று இப்படுகொலை மூலம் இந்து வெறியர்கள் மறைமுக எச்சரிக்கை விடுத்துள்ளனர். மதவெறிக் காட்டுமிராண்டிகளின் அட்டூழியங்களுக்கு ஆப்கானில் தாலிபான்; இந்தியாவில் இந்து வெறியர்கள்!

## அமெரிக்காவில் வளர்வது ஆலைத் தொழில் அல்ல; சிறைச்சாலைத் தொழில்!

ஏகாதிபத்திய உலகின் கோட்டையான அமெரிக்கா, தொழில் வளமிக்க பணக்கார நாடு. அங்கே என்ன தொழில் இப்போது செழித்தோங்குகிறது தெரியுமா? சிறைச்சாலைத் தொழில்! சிறைச்சாலைகளைக் கட்டியமைப்பது, நிர்வகிப்பது, அற்பமான திருட்டுகளில் ஈடுபடும், வேலையிழந்த - வாழ்விழந்த உழைப்பாளிகளையும் போதை மருந்து விற்போரையும் சிறையிலடைத்துக் கொத்தடிமைகளாக்கி வேலை வாங்குவது என்பதே அமெரிக்காவில் இலாபகரமானத் தொழிலாக வளர்ந்துள்ளது. அங்கே சிறைச்சாலைகள் தனியார்மயமாக்கப்பட்டுள்ளதால் ஏகபோகப் பெருமுதலாளிகள் இதிலே கொழுத்த ஆதாயமடைகிறார்கள். இத்தொழிலுக்கு அரசாங்கம் வரிவிலக்கு அளித்துள்ளதால் இரட்டிப்பு இலாபத்தைக் குவிக்கிறார்கள். அமெரிக்க ஏகபோக முதலாளிகளின் பங்குச் சந்தை மையமான வால் தெருவில் சிறைத் தொழில் பங்கு பத்திர விற்பனை பரபரப்பாகச் சூடுபிடிக்குமளவுக்கு, இன்று சிறைத் தொழில் செழித்து வளர்ந்துள்ளது.

தமிழகத்தின் ஏர்வாடியில் இரும்புச் சங்கிலியால் கட்டி வைக்கப்பட்ட மனநோயாளிகள் தீ விபத்தில் கருகிப் போன கொடுமையைக் கண்டு நாகரீக உலகமே காறி உமிழ்கிறது. ஆனால், நாகரீக ஏகாதிபத்திய நாடான அமெரிக்காவில் நல்ல மனநிலையில் உள்ள சிறைக் கைதிகளின் கால்களில் இரும்புச் சங்கிலி பூட்டி, அடித்து உதைத்து வேலை வாங்கும் கொடுமை கேள்விமுறையின்றித் தொடர்கிறது. இத்தகைய கொத்தடிமைச் சிறைக் கைதிகளை "சங்கிலிக் குழுவினர்" என்று குறிப்பிடுகின்றனர். சிறைக் கைதிகளின் கால்களில் இரும்புச் சங்கிலியைத் தொடராகப் பிணைத்து, குழுக்களாகப் பிரித்துச் சாலையோர முட்புதர்களை வெட்டி தூய்மைப்படுத்துதல், நெடுஞ்சாலைகளில் குப்பைகளை அள்ளுதல், பாறைகளை உடைத்தல் என அடிமைக்காலம் போலவே அமெரிக்க ஏகபோக முதலாளிகள் சிறைக் கைதிகளை வேலை வாங்குகின்றனர். அமெரிக்காவின் 4 மாநிலங்களில் இத்தகைய கொத்தடிமைச் சிறைத் தொழில் சட்டப்பூர்வமாகவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் ஏறத்தாழ 70,000 கைதிகளை உள்ளடக்கிய பல்வேறு சிறைச்சாலைகளை பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களே நிர்வகித்து இயக்கி வருகின்றன. இந்நிறுவனங்கள் கடந்த ஓராண்டில் மட்டும் சிறைத் தொழில் மூலம் 1000 கோடி டாலருக்கு மேல் (ஏறத்தாழ ரூ. 45000 கோடி) இலாபமீட்டியுள்ளன. இது தவிர சிறைச்சாலையில் நிறுவப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் பொருளுற்பத்தி மூலம் 1800 கோடி டாலருக்கு மேல் இலாபத்தைக் குவித்துள்ளன. சிறைச்சாலைகளைக் கட்டுவது, நிர்வகிப்பது மட்டுமின்றி, சிறைச்சாலைக்கான மின்சாரம், தொலைபேசி, குடிநீர், மருத்துவம் முதலான இதர துறைகள் மூலமாகவும் ஏகபோக முதலாளிகள் பல கோடிகளைக் குவித்துள்ளனர்.

அமெரிக்க ஏகபோக முதலாளிகளும், பன்னாட்டு நிறுவனங்களும் கொழுக்கச் சிறைச்சாலைகள் பெருக வேண்டும். சிறைச்சாலைகள் நிரம்பி வழிய சிறைக் கைதிகள் பெருக வேண்டும். கைதிகள் பெருக வேண்டுமென்றால் குற்றங்கள் அதிகரிக்க வேண்டும். மொத்தத்தில் அமெரிக்க ஏகபோக முதலாளிகள் கொள்ளை இலாபமீட்ட அமெரிக்க சமுதாயமே குற்றவாளியாக வேண்டும். இதுதான் நாகரீக ஏகாதிபத்திய உலகின் ஜனநாயகம்!

www.padippakam.com

## ..நலையங்கம் தொடர்ச்சி

... தலைமைப் பொறுப்பிலுள்ளவர். அதனால், ஊழலுக்காகத் ...ன பெற்ற ஜெயலலிதா, அரசு பதவியில் நீடிப்பதால் ... தீர்ப்பில் கூறப்பட்டதை விடப் பன்மடங்கு பாதிப்புகள், ...வுகள், கேடுகள், விளைவித்துக் கொண்டிருக்கிறார் ...ம் உச்சநீதி மன்றத்துக்குத் தெரியும். தெரிந்தும், ஜெயலலிதா ...ச்சர் பதவியில் நீடிப்பதற்கு இடைக்காலத் தடை விதிக்கக் ...ரும் மனுவையும் உடனடியாக விசாரித்துத் தீர்ப்புக் கூறாமல் ...சநீதி மன்றம் இழுத்தடிக்கிறது. முதலமைச்சர் பதவியை முறை ...கேடாகப் பயன்படுத்தி, ஆறுமாதத்துக்குள் தண்டனை விதிக்கப் ...ட்ட வழக்குகளில் இருந்து தப்பித்து, தேர்தல்களில் போட்டியிட்டு ...டப்பேரவை உறுப்பினராகி விடும் வாய்ப்புண்டு. இதற்கான ...ல அவகாசம் வழங்கும் வகையில்தான் உச்சநீதி மன்றம் நடந்து ...கொள்கிறது.

ஏற்கனவே, வாஜ்பாயி தலைமையிலான அரசில் ஜெயலலிதா கட்சி ...ங்கேற்றபோது, அவரது எடுபிடி தம்பிதுரை சட்ட அமைச்ச ராக்...பட்டார். அப்போது ஜெயலலிதா மீது மைய அரசு தொடுத் ...துள்ள வழக்குகள் நடத்தும் வழக்கறிஞர்களை ஒட்டு மொத்தமாக மாற்றி ஜெயலலிதா ஆதரவாளர்களை தம்பிதுரை நியமித்தார். பல வழக்குகளையும் முடக்குமாறு விசாரணை அதிகாரிகளை மாற்றினார். ஜெயலலிதா வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன் றங்களைத் திடீரென்று கலைக்கும் உத்திரவு போட்டார். சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியாக இருந்த, சிங்கப்பூர் புகழ் தங்கராசுவை ...ந்து, அவர் ஓய்வு பெறுமுன் சில வழக்குகளை இரத்து செய்யும் படி ...செய்வதில் ஜெயா-சசி கும்பல் வெற்றி பெற்றது. அப்போது தி.மு.க. ஆட்சியில் இருந்ததால் மீண்டும் மீண்டும் வழக்காடி ஜெயா மீதான வழக்குகளை உயிரோடு வைத்திருந்தனர். ஆனால், இப்போது ஜெயலலிதாவே மீண்டும் முதலமைச்சராகி விட்டதால், ...வில் அவர் மீதான ஊழல் வழக்குகளை விசாரிக்கும் குற்றப் பிரிவு அதிகாரிகளை மாற்றித் தனது எடுபிடிகளை நியமித்தார். பிறகு அரசு வழக்கறிஞர்களாகத் தனது கட்சிக்காரர்களையே நிய மித்தார். அதாவது, இப்போது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக அவரது அடியாட்களே விசாரணை அதிகாரிகளாகவும், வழக்கறி ஞர்...ளாகவும் உள்ளனர். அடுத்து சாட்சியங்களைக் கலைப்பது, வழக்கு ஆவணங்களில் தில்லுமுல்லு செய்வதிலும் ஜெயலலி தாவின் ஆட்கள் ஈடுபட்டுள்ளனர். பல (புதிய) அரசு சாட்சியங்கள் "பல்டி" அடித்து விட்டனர். நிலக்கரி ஊழல் வழக்கில் 17 அரசு சாட்சியங்...ள் நீக்கப்பட்டனர். குறிப்பாக, டான்சி வழக்கில் ஜெயா வுக்கு ...ராகச் சாட்சியமளித்த அதிகாரியை ஓய்வு பெறுவதற்கு முதல்... பதவி நீக்கம் செய்து, ஓய்வுக்கால வசதிகளைப் பறிப் பதாக மிரட்டிய பிறகு, அவர் பல்டி அடித்து ஜெயாவுக்கு ஆதரவா க வாக்குமூலமளித்துள்ளார்.

அதேபோல, டான்சி வழக்கில் ஜெயா மேல்முறையீட்டை விசா ரிப்பதிலும் சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதிகள் பலருடைய நடவடிக்கைகள் - தீர்ப்புகள் மீது சந்தேகங்கள் எழுப்பப்படுகின் றன. தண்டனை பெறுவதற்கு முன்பு வழக்குகளை இழுத்தடித்து, காலத்தை விரயமாக்குவதில் ஜெயாவுடன் ஒத்துழைத்த உயர்நீதி மன்றம், தண்டனை பெற்ற பிறகு, அவர் தேர்தலில் போட்டியிடுவ தற்கு வசதியாக மேல் முறையீட்டு வழக்குகளை அவசர அவசர மாக முடிப்பதில் அக்கறை காட்டுகிறது. முதலமைச்சருக்கு எதிரான வழக்குகளை நடத்தும் வழக்கறிஞரை அவரே நியமிக்கக்கூடாது, நீதிமன்றமே நியமிக்க வேண்டும்; வழக்கை மாநில அரசு அதிகா ரிகள் விசாரிக்கக் கூடாது, சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என்று இரு வழக்குகளை தி.மு.க.வினர் தொடுத்தனர். முதல் வழக்கில் எதிர்த் தரப்பினருக்கு பதில் தருவதற்கு ஆறுவார கால அவகாசம் கொடுத்த நீதிமன்றம், அடுத்த சில வாரங்களில் பழைய தி.மு.க. அரசு வழக்கறிஞரையே நியமித்தது. சி.பி.ஐ. விசாரணை கோரும் வழக்கு மீது தீர்ப்புக் கூறாமலேயே ஜெயாவின் மேல் முறையீட்டை விசாரிக்க ஆரம்பித்து விட்டது; ஒன்றுக்கு மேலான நீதிபதிகள் விசா ரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்து விட்டது. வழக்கு, ஆவணங்களைப் படிப்பதற்கும், அவகாசமும் மறைக்காமல் அனைத்து ஆவணங்களைப் பெறவும் ஜெயாவின் எதிர்த்தரப்பு வழக்கறிஞர் வைத்த கோரிக்கையைத் தடாலடியாக நிராகரித்தது. இப்படிப்பட்ட பல பாரபட்சமான நடவடிக்கைகள், தீர்ப்புகளுக்குப் பின்பலமாக இருக்கும் உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி, வேறு மாநிலத்துக்கு மாற்றப்பட்ட பிறகும் மரபுக்கு மாறாக இடமாறிப் போவதைத் தவிர்த்து வருகிறார். இதற்கு எதிரான வழக்கை விசா ரிப்பதற்கான நீதிபதியையும் இவரே நியமிக்கிறார்.

இவ்வாறு உச்சநீதி மன்றத்திலும், உயர் நீதிமன்றத்திலும் ஜெய லலிதாவுக்கு ஆதரவான நீதிபதிகள் செயல்பட்டு, அரசு அமைப்பின் பிற இயந்திரங்களைப் போலவே நீதித்துறையும் சீர ழிந்து விட்டதை வெளிப்படையாக நிரூபிக்கின்றனர். இதேபோல பல வழக்குகளில் பா.ஜ.க., காங்கிரசு போன்ற ஆளுங்கட்சிக ளுக்கும் தரகு அதிகார வர்க்க முதலாளிகளுக்கும் ஆதரவாகப் பல நீதிபதிகள் செயல்படுவதை நிரூபிக்க முடியும். (போஃபர்ஸ் ஆயு தபேரம், அயோத்தி பாபர் மசூதி இடிப்பு, அம்பாணி - இப்படிப் பலவும் உள்ளன). ஆகவே, நீதித்துறை மட்டும் நடுநிலை வழுவா தது, மக்கள் நம்பிக்கைக்குரியது என்பதும் கூட பொய்யானதுதான். ஜெயலலிதா விவகாரத்தில் இந்த உண்மை அப்பட்டமாக வெளிப் படுகிறது.

## 6-ஆம் பக்கத் தொடர்ச்சி

...இலட்சியம் என்று வரும் இளம் பத்திரிகை யாளர்கள், நிர்வாகத்தாலும், மூத்த பத்திரி கையாளர்களாலும் தொழிலுக்குப் பழக்கப் படுத்தப்படுகின்றனர்.

கோஷம் போடக் கூட ஆளில்லாத கட்சிகள் நடத்தும் பத்திரிகையாளர் சந்திப்பு கூட்டங்களுக்கு விழுந்தடித்துக் கொண்டு ஓடும் பத்திரிகையாளர்கள், ம.க.இ.க. போன்ற அமைப்புகள் அழைக்கும் கூட்டங்களுக்குப் போவ தில்லை என பத்திரிகையாளர் ஞாநி குறிப் பிட்டிருக்கிறார். இதற்குக் காரணம், பத்திரி கையாளர்களிடம் பரவிக் கிடக்கும் "கவர் கலாச்சாரம்".

முதலாளித்துவ செய்தி ஊடகங்களில் வேலை பார்க்கும் பத்திரிகையாளனின் செய்தி சேகரிக்கும் ஆர்வத்தை கவரின் கனம் தீர்மானிக்கிறது. அல்லது விரைவில் பெயரெடுத்து விட வேண்டும் என்ற அவனின் தொழில் ஆர்வம் தீர்மானிக்கி றது. ஒன்று கவர் கலாச்சாரத்தில் மூழ்கி அவன் ஊழல்மயமாகிறான்; இல்லை யேன்றால், சமூக அக்கறையற்ற "தொழில் முறை" பத்திரிகையாளனாகக் காலத்தை ஓட்டுகிறான்.

"வீடு கட்ட கடன் கொடுத்து பத்திரிகை யாளர்களின் கோபத்தைத் தணித்து விடலாம்" என ஜெயா திட்டம் போடு கிறார். எந்த ரவுடிக் கும்பலால், எந்த போலீ சாரால் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டார் களோ, அதே ரவுடி கும்பலின் தலைவனை, போலீசு அதிகாரியின் பேட்டியை பத்தி ரிகை நிர்வாகங்கள் வெளியிடுகின்றன. இப்படி ஜெயாவாலும், பத்திரிகை முதலா ளிகளாலும் பத்திரிகையாளர்களின் தன்மானம் விலை பேசப்படுவதை எதிர்த்து பத்திரிகையாளர் சங்கம் ஒரு துரும்பைக் கூட அசைக்கவில்லை. தன்மானம் உடையவனால்தான் ஜனநாயா கத்திற்காக இறுதி வரைப் போராட முடியும்.

பத்திரிகையாளர்கள், தங்களை ஜெயா கருணாநிதியைப் போல மரியாதையாக நடத்த வேண்டும் எனக் கோரிப் போராடுகி றார்களா அல்லது முரணற்ற சனநாயகத்திற் காகப் போராடுகிறார்களா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். முரணற்ற சனநா யகத்திற்காகப் போராடுவதென்றால் அவர்கள் ஜெயாவையும், போலீசையும் எதிர்த்து மட்டுமல்ல, தங்களின் முதலாளி களையும் எதிர்த்துப் போராட வேண்டியி ருக்கும். ஏனென்றால், போலீசிடம் அ... பட்ட பத்திரிகையாளனும், அதைச் செய்... யாக்கி வெளியிட்டு காசு பார்க்கும் முதல ளியும் போலீசை எதிர்த்த போராட்டத்தி கைகோர்த்துக் கொண்டு போராட மு யாது. இருவரின் வர்க்க நலனும் வே வேறானது.

• செல்வ...

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## தாராளமயமும் தற்கொலைச் சாவுகளும்

மும்பய் நகரில் மூடிக் கிடக்கும் மபத்லால் மில்லைச் சேர்ந்த இரு தொழிலாளர்கள் சமீபத்தில் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டனர். அம்மில்லில் வேலை பார்த்து வந்த ஆனந்த் சாந்தாராம் என்ற தொழிலாளி, தனது மனைவியோடு விஷம் குடித்துத் தற்கொலை செய்து கொண்டார். 23 வருடங்களாக செஞ்சுரி மில்லில் வேலை பார்த்து வந்த உத்தம் போப்டே, வேலை பறி போனதால் தீ வைத்துக் கொண்டு வெந்து கருகி இறந்து போனார். இப்படி மும்பய் நகரில் மட்டும், கடந்த எட்டு மாதங்களுக்குள் தற்கொலை செய்து கொண்டு இறந்து போன பஞ்சாலைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை பன்னிரெண்டைத் தொட்டுவிட்டது. ஆலை மூடலும், விருப்ப ஓய்வூதியத் திட்டமும் தான் இத்தற்கொலைகளுக்குக் காரணம் எனத் தொழிலாளர்கள் கூறுகிறார்கள். ஆனால், தாராளமயத்தை நடைமுறைபடுத்தும் மாநில அரசோ, இத்தற்கொலைகளை 'விபத்து' எனப் பூசி மெழுகுகிறது.

## தொழிற் கடனா? பகற் கொள்ளையா?

மோதி, சிங்கானியா உள்ளிட்ட பல தரகு முதலாளிகள், பொதுத்துறை வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகை 53,000 கோடி ரூபாய் என்ற உண்மை கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அம்பலமானது. இம்மோசடிப் பேர்வழிகளின் கழுத்தில் துண்டைப் போட்டு கடனை வசூலிக்க வக்கற்ற இந்திய அரசோ, கடந்த இரு ஆண்டுகளில் 8245.78 கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்து, சலுகை அளித்துள்ளது. இச்சலுகைகளுக்குப் பின்பும் கூட, தரகு முதலாளிகள் வங்கிகளுக்குக் கொடுக்க வேண்டிய கடன் தொகை குறையவில்லை. கடந்த ஆண்டு முடிய 53294 கோடி ரூபாயாக இருந்த முதலாளிகளின் கடன் பாக்கி, இந்த ஆண்டு 54,773 கோடி ரூபாயாக அதிகரித்து விட்டது!

## மாட்டுக் கறியும் இந்து மதவெறியும்

தில்லிப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி வரும் வரலாற்றுப் பேராசிரியர் ஜா, "புனித பசு: இந்திய உணவு மரபில் மாட்டுக்கறி" என்ற நூலை எழுதியிருக்கிறார். இந்த நூலில், அவர், "மாட்டுக் கறி உண்ணும் பழக்கம் முசுலீம்களால் இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்டதல்ல; அது பழங்காலந்தொட்டே இருந்து வரும் உணவுப் பழக்கம்தான்" என்பதற்கான வரலாற்று ஆதாரங்களைத் தொகுத்திருக்கிறார். இந்தியப் பிராணிகள் நல வாரியத்தின் தலைவராக இருக்கும் இந்து மதவெறி நீதிபதி லோதா, "நமது மத உணர்வுகளுக்கு எதிரான அணுகுண்டு இது" என இந்த வரலாற்று நூலைச் சாடியிருப்பதோடு, இதனைத் தடை செய்யக் கோரி அத்வானியைத் தூண்டி விட்டு வருகிறார். மேலும் ஜெயின் சேவா சங்கம் என்ற மதவாத அமைப்பு, இந்த நூல் இந்து, புத்த, ஜைன மத உணர்வுகளுக்கு எதிரானது என்று கூறி, இந்த நூலைத் தடை செய்யக் கோரி வழக்கு தொடுத்தது. இந்த மதவாதத்தை ஏற்றுக் கொண்ட ஹைதராபாத் நீதிமன்றமும், இந்த நூலை வெளியிடுவதற்கு இடைக்காலத் தடை விதித்துவிட்டது.

மாட்டுக்கறி உணவுப் பண்பாடு பற்றிய வரலாற்று ஆய்வு நூலை எழுதிய பேராசிரியர் ஜா.



## ஈழம் இன்னுமொரு வியட்நாமா?

ஈழத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போரை எந்த வழியிலாவது பூண்டோடு ஒழித்துவிடத் துடிக்கும் சந்திரிகா அரசு, அதற்காக ரசியாவிடமிருந்து "ப்ரோ-ஏ" என்ற இரசாயன ஆயுதங்களை வாங்கிக் குவித்து வருகிறது. "இந்த ராக்கெட் வெடிகுண்டு, அது வெடிக்கும் இடத்தில் மட்டுமல்லாமல், அவ்விடத்தைச் சுற்றியிருக்கும் மனிதர்களையும், பிற உயிரினங்களையும், மரம், செடி, கொடிகளையும் தீக்கிரையாக்கி அழித்து விடும்" என விடுதலைப் புலிகள் கூறியிருக்கின்றனர். சந்திரிகாவோடு கூட்டணி வைத்துள்ள ஈழத் தமிழர் அமைப்புகள் கூட, இந்த இரசாயன ஆயுதத்தை போரில் பயன்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். சந்திரிகா அரசு, இந்த ராக்கெட் வெடிகுண்டு இரசாயன ஆயுதம் இல்லை எனச் சாதித்தாலும், இந்த ஆயுதத்தை ரசியா செசன்யப் போரில் பயன்படுத்தியதை அனைத்துலக மனித உரிமை அமைப்புகள் எதிர்த்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## மயிர் விவகாரம்: மாணவனுக்கு நேர்ந்த கதி!

சண்டிகர் நகரைச் சேர்ந்த சரண்ஜித் சிங், பத்தாம் வகுப்பு படிக்கும் சீக்கிய மதத்தைச் சேர்ந்த மாணவன். சரண்ஜித், தனக்கு அடிக்கடி தலைவலி வந்ததால், மருத்துவரின் ஆலோசனைப் படியும், தனது பெற்றோரின் சம்மதத்தோடும், சீக்கிய மத முறைப்படி வளர்ந்திருந்த தனது தலைமுடியை, "கிராப்"பாக வெட்டிக் கொண்டான். ஆனால், அவனது பள்ளி நிர்வாகமோ, மதவெறி காரணமாக இந்தச் சாதாரண "மயிர் விவகாரத்தை", சீக்கிய மதத்திற்கு எதிராக சரண்ஜித் செய்த கலகமாக ஊதிப் பெருக்கி, அச்சிறுவனை வகுப்பிற்குள் நுழையக் கூடாது எனத் தடை விதித்து விட்டது. மேலும், அம்மாணவனை வேறொரு பள்ளியில் சேர்த்து விடும்படி சரண்ஜித்தின் பெற்றோர்களை நிர்ப்பந்தித்து வருகிறது. மேலும், சரண்ஜித்திற்கு வழங்கப்பட்டுள்ள தண்டனை, சீக்கிய மதக் கட்டளைகளை மதிக்கத் தவறும் பிற மாணவர்களுக்கு விடப்படும் ஓர் எச்சரிக்கை எனக் கொக்கரித்து வருகிறது.

## பீதியில் ஏகாதிபத்தியவாதிகள்

இத்தாலி நாட்டின் ஜெனோவா நகரில் நடந்த ஜி-8 நாடுகளின் மாநாட்டை எதிர்த்து நடந்த போராட்டங்களையடுத்து, ஏகாதிபத்திய நாடுகளும், நிறுவனங்களும் பெரும் பீதியில் உறைந்து போயுள்ளன. இத்தாலி அரசு, அந்நாட்டுத் தலைநகர் ரோம் நகரில் நடைபெறவிருந்த உலக உணவு மாநாட்டை ஏதாவதொரு ஆப்பிரிக்க நாட்டில் நடத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளது. நேப்பிள்ஸ் நகரில் நடைபெறவிருந்த "நேட்டோ" மாநாட்டையும், அக்டோபரில் நடைபெறவிருந்த ஐரோப்பிய ஒன்றிய மாநாட்டையும் இத்தாலியில் நடத்த முடியாது எனக் கூறிவிட்டது. இது ஒருபுறமிருக்க, உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் தங்களின் வருடாந்திர மாநாட்டை ஒரு வார காலம் நடத்தவிருந்ததை, இரண்டு நாட்களாக சுருக்கிக் கொண்டு விட்டன. இந்த மாநாடு வாஷிங்டனில் நடைபெறும்பொழுது, 50,000-க்கும் மேற்பட்ட போராளிகள் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கும் இந்த நிறுவனங்கள், இந்த இரண்டு நாள் மாநாட்டின் பாது காப்புக்காக 180 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளன.

Published and Owned by R. SHANMUGA RAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, IInd Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM
(TAMIL FORTNIGHTLY)

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS
FOR INDIA UNDER NO. 42648/85

Regd. No. TN/Chief.PMG-544/2001

# இதுதான் இன்றைய இந்தியா

தமிழகத்தில் 'புரட்சி'த் தலைவியின் ஆட்சி நடப்பதாலேயே, அவர் அறிவிக்கும் ஒவ்வொரு திட்டமும் புரட்சிகரமானதாக இருந்திடுமா என்ன? ஆனாலும், சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கப் போவதாகத் தம்பட்டம் அடித்துக் கொண்டு, அவர் அறிவிக்கும் மிகச் சாதாரணமான, அற்பமான திட்டங்கள் கூட, கவர்ச்சி அரசியலின் காரணமாக, புதுமையானதாக, புரட்சிகரமானதாக விளம்பரப்படுத்தப்படுகிறது. அப்படிப்பட்ட 'புதுமை' திட்டமான பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், ஜெயாவின் ஆட்சியில் தனது இரண்டாவது சுற்றைத் தொடங்கியிருக்கிறது. அத்திட்டத்தின்படி, தமிழக அரசு தத்தெடுத்த பெண் குழந்தைகளை ஜெயா கொஞ்சி மகிழுவது தான் இந்தப் படம்.

வரதட்சணையை ஒழிக்காமல், அதற்குக் காரணமான ஆணாதிக்கத்தை ஒழிக்காமல், எப்படியாவது, யாரிடமாவது பிடித்துத் தள்ள வேண்டிய சுமையாகப் பெண்களைப் பார்க்கும் பிற்போக்குத் தனத்தை ஒழிக்காமல், பெண் சிசுக் கொலைகளை ஒழித்துவிட முடியாது. ஆனால் ஜெயா, இதையெல்லாம் ஒழிக்காமலேயே, ''தொட்டில் குழந்தைகள்'' என்ற மந்திரக் கோலின் மூலம் பெண் சிசுக் கொலையை ஒழித்து விட முடியும் என்று நம்மை நம்பச் சொல்கிறார்.

இதோ இந்தப் படத்தில் இருக்கும் பெண்ணின் பெயர் கருப்பாயி. உசிலம்பட்டிக்கு அருகில் உள்ள கட்டக்காமன் பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர். தனக்குப் பிறந்த மூன்றாவது பெண் குழந்தையைக் கொன்றுவிட்ட காரணத்தால், இவருக்கு 1994-ஆம் ஆண்டு நீதிமன்றம் ஆயுள் தண்டனை கொடுத்தது. தற்பொழுது, பிணையில் வெளியே வந்திருக்கிறார்.

இவர் செய்த கொலைக்காக, நீதிமன்றம் மட்டும் இவரைத் தண்டிக்கவில்லை. கிராம மக்களும் இவரை ஊரை விட்டு ஒதுக்கி வைத்துத் தண்டிக்கின்றனர். சொந்த அண்ணன் - தம்பி, நெருங்கிய உறவினர்கள் கூட இவரிடம் பேசுவதில்லை. அறியாமையில் செய்த குற்றத்தினால் இன்று இவர் நடைப்பிணமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

மாட்டை விற்று, நிலத்தை விற்று, வீட்டை அடமானம் வைத்து, வழக்கு நடத்தியதால், இன்று



இவரது குடும்பத்தை வறுமை பிடித்தாட்டுகிறது. ஒருபுறம் வரதட்சனை கொடுக்க முடியாத அளவு வறுமை; இன்னொருபுறம் கொலைக் குற்றவாளி என்ற பட்டம். இதனால் இவரது மூத்த மகளைத் திருமணம் செய்து கொடுப்பதே பெரும் திண்டாட்டமாய்ப் போனது.

இந்த வறுமையின் ஊடாகத்தான் அவர் தனக்குப் பிறந்த நான்காவது பெண் குழந்தையை (கருப்பாயியின் அருகில் நிற்கும் சிறுமி) வளர்த்து வருகிறார். அவர் நினைத்திருந்தால் இந்தப் பெண் குழந்தையை அரசுத் தொட்டிலில் கொண்டு போய் போட்டிருக்கலாம். ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. வறுமையினூடாகப் போராடி இவளை வளர்ப்பதை, தான் செய்த குற்றத்திற்கான பரிகாரமாகக் கூடக் கருதியிருக்கலாம். அறியாமையில் செய்துவிட்ட குற்றத்திற்காகத் தான் பட்ட அவமானங்கள், அதனால் ஏற்பட்ட மனவலியைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் வெடித்து அழுத அவர், அழுகையினூடாகக் கேட்கும் கேள்வி, ''நான் மட்டும்தான் குற்றவாளியா?''

வறுமையின் காரணமாக, அறியாமையின் காரணமாக பெண் குழந்தைகளைக் கொன்றுவிடும் தாய்மார்களுக்கு ஆயுள் தண்டனை கொடுக்கலாம் என்றால், வரதட்சணை போன்ற பெண்ணடிமைத்தனங்களைப் போற்றிப் பாதுகாத்து வரும் ஆளுங் கும்பலுக்கு தூக்கு தண்டனையே தரலாம். ஆனால், அவர்களோ தொட்டில் குழந்தை என்ற அற்பமான திட்டத்தை அறிவித்துவிட்டு, நியாயவா னைப் போலத் தப்பித்துக் கொள்கிறார்கள். இந்த ஒரு தலைப்பட்சமான நீதியை இன்னும் எத்தனை நாள் நாம் பொறுத்துக் கொள்வது?

